# உதயன்

வானிலை
கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 183 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 15, வெள்ளிக்கிழமை 29.05.2015


## யாழ். நகர கழிவகற்றல் பொறிமுறை பணிகள் டிசெம்பரில்

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் ஒரு பகுதியான யாழ். நகரத்தின் கழிவகற்றும் திட்டத்திற்கான பணிகள் டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. கழிவகற்றலுக்கான நிலத்தடிக் குழாய்களைப் பொருத்தும் பணிகளே முதற்கட்டமாக ஆரம்பமாக உள்ளன.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டது. இரணைமடு குளக்கட்டைப் பலப்படுத்துதல், மருதங்கேணியில் இருந்து கடல் நீரை நன்னீராக்கிக் கொண்டு வந்து விநியோகித்தல், யாழ். நகரத்திற்கான கழிவகற்றல் பொறிமுறையை உருவாக்குதல் ஆகிய மூன்று திட்டங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. கட்டம் கட்டமாக இந்தத் பக்.24

# அ’புரம் சிறையிலுள்ள 130 பேரையும் நேற்றுப் பார்வையிட்டது கூட்டமைப்பு

## 36 மாணவர்களையும் பிணை எடுக்க முயற்சிப்பதாக உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 மாணவர்கள் உள்ளிட்ட 130 பேரையும் தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 36 மாணவர்களில் அதிகமானோர் பாடசாலை மாணவர்கள் என்று அவர்கள் தெரிவித்தனர். ஏனையோர் பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள்.

மாணவர்களின் நலன்கருதி அவர்களை முன்னுரிமை அடிப்படையில் பிணையில் விடுவிப்பதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய சந்திப்பில் உறுதியளித்துள்ளனர்.

புங்குடுதீவு மாணவி வக்கிரமான கொலையாளிகளால் கோரமாகக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கடந்த 20ஆம் திகதி யாழ். நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற வளாகம் பக்.24

## இராணுவத்தை அகற்றும் பேச்சுக்கே இடமில்லை

### அமைச்சர் ராஜித திட்டவட்டம்

கொழும்பு, மே 29

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் மட்டுமன்றி தெற்கு மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் இராணுவம் கடமையாற்றி பக்.24

# பிரதமர் பதவியிலிருந்து ரணிலைத் தூக்க முயற்சி

## ஜூன் 9இல் நாடாளுமன்று வருகிறது நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, மே 29

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அடுத்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற முயற்சிக்கப் போவதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

“ஜூன் 9ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் ரணிலால் பிரதமர் பதவியில் நீடிக்கமுடியாது" - என்றார் அளுத்கமகே.

“புதிய அரசில் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள் சிலரும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர். ஜனாதிபதி மைத்திரிக்கு அறிவித்ததன் பின்னரே ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்போம். இதையடுத்து, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் அல்லது எமது பிரதமர் ஒருவரை நியமிக்கவேண்டி வரும்" என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார் அளுத்கமகே. அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் 9ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள அரசுக்கும் பிரதமருக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில், நேற்று (புதன்கிழமை) இரவுவரையில் பக்.24

## 4 மாதங்களில் வடக்கில் பாலியல் கொடுமை அதிகம்

### 35 முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம், மே 29

கடந்த 4 மாதங்களில் பாலியல் கொடுமைகள் தொடர்பில் 35 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பக்.24

## பாலியல் வன்கொடுமையை தடுக்க பரந்தனில் நடவடிக்கை

### விழிப்புக் குழு, கல்விக் குழு என்பன அமைக்கப்பட்டன

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி மாவட்டம் பரந்தனில் 6 வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமையை அடுத்து, இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக பொலிஸார், ஊர் மக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் அடங்கிய பக்.24

## கப்டனைக் கொன்ற சிப்பாய்க்குத் தூக்கு

### நேற்று விதித்தது யாழ். மேல் நீதிமன்று

யாழ்ப்பாணம், மே 29

விடுமுறை வழங்காததோடு, இடமாற்றம் செய்ய முற்பட்ட இராணுவக் கப்டனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சிப்பாய்க்கு யாழ். மேல்நீதிமன்று நேற்று சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

காங்கேசன்துறை நலன்புரி முகாமில் வைத்து 2007ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி இந்தக் கொலை இடம்பெற்றது. கப்டன் ரலப்பனாவ (வயது -39) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் தனது ரி-56 ரகத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் பொன்னம்பெரும ஆராய்ச்சிகே வசந்த (வயது 39) என்ற சிப்பாய் கைது செய்யப்பட்டிருந்தார். மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் விளக்கமறியலில் பக்.24

## மதிதயனின் இறுதிச்சடங்கில் ஏராளமானோர் பங்கேற்பு



மட்டக்களப்பு, மே 29

அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் மண்டூரில் சுட்டுக்கொல்லப்பட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சச்சிதானந்தம் மதிதயனின் இறுதிச் சடங்கு ஏராளமானோரின் அஞ்சலிக்கு மத்தியில் நேற்று புதன்கிழமை மாலை நடைபெற்றது.

பக்.24




காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. (ற)

## காணாமற்போனோர்கள் குறித்த விசாரணை துரிதப்படுத்தப்படும்

### ஆணைக்குழு அங்கத்தவர்கள் எண்ணிக்கை ஐந்தாக உயர்த்தப்படுகிறது

கொழும்பு, மே 29

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குவின் நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு வசதியாக ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கப்பட பக்.24


வரலாற்றில் இடம்பிடித்த ஜனாதிபதி வருகை

பக்கம் 16



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆயுதத்தால் முடியாததை போதைப்பொருள் கொண்டு நடத்த முயற்சிக்கின்றனர்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதே தவிர அதற்குப் பின்னரான காலத்தில் போருக்குக் காரணமான அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதன் காரணத்தால் போரால் என்ன செய்ய நினைத்தார்களோ அதனை வேறு பல வழிகளால் அந்தந்த அரசுகள் செய்ய முற்படுவதுதான் இங்குள்ள வித்தியாசம். அவற்றில் ஒன்றுதான் வடக்கில் புகைபொருள் பாவனை தாராளமயப்படுத்தப்பட்டுள்ளமை. – இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம்.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:–

சட்டவிரோதமாகப் புகையிலை, அதனுடன் தொடர்புடைய பதார்த்தங்கள், பொருள்கள் நாட்டுக்கு எடுத்து வரப்பட்டு வரி இல்லாது விற்பனை செய்யப்படுகின்றது. அதனால் குறைந்த விலையில் அவை விற்பனையாகின்றன. அதில் அதிக லாபம் கிடைப்பதோடு மேலும் பல சட்டவிரோத செயல்கள் அதிகரிக்கின்றன. கொலை உள்ளிட்ட பல குற்றச்செயல்கள் அதிகரிக்க அதுவும் காரணமாகிவிடுகிறது. பணத்துக்கு ஆள்களை வைத்தும் அவை இடம்பெறுகின்றன.

வடக்கு மாகாணம் போருக்குப் பின்னர் அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட்ட முரண்பாடுகளற்ற மாகாணமாக காணப்படாது, போருக்குப் பின்னரான முரண்பாடுகளுடனான மாகாணமாகவே காணப்படுகிறது. இந்த இரண்டு விடயங்களுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் உள்ளது. எமது சமூகக் கட்டமைப்பில் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்தக்கூடியது எதுவெனில், அரசுக்கும் மக்கள் கூட்டத்துக்கும் இடையில் அல்லது இனக் கட்டமைப்புக்கிடையே உள்ள முரண்பாடானது, அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட்டு அந்த இனக்கூட்டம் ஒற்றுமையாக வாழ்வதற்குரிய ஏற்பாடுகள் அங்கு இருக்க வேண்டும் என்பதே. வடமாகாணம் போரின் பின்னரான மாகாணமாக இருப்பதால் பல புதிய பிரச்சினைகள் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளன. அது பற்றி எல்லோரும் சிந்திக்கக்கூடிய விடயம். 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு புகைத்தல் அளவு வடக்கில் அதிகரித்துள்ளன. அதற்கு போரின் பின்னரான காலம் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதனால் வடக்கில் குறிப்பாக வவுனியாவில் பல பாடசாலை மாணவர்கள் தினமும் நகரின் சந்திகளில் கூடி நின்று சண்டையிடுகின்றனர். பொலிஸார் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஒரு நாளில் பல இடங்களில் சண்டையில் ஈடுபடுகின்றனர். பெரியளவான காயங்களுடன் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். அவ்வாறே பாடசாலைகளுக்கு உள்ளே கொலை இடம்பெறுமளவுக்கு சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அத்தகைய மாணவர்களே எதிர்காலத்தில் புகைபொருள் வியாபார விற்பனைகளை அதிகரிக்கவுள்ளனர். அண்மையில் வவுனியாவிலுள்ள ஒரு பிரபல பாடசாலையில் காலைநேரம் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார். அவர் காலைச் சாப்பாடு சாப்பிடாமல் வந்திருக்கலாம் என்ற அடிப்படையில் அவரை வைத்தியசாலையில் சேர்த்துப் பரிசோதிக்கப்பட்டபோது அவர் போதை வஸ்து பாவித்ததால்தான் மயங்கி விழுந்துள்ளார் என்பது தெரியவந்தது.

அது தொடர்பில் விசாரித்த போது அவருக்கு அந்தப் பேதைப் பொருளை விற்றது அங்குள்ள மற்றொரு பிரபல பாடசாலையின் மாணவன் என்பது தெரியவந்தது. அந்த மாணவனையும் பிடித்து விசாரித்தபோது அவரது பொக்கட்டில் இருந்து 11 பைக்கட் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது அவருக்கு ஓட்டோ சாரதி ஒருவரே போதைப் பொருள்களைக் கொடுத்துள்ளார் என்பது தெரியவந்தது. பொலிஸார் விசாரணை முன்னெடுத்தபோது அவ்வாறு பாதுகாப்பு வழங்கவேண்டிய வேலியே பயிரை மேய்கின்றமை தெரியவந்தது. அதிகாரத்திலுள்ள சிலர் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தே மாணவர்களுக்குப் போதைப் பொருள்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. எனவே எமது சிறார்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

போதைப்பொருள் சார்ந்த பாவனையாளர்களால் ஏற்படுத்தப்படுகின்ற சுகாதாரம் சார்ந்த பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. புகைத்தலால் வருடாந்தம் 60 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். அவர்களில் 6 லட்சம் பேர் தாமாகப் புகைபொருள்களைப் பயன்படுத்தாது, பெற்றோர் அவரது குடும்ப உறுப்பினர்கள் புகைப்பதனால், பொது இடங்களில் புகைப்பதனால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர். இது தற்கொலையும் கொலையும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன.– என்றார். (ற–4)

## புகைப்பொருள் விற்காத வர்த்தகர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ்.குடாநாட்டில் புகைத்தல் பொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைபொருள்களை விற்பனை செய்யாத 151 வர்த்தகர்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நேற்றுப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச புகைபொருள் பாவனை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் விழிப்புணர்வூட்டும் செயலமர்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் 151 வர்த்தகர்களும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் – 28, தெல்லிப்பழை 21, சாவகச்சேரி 15, ஊர்காவற்றுறை 22, யாழ்ப்பாணம் – 15, சங்கானை 8, சண்டிலிப்பாய் – 15, கோப்பாய் – 4, உடுவில் – 4, நல்லூர் – 5, வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 வர்த்தகர்களுக்கும் என 151 பேருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை மாணவர்கள், எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் புகைத்தலால் ஏற்படும் இழப்பு, கொடுமை என்பனவற்றைப் புலப்படுத்தும் வகையிலான உயிர் தின்னும் புகை, ஊன் உருகி ஆகிய விழிப்புணர்வு நாடகங்களும் ஆற்றுகை செய்யப்பட்டன. (ற–4)

## மாணவி கொலையில் கைதானவர் சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவர் அல்ல

### அந்நாட்டுத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

புங்குடுதீவு மாணவி படுகொலை சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள சுவிஸ் குமார் எனப்படும் மகாலிங்கம் சிவகுமார் தமது நாட்டு பிரஜை இல்லையென கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து கடந்த திங்கட்கிழமை தூதுவராலயம் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலையை வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் சுவிஸ் அரசு பக்கச்சார்பற்ற விசாரணைகளை வலியுறுத்துவதுடன், குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்தவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

அதேவேளை கொலைக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள நபரொருவர் சுவிஸ் பிரஜை என தெரிவிக்கப்பட்டதை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் அது தவறான தகவல் என கண்டறியப்பட்டுள்ளது. குறித்த நபர் இலங்கை பிரஜையே எனவும் எனினும் சுவிஸில் வதிவிட அனுமதி பெற்றுக் கொண்டுள்ளவராவார்.– என்றுள்ளது. (ற)

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு உதவி வழங்க 160 மில். ரூபா

யாழ்ப்பாணம், மே 29

வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக, 160 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சமர்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது. இதன் போதே, மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரச உதவிகள் வழங்கப்படவில்லை. அதனால் அந்த மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் இருவரும் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன் போது, மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன், மீள்குடியேற்ற அமைச்சுக்கு அதிகளவிலான நிதியை ஒதுக்குமாறு கோரியிருந்தனர்.

இந்த நிலையில், உள்ளக ரீதியாக இடம் பெயர்ந்தவர்கள் அனைவரையும் தமது ஆரம்ப இருப்பிடங்களில் மீள் குடியமர்த்துவது அரசின் கொள்கையாகும். இந்த நோக்கத்தை வெற்றிகரமாக செய்து முடிக்கும் நோக்கில் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கிட்டத்தட்ட இடம் பெயர்ந்த 2 ஆயிரத்து 175 குடும்பங்களை மீள் குடியமர்த்துவதற்கு வேண்டிய தேவையான வசதிகளை செய்து கொடுக்கும் நோக்கில் 160 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்குவதற்காக மீள் குடியேற்றம், மீள் நிர்மாணம் மற்றும் இந்து மத விவகார அமைச்சர் கௌரவ டி.எம். சுவாமிநாதன் அவர்களினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ற–5)

## பற்றைக்குள் மறைத்து வைத்து கசிப்பு விற்றவர் கைது

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் ஏழாலை மயிலங்காடு பகுதியில் பற்றைக்குள் கசிப்பை மறைத்து வைத்து விற்பனை செய்த ஒருவரை நேற்றுவியாழக்கிழமை கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரிடம் இருந்து 5 கேன்களில் 11 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஆன்மீக சொற்பொழிவு

தென்மராட்சி, மே 29

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று இரவு 7 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த செல்வன் கமலநாதன் சிந்துஜன் 'தொண்டருடன் தம் பெருமை' என்னும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துவார் என ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (ற–9)

## ராணுவம் அமைக்கும் விகாரையை நேரில் சென்று பார்த்தார் ரவிகரன்

யாழ்ப்பாணம், மே 29

கொக்கிளாயில், தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தி இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் மிகப் பிரமாண்ட விகாரையை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அதன்போது அங்கு கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர், தாம் மேலிடப் பணிப்பின் பேரிலியே அதனை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் மிகப் பிரமாண்டமான விகாரையை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம், கொக்கிளாயில் இடம்பெற்று வருகின்றது. கொக்கிளாய் வைத்தியசாலைக் காணியின் ஒரு பகுதியையும், தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியையும், பாதையையும் கையகப்படுத்தி இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தனியார் காணியின் உரிமையாளரையும் அழைத்துக் கொண்டு நேற்று நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்றார். அங்கு நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரிடம், விகாரையின் பிக்கு எங்கே என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேட்டுள்ளார். பிக்கு கொழும்புக்குச் சென்றுவிட்டதாக, இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர் இராணுவத்தினரிடம், குறித்த காணி தமிழ் மக்களுக்குரியது. இதில் விகாரை அமைப்பது சட்டவிரோதமானது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் குறிப்பிட்டுள்ளார். அங்கிருந்த இராணுவத்தினர் தமக்கு அது தொடர்பில் எதுவும் தெரியாது என்றும், மேலிடத்து உத்தரவுக்கு அமையவே மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வருவதாக ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார். (ற–5)

## ஞானச்சுடர் மாத இதழ் வெளியீடு இன்று

வடமராட்சி, மே. 29

தொண்டமானாறு சந்திரியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆன்மிக வெளியீடான ஞானச்சுடர் சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் அமுத கலா மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் சி.சிவபாலசிங்கமும், மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் நிகழ்த்துவர். (ற)



மடு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து மடு பிரதேச செயலகம் மற்றும் பெரிய பண்டிவிரிச்சான் கிராம மக்கள் ஆகியோர் இணைந்து நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தினர். குறித்த ஊர்வலத்தில் மடு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரி.ஒஸ்மன் டெனி, சுகாதார திணைக்களப் பணியாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மடுபிரதேச செயலக பணியாளர்கள், கிராம அலுவலர்கள், மக்கள் எனப் பலர் குறித்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து பண்டிவிரிச்சான் ம.வி பாடசாலையில் புகையிலை ஒழிப்பு தொடர்பிலும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ற-56)

# தனியார் பஸ்களில் 'ரிக்கட்' அவசியம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

தனியார் பஸ்களில், ரிக்கெட் வழங்கும் நடைமுறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். பலமுறை அறிவுறுத்தியும், அதனை தனியார் பஸ் உரிமையாளர்கள் பின்பற்றவில்லை. இனிவரும் காலங்களில், கட்டாயம் ரிக்கெட் வழங்கப்பட வேண்டும். அதனை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். - இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக் கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் பஸ்களில் ரிக்கெட் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் இது தொடர்பில், மாவட்டச் செயலகத்தில் தினமும் முறைப்பாடு செய்கின்றனர் என்று அரச அதிபர் குறிப்பிட்டார். இதன் போது பதிலளித்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர், இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்கின்றேன். சிறிய தனியார் பஸ்களில் ரிக்கெட் வழங்குவது கடினமாக இருக்கின்றது என்று குறிப்பிடுகின்றனர். இருப்பினும் இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றோம் - என்று அவர் தெரிவித்தார்.

ரிக்கெட் வழங்கப்படுவது தொடர்பில், மாவட்டச் செயலகத்தினாலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவாலும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். சகலரும் ரிக்கெட் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கட்டண வேறுபாடுகள் தொடர்பிலும், பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதை அரச அதிபர் சுட்டிக்காட்டினார். அத்துடன் ஒரு நாள் சாரதியாக இருப்பவர் மறு நாள் நடத்துநராகப் பணியாற்றுகின்றார். அவ்வாறு செய்ய முடியாது. எனவே, சாரதிகளையும் - நடத்துநர்களையும் பிரித்தறியும் உடைகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவர்களது ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்தும் அடையாள அட்டையும் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன் போது பதிலளித்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர், ஆயிரத்து 750 பேர் வரையில் நடத்துநர்களாகவும், சாரதிகளாகவும் பணியாற்றுகின்றனர். அவர்களுக்குசீருடை வழங்குவதானால் 13 லட்சம் ரூபா வரையில் செலவாகும். அதனை மாவட்டச் செயலகம் வழங்கினால் சீருடை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த அரச அதிபர், அதனை முடியுமானால் செய்வதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னர், வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் ஒரு விடயத்தை முன்வைத்தார். ஒவ்வொரு மாவட்டத்திலும், தூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் காலையிலிருந்து மதியம் வரை, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பஸ்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். ஆனால் யாழ்.மாவட்டத்தில் மாத்திரம், காலையிலிருந்து மதியம் வரையில், யாழ்.மாவட்டத்தைச் சாராத பஸ்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். யாழ்.மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.– என்று வலியுறுத்தினார். (ற-5)

# கூட்டுறவு துறையில் இளையோரை இணைக்க திட்டம்

யாழ்ப்பாணம், மே 29

கூட்டுறவுத் துறையில் கூடுதலாக இளைய தலைமுறையை உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசு தெரிவித்தார்.

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் நூறுநாள் வேலைத்திட்டத்தில் சகல கூட்டுறவு அமைப்புக்களிலும் இளம் வயதினர் கூடுதலாக உள்வாங்கப்படவுள்ளனர். சகல கூட்டுறவுச் சங்கங்களும் இதற்குரிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும். - என்று அவர் மேலும் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுறவுக் கிளை ரீதியாக கூடுதலான அங்கத்தவர்களை இணைப்பதற்கு சங்க நிர்வாகங்கள் துரிதமாகச் செயற்பட வேண்டும்.

அக்கறையுள்ள சகல இளம் வயதினரும் கூட்டுறவுக்கு அதிக சேவையாற்ற முன்வருவதோடு தத்தம் கிளை நிலையங்களில் அங்கத்தவராக இணைந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் கூட்டுறவு பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிதாக அங்கத்தவர்களை இணைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நூறு நாள் வேலைத்திட்டத்தில் நலிவுள்ள கூட்டுறவுச்சங்கங்கள் இனங்காணப்பட்டு அவற்றை மேலும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு கூட்டுறவுப் பணியாளர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கித் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்வதற்கும் தயாராக வேண்டும்.– என்றார். (ற-17)

# நாணயக் குற்றிகளின் தட்டுப்பாட்டுக்கு சுழற்சியின்மையே பிரதான காரணம்

## மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், மே 29

வடக்கு மாகாணத்துக்கு விசேடமாக சில்லறை நாணயங்களைக் கொண்டு வரும் திட்டம் எதுவும் உடனடியாக இல்லை. வடக்கில் ஏற்கனவே வழங்கப்பட்ட சில்லறை நாணயங்களின் சுழற்சியின்மையே, தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. - இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சில்லறை நாணயத்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்று, யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் அவரிடம், 'உதயன்' வினவியது. இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"வடக்குக்கு வழங்கப்பட்ட சில்லறை நாணயங்கள் சுழற்சி இன்றி இருக்கின்றன. இதனாலேயே தட்டுப்பாடு ஏற்படுகின்றது. வங்கிகள் கடந்த காலங்களில் கொடுத்த சில்லறை நாணயங்கள், ஆலயங்களின் உண்டியல்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தேங்கி இருக்கின்றன. அவை சுழற்சிக்கு உட்படுத்தப்படவில்லை."– என்று அவர் குறிப்பிட்டார்.

"தற்போது மத்திய வங்கி ஒவ்வொரு மாவட்டத்தினையும் பிரதிபலிக்கும் வகையில் 10 ரூபா நாணயக் குற்றியை வெளியிட்டது. அந்த நாணயக் குற்றியை, பலரும் சேகரிப்பதில் ஆர்வமாக இருக்கின்றனர். இது வும் நாணயத் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணமாகும்."– என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு வங்கிகள் ஊடாக சில்லறை நாணயம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று அவரிடம் கேட்ட போது,

"தற்போது அவ்வாறான திட்டம் எதுவுமில்லை. வடக்குக்கு புதிதாக சில்லறை நாணயங்கள் இப்போதைக்கு கொண்டு வரப்பட மாட்டாது."– என்றார். (ற-5)

# அனுமதியின்றி கள் வைத்திருந்தவருக்கு அபராதம்

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி நகரப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி கள் விற்பனை செய்த மூவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்துக்கான மதுவரித் திணைக்களத்தினர் நகரப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் மூவரும் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன் போதே நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார். இதேவேளை, கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மதுபான விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் தீர்ப்பளித்தார். 180 மில்லிலீற்றர் மதுபானத்தை விற்பனை செய்யும் போது கைதுசெய்யப்பட்ட நபருக்கு 50 ஆயிரம் ரூபாவும், 1,850 மில்லிலீற்றர் மதுபானத்தை விற்பனை செய்யும் போது கைதான நபருக்கு ஒரு இலட்சம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ற)

# வடக்கு நிதியில் புத்தளத்தில் இயங்கும் பாடசாலைகள் ஆண்டு இறுதிக்குள் மேல் மாகாணத்திடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 29

வடக்கு மாகாண சபையின் நிதியில் புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வரும் பாடசாலைகள் யாவும் இந்த வருடம் முடிவுடன், வடமேல் மாகாணத்திடம் கையளிக்கப்படவுள்ளன என்று, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வில், கல்வி அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சம்பளம் வழங்கப்படுகின்ற அதேவேளை மாகாணத்திற்கு வெளியே கடமை செய்து வருகின்ற ஆசிரியர்கள் எத்தனை பேர்?. எவ்வளவு காலமாக இவர்கள் இவ்வாறு சம்பளம் பெற்று வருகின்றார்கள்?. எத்தனை பேர் இவ்வாறு சம்பளம் பெற்று வருகின்றார்கள்?. எந்தச் சட்டம் அல்லது சுற்றறிக்கையின் அடிப்படையில் இது செயற்படுத்தப்படுகின்றது?. எந்த அடிப்படையில் தாங்கள் இதனை ஏற்றுச் செயற்படுத்தி வருகின்றீர்கள்?' என்று ஆளுங்கட்சி உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் புத்தளம் மாவட்டத்தில் தங்கியுள்ளனர். இதனால் அந்தப் பிரதேசத்தில், மன்னார் வலயத்துக்குச் சொந்தமான 6 பாடசாலைகள் செயற்பட ஆரம்பித்தன. 168 ஆசிரியர்கள் இவ்வாறு கற்பிக்கின்றனர். வடக்கு மாகாணத்தின் மன்னார் வலயத்துக்குரிய நிதியிலேயே, புத்தளப் பாடசாலைகள் செயற்படுகின்றன. அவை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் வடமேல் மாகாணத்திற்கு கையளிக்கப்படும். இதற்குரிய முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்.

இதன் போது கேள்வியெழுப்பிய உறுப்பினர் சர்வேஸ்வரன், எந்தச் சட்டம் அல்லது சுற்று அறிக்கையின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றது என்று மீளவும் கேட்ட போது, கடந்த காலங்களில் ஆளுநரின் பணிப்புக்கு அமையவே நடைபெற்றதாக பதில் வழங்கப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரி வித்த, ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மின், 1996 ஆம் ஆண்டிலிருந்தே பாடசாலைகள் அங்கு செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். கல்வி அமைச்சர் 1990 ஆம் ஆண்டு என்று சொல்கின்றார், நீங்கள் 1996 என்று சொல்கின்றீர்கள் எது சரி என்று கேள்வி எழுப்பினார் சர்வேஸ்வரன். இதன் பின்னர் எதிர்கட்சி உறுப்பினர் ஜவ்வர்கானும் பதில் சொல்ல முற்பட, சபையில் குழப்பம் ஏற்பட்டது. இதனால் அவைத் தலைவராகச் செயற்பட்ட அன்ரனி ஜெகநாதன், ஒலிவாங்கியை நிறுத்தி விட்டார். இதனால், ஆண்டு வேறுபாடுகளுக்கான காரணம் சபையில் தெரிவிக்கப்படவில்லை. (ற-5)

# ரயில் மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பு, மே 29

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி கடந்த புதன்கிழமை இரவு பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவெடிவேம்பு பிரதேசத்திலுள்ள ரயில் பாதையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் மாவெடிவேம்பு நாமகள் வீதியைச் சேர்ந்த 24 வயதான செல்வம் மகேந்திரராஜாவே உயிரிழந்தவராவார். (ற-10)

## 349 குடும்பங்களுக்கு மாந்தை கிழக்கில் காணி உறுதிகள்

மன்னார், மே 29
முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 349 குடும்பங்களுக்குக் கடந்த புதன்கிழமை காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. போரால் இடம்பெயர்ந்ததால் தமது காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கே இவ்வாறு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் ரி.பிரிந்தாகரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கமும், கௌரவவிருந்தினராகமாந்தை கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஏ.தனிநாயகமும் கலந்து கொண்டனர். அவர்கள் மக்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்களை வைபவ ரீதியாக வழங்கினர். (ந-56)





நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறிகளை ஏற்றிக் கொண்டு தம்புள்ளை நோக்கிப் பயணித்த கனரக வாகனம் ஒன்று கனகராயன்குளம் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. சில் ஒன்று காற்றுப் போனதையடுத்துக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியோர மின்கம்பத்துடன் மோதியது. விபத்தில் வாகனம் சேதமடைந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ந-21)

## இராணுவ பஸ், மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

வலி.வடக்கு, மே 29
இராணுவ பஸ் வண்டியும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் காயங்களுக்குள்ளாகி தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் சுன்னாகம் இலங்கை வங்கிக்கு அருகில் இந்த விபத்து நடந்துள்ளது. பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை இராணுவ பஸ் பின்புறமாக மோதியது என்று அங்கிருந்த மக்கள் தெரிவித்தனர்.
விபத்தை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற சுன்னாகம் பொலிஸார் இராணுவ பஸ்ஸையும், மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (ந-86)

# தகைமை அற்ற பலர் பதவிகளில்

### அரசியல் செல்வாக்கில் நியமிக்கப்பட்டமையே காரணம் என வடக்கு முதலமைச்சர் சாடல்



வலி.வடக்கு, மே 29
கடந்த காலங்களில் உரிய தகுதிகளைக் கொண்டிராத பலர் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். அதனால் தற்போது பல பதவிகளில் உரிய கல்வித் தகைமை கொண்டிராத பலர் கடமையாற்றுகின்றனர் என்பதை நாம் 2013ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபின்னர் அறிய முடிந்தது. - இவ்வாறு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றும் இருநூறு ஊழியர்களுக்கு நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
அங்கு உரையாற்றிய முதலமைச்சர் மேலும் தெரிவித்தாவது:-
கடந்த காலங்களில் நீங்கள் வேறு அரசியல் கட்சியால் நியமனம் செய்யப்பட்டிருந்தீர்கள். ஆனால் உங்களை நிறுத்த வேண்டும் என்று நாம் சிந்திக்கவில்லை. அதனாலேயே தற்போது உங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது. அதை உணர்ந்து நீங்கள் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்.
கடந்த காலங்களில் உரிய கல்வித் தகைமைகளின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெற்று நியமனங்கள் வழங்கப்பட்டன. தற்போது அந்த நிலை மாறிவிட்டது. அரசியல் கட்சிகளின் செல்வாக்கின் அடிப்படையில் பதவிகளைப் பெற்றுக் கொண்டதால் அரச அலுவலர்கள் தமக்குப் பதவி தந்த அரசியல்வாதிகளுக்குத் தொண்டாற்ற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.
இத்தகைய நிலைமை அரச ஊழியர்களிடையே காணப்படக் கூடாது. கடந்த காலத்தில் அரசினுடையது என்ற எண்ணத்தில் நாம் பலதையும் சுருட்டிக் கொண்டோம். இன்று அத்தகைய எண்ணம் தோன்றக் கூடாது.
இன்று மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை காணப்படுகின்றது. இங்கு எதனையும் சுருட்டிச் செல்லலாம் என யாரும் கருதக் கூடாது. நீங்கள் அனைவரும் எதிர்காலத்தில் உண்மையானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் அரச ஊழியன் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும். - என்றார்.(ந-86)

## சேதமடைந்த பாலத்தால் மக்கள் சிரமம்

கிளிநொச்சி, மே 29
கிளிநொச்சி, அக்கராயன் காட்டம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள மதகுப் பாலத்தில் ஏற்பட்டுள்ள துவாரம் காரணமாக மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டியில் செல்பவர்கள் விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.
அக்கராயன் மணியங்குளத்தின் பின்புறமாகவுள்ள பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று கூறப்படுகின்றது. இந்த மணல் அகழ்வில் ஈடுபடும் கனரக வாகனங்கள் இந்த வீதியின் ஊடாக இரவில் பயணிக்கின்றன. இதனால், அதிக பாரத்தைத் தாங்க முடியாத இந்த மதகுப் பாலத்தில் துவாரம் விழுந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ந)

# 10 லட்சம் ரூபா நிதியில் அபிவிருத்தித் திட்டங்கள்

### மாந்தை கிழக்கில் ஆரம்பம்



மன்னார், மே 29
நூறுநாள் வேலைத் திட்டத்தின் கீழ் சகல கிராம அலுவலர் பிரிவிலும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலும் ஆரம்பிக்கப்பட்டது. அபிவிருத்தித் திட்டங்கள் ரூபா 10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாண்டியன் குளம் நட்டாங்கண்டல் ஆரம்பப் பாடசாலைக்கான சுற்று மதில் மற்றும் பாண்டியன் குளம் உள்ளக வீதி ஆகிய அபிவிருத்திப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ரி.பிரிந்தாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஏ.தனிநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நட்டனர்.(ந-56)

## வழிப்பறி திருடர் கைவரிசை நீர்வேலியில் அதிகரிப்பு



யாழ்ப்பாணம், மே 29
நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் வழிப்பறித் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.
அந்தப் பிரதேசங்களில் ஆள் நடமாட்டம் குறைந்த வீதிகளில் செல்வோரின் தங்கச் சங்கிலிகள் மற்றும் பணப் பை என்பவற்றைத் திருடர்கள் அபகரித்துக் கொண்டு தப்பிக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.
கடந்தவாரம் நீர்வேலி, பூதர்மடம் வீதியில்சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுப்பதற்கு முயற்சித்துள்ளனர். அந்தப் பெண் கூக்குரலிட்டதை அடுத்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.
கடந்த சில மாதங்களாக இந்த நிலைமை காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ள மக்கள் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர். (ந-17)

# தவணைமுறை மின் இணைப்பு கட்டண நடைமுறை நிறுத்தம்

### சமுர்த்தித் திணைக்களத் தகவல்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 23
சமுர்த்திப்பயனாளிகள்மின்இணைப்புக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தித் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.
சமுர்த்திப் பயனாளிகள் மின் இணைப்புப் பெறும் போது அதற்குரிய கட்டணத்தை தவணை முறையில் செலுத்துவதற்கான நடைமுறை கடந்த ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. சமுர்த்திப் பயனாளிகள் பிரதேச செயலர் ஊடாக உறுதிப்படுத்தி, மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். பின்னர் மாவட்டச் செயலகத்தால் குறித்த பெயர்ப் பட்டியல் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சமுர்த்தி திணைக்களத்தால் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்படும். இதன் பின்னர் தவணை முறையில் கட்டணம் செலுத்தி மின் இணைப்பைபெற்றுக்கொள்ளமுடியும்.
இந்த நடைமுறைக்கு அமைவாக, கடந்த வருடம் இறுதிப் பகுதியில் - முன்னைய ஆட்சிக் காலப் பகுதியில் அனுப்பியவர்கள் பலருக்கு, இன்னமும் தவணை அடிப்படையிலான மின் கட்டண இணைப்புக் கிடைக்கவில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய முறையில் பதிலளிக்கின்றார்கள் இல்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில், யாழ்.மாவட்டச் செயலக சமுர்த்தி திணைக்களத் தினரிடம் கேட்ட போது, கடந்த ஆட்சியில் குறித்த நடைமுறை இருந்தது. தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் தவணை அடிப்படையிலான மின் இணைப்புக்கள் வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## ஜோன்ஸ்டன் எம்.பிக்கு பிணை

கொழும்பு, மே 29

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, குருநாகல் மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலுமே அவரை, குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி சுனந்த குமார ரத்நாயக்க விடுதலைசெய்துள்ளார்.



சதொச நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

முன்னாள் அமைச்சருடன் கைது செய்யப்பட்ட சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஆர்.எம்.ஏ. பெர்னான்டோ மற்றும் அமைச்சரின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் மொஹமட் சாகீர் ஆகியோருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது. (த)

# வாக்களித்த தமிழரை ஏமாற்றினார் மைத்திரி

## மாகாண சபை உறுப்பினர் சிவமோகன் சாடல்

வவுனியா, மே 29

இறுதிப் போரின் முடிவில் உறவினர்கண் எதிரே இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், உறவினர்களின் முன்னே கைது செய்யப்பட்டவர்கள், முகாம்களில் கைது செய்யப்பட்டவர்கள், வைத்திய சிகிச்சைகளுக்காக முள்ளிவாய்க்காலில் இருந்து கப்பலில் அனுப்பப்பட்டவர்கள் என பெருந்தொகையானோர் வலுக்கட்டாயமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டனர். புதிய ஜனாதிபதிக்கு வாக்களித்த தமிழ் மக்கள் தமது உறவுகள் திரும்பி வருவார்கள் எனக் காத்திருந்து ஏமாற்றப்பட்டு விட்டனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சிங்களப் பேரினவாத அரசோ மஹிந்த அரசுக்கு நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி வருகிறார்கள். அரசியல் கைதிகள் எவரும் சிறைகளில் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படியாயின் எவ்வித குற்றமும் சாட்டப்படாது வழக்கு பதிவு செய்யப்படாது தொடர் விசாரணை கைதிகளாக இருப்பவர்கள், வழக்கு பதிவு செய்தும் பல பத்து வருடங்கள் இழுத்தடிப்பு செய்தவர்கள் எல்லாம் அரசியல் கைதிகள் அல்லாது வேறு எந்த வகையை சேர்ந்தவர்கள்.

தேர்தல் முறையை மாற்றப் பல தடவை அமைச்சரவையைக் கூட்டுபவர்களால் தமிழனுக்கு நீதி வேண்டி ஒரு கூட்டத்தையேனும் கூட்டினார்களா? ஐநா சபையின் தருஸ்மன் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட காணாமற்செய்யப்பட்டோர் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், போர்க்குற்றம் புரிந்தோர், ஏன் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் கூட மீண்டும் தேர்தலில் போட்டியிட போட்டி போடுகிறார்கள்.

ஆனால் வன்னியில் காணாமற் போகச் செய்யப்பட்டோரின் குடும்பங்கள் நட்டாற்றில் விடப்பட்டுள்ளனர். பொறுப்புக் கூறாதவரை இன நல்லிணக்கம் சாத்தியமற்றது என மனித உரிமைகள் ஆணையாளர் மட்டுமல்ல உலக வல்லரசுகளே பல தடவை வெளிப்படுத்திவிட்டன. ஆனால் இங்கே தமிழ் மக்களின் அடிப்படை நீதிகளே மறுக்கப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான அரசியல் கைதிகள் சிறைகளில் தங்கள் காலங்களைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். நல்லாட்சி என்றால் என்ன அர்த்தம் என்பது எமக்கு புரியவில்லை. சிங்கள மக்களின் மனம் கோணாமல் தமிழ் மக்களின் மேல் அடக்குமுறைகளை ஏவி விடுவதுதான் நல்லாட்சியோ தெரியவில்லை. இறுதியில் ஜுலைக்கு வரும் ஐ.நா அறிக்கை, செப்ரம்பருக்கு வரும் ஐ.நா அறிக்கை என்று காத்திருந்து தமிழனுக்கு என்ன நியாயம் கிடைக்கப் போகிறதோ தெரியவில்லை. வன்னியில் வலுக் கட்டாயமாகக் காணாமல் செய்யப்பட்டோர் விடயத்தில் புதிய அரசிலும் நீதி செத்துவிட்டது என்பது மட்டும் தெளிவாகிறது -என்றார். (த-402)

# கொலையாளிகளை பிடிக்காவிடின் மக்களைத் திரட்டிப் போராடுவோம்

## செல்வராசா எம்.பி எச்சரிக்கை

மட்டக்களப்பு, மே 29

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் ச. மதிதயன் கொலைக்குக் காரணமானவர்களை அரசும்,பொலிஸாரும் கண்டுபிடித்து ஒருவார காலத்தினுள் நீதியின் முன் நிறுத்தா விட்டால் மக்களை ஒன்றிணைத்து பெரிய மக்கள் போராட்டம் ஒன்றை நிகழ்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்தார்.

கொலைகளின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு நல்லையா வீதியில் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 2009 இல் போர் மௌனத்ததின் பின்பும் ஜனவரி 8 இன் பின்பு புதிய அரசின் நல்லாட்சி மக்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் தற்போது வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள கொலைகள், அரசியல்வாதிகள் மற்றும் மக்களின் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு மாணவியின் கொலையைக் கண்டித்து கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இது நல்லாட்சியின் வெளிப்பாடாகும்.

இந்த நிலையில் மண்டூரில் மிகவும் பாதுகாப்பு வலயத்தின் மத்தியில் நவீன ரகத் துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த நிலையில் நல்லாட்சியின் மீது நம்பிக்கை இல்லாமல் போகின்றது. அரசும் பொலிஸாரும் இணைந்து ஒரு வார காலத்தினுள் கொலையாளிகளைக் கண்டுபிடித்து தர வேண்டும். இல்லையேல் மக்கள் எழுச்சிப் போராட்டத்தை நாம் நடத்துவோம்-என்றார். (த-10)

# அமெரிக்க –இலங்கை உறவு வலுவடைகிறது

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



அம்பாறை, மே 29

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு வலுவடைந்து வருவதற்குச் சான்றாக பொருளாதாரம் குன்றிய பயனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சூழலுக்கு தீங்கு விளைவிக்காத கூரைத்தகடுகளை விருத்தி செய்யும் முகமாக உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு அம்பாறை நவகம்புரவில் கடந்த புதன்கிழமை தொழிற்சாலையொன்று திறந்து வைக்கப்பட்டது. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க அபிவிருத்தி நிறுவகம் மற்றும் பில்டிங் சொலுசன் பிரைவேட் லிமிட்டெட் என்பன இணைந்து ரூபாய் 80 மில்லியன் செலவில் நிர்மாணித்த தொழிச்சாலையை அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தூதுவர் அலிசன் அரியஸ் ஆகியோர் திறந்து வைத்தனர். அங்கு கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எதிர்காலத்தில் தொடர்ச்சியான இரு நாடுகளுக்குமான உரையாடல்கள் மற்றும் இதுபோன்ற தொழில் வாண்மை பொருந்திய பங்களிப்புகள் நடைபெறவேண்டும். துருப்பிடிக்காத இரும்புக் கூரைகள், கொட்டகைகள் அமைப்பதற்கான விசேட இயந்திரங்களை நிறுவியதோடு ஆற்றல், திறன் போன்றவற்றில் பயிற்சிகளையும் மற்றும் நிபுணத்துவத்தையும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க அபிவிருத்தி நிறுவகம் (யு.எஸ் எயிட்) வழங்கியுள்ளது. அத்துடன் நூற்றுக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பக்களையும் வழங்கியுள்ளது-என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தூதுவர் அலிசன் அரியஸ்,

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக தேர்ச்சிக்கான அமெரிக்க அரசு, அமெரிக்க மக்களின் பங்களிப்புக்கான சிறந்த உதாரணமாக இந்தத் தொழிற்சாலை அமையப் பெற்றுள்ளது. இது வெற்றிக்கு உதாரணமாகும். கிழக்கு மாகாணத்தில் வளர்ந்துவரும் விசேட தொழிற்துறைக்கேற்ப மீள் சுழற்சிக்குரிய புதிய கூரைத் தகடுகள் அமைந்திருக்கும். இதன் உற்பத்திகள் சூழலை நேசிக்கும் முறைக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ் உற்பத்தியானது சக்தி விரயத்தைக் குறைத்து கழிவுகளை 100 வீதம் மீள் சுழற்சிக்குட்படுத்தப்படும்-என்றார். (த-10)

# பொலிஸ் பாதுகாப்புடன் திருமஞ்ச வெள்ளோட்டம்

## இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பும் சலசலப்பும்

வலி.தென்மேற்கு, மே 29

நாடு இருக்கும் சூழ்நிலையில் வழமைக்கு மாறாக எங்கும் இடம்பெறாத வகையில் பொலிஸ் பாதுகாப்புடன் நடைபெற்ற திருமஞ்ச வெள்ளோட்டத்தினால் இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பும் சலசலப்பும் ஏற்பட்டது. இதனால் அம்பாளின் வெளி வீதி உலா ஒரு மணி நேரம் தாமதமானது.

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் சுதுமலை வடக்குப் பகுதியில் வசிக்கும் ஒரு சமூகத்தினருக்குரிய 12 ஆம் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை வாண வேடிக்கைகளுடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்தத் திருவிழாவை முன்னிட்டு மேற்படி சமூகத்தினரின் நிதிப் பங்களிப்புடன் சுமார் 40 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திர திரு மஞ்சத்தின் வெள்ளோட்டம் பி.ப. 3மணியளவில் நடைபெற்றது.

திருவிழாவுடன் சம்பந்தப்பட்ட உபயகாரர்களுக்கிடையில் திருவிழா சம்பந்தமாக நிலவிவந்த கருத்து முரண்பாடு காரணமாக ஒரு பிரிவினர் அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்கும் நோக்குடன் பாதுகாப்புக் காரணத்தை முன்னிட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸாரை வாகனத்தில் ஏற்றி வந்து வெள்ளோட்டத்தை நடத்தி முடித்தனர்.

அமைதியைப் பேணிக் காக்கவேண்டிய ஆலய வளாகத்தில் பொலிஸாரின் நடமாட்டம் குறித்து திருவிழா உபயகாரர்களான இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதுடன் இரு பகுதியினருக்கிடையில் பலத்த வாக்கு வாதமும் மூண்டது. இதனால் மேளதாள வாத்தியக் கச்சேரி தடைப்பட்டதுடன் மஞ்சத்துக்கு மின்குமிழ்கள் பொருத்தும் வேலைகளிலும் இடையூறு ஏற்பட்டது. இரு பிரிவினர்களுக்கும் இடையில் இரண்டு மணி நேரமாக இடம்பெற்ற வாய்த்தர்க்கம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்த தடைப்பட்ட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதையடுத்து ஒரு மணி நேரம் தாமதித்து அம்பாளின் வெளி வீதி உலா இடம்பெற்றது. (த-115)

## வாசுதேவவுக்கு மஹாநாயக்கர் கண்டனம்

கொழும்பு, மே 29

எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுக் காலை அஸ்கிரிய மஹாநாயக்கர் கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரரைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின் போது மத விடயங்கள் உட்பட தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் போது அஸ்கிரிய மஹாநாயக்கர் கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரர், அண்மையில் நாடாளுமன்றத்தில் வாசுதேவ நடந்துகொண்ட விதம் ஒரு போதும் அனுமதிக்க முடியாதென குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தலைவர்கள் நாட்டுக்கு எடுத்துக்காட்டாகச் செயற்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர்களுடைய குழந்தைகள் தான் நாட்டில் எதிர்காலப் பிரதமர், ஜனாதிபதிகள் எனவே நாம் அவர்களுக்கு எடுத்துக்காட்டாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீது, நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வாழ்வின் சுவாரஸ்யத்தை எண்ணி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டப் பணியை நிறை வேற்று வீர்கள். இலாபம் அதிகரிக்கும். உறவினர்களுக்கு இயன்ற உதவி செய்வீர்கள். வாகனப் பயணம் இனிதாக அமையும்.

**இடபம்:** யாரையும் விமர்சித்து பேச வேண்டாம். தொழிலில் நெருக்கடியை சந்தித்தாலும் வருமானத்துக்கு குறைவிருக்காது. பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள்.

**மிதுனம்:** செயலில் பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் சார்ந்த பணி நிறைவேற தாமதமாகும். குடும்பச் செலவுக்கு சேமிப்பு பயன்படும். வாகனத்தில் மிதவேகத்தை கடைபிடிப்பது நல்லது. எதிர் பார்த்த முக்கிய செய்தி கடைசி நேரத்தில் கிடைக்கும்.

**கடகம்:** மனதில் புதிய திட்டம் தீட்டுவீர்கள். முக்கியமான பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியா பாரம் முன்னேற்றத்தை அளிக்கும். பணப் பரிவர்த்தனை திருப்தி தரும். பெற்றோர் விரும்பியதை வாங்கித் தரு வீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவி பெறுவர்.

**சிங்கம்:** உடல் நலத்தில் அக்கறை கொள்வது நல்லது. நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். வெளியூர் பய ணத் திட்டத்தில் மாறுதல் ஏற்படும்.

**கன்னி:** அன்பு வழியை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள். ஓய்வு நேரத்தில் இசைப்பாடலை இரசித்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். ஆடம்பர எண்ணத்துடன் செலவு செய்வீர்கள். ஒவ்வாத உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது. வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உறவினர்களிடம் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியா பாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தியளிக்கும். பணப் பரிவர்த் தனையில் முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பொறுப்பான பதவி கிடைக்கும்.

**தனுசு:** மற்றவர் நலனில் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அமோக விற்பனையால் இலாபம் கூடும். தேடிய பொருள் கைவந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம், பொது விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு சீரான அளவில் கிடைக்கும். உறவினர் உதவிகரமாகச் செயற்படு வர். நீண்டநாள் எதிர்பார்ப்பு கூட தற்போது நிறைவேறும்.

**கும்பம்:** பயன் உணர்ந்து செயலில் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறையில், புதிய மாற்றத்தை ஏற் படுத்துவீர்கள். வெளியூர் பயணத்தால் ஆதாயம் கிடைக் கும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.


**மீனம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற எண்ணம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண் டாகும். ஆதாயம் அதிகரிக்கும். முக்கியமான வீட்டு உப யோகப் பொருள்களை வாங்குவீர்கள். உறவினர் வரு கையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# செல்பியில் சாதனை



நடிகராக மாறியுள்ள உலக மல்யுத்த வீரரான திவானே ஜோன்சன், சான் அன்ட்ரியாஸ் என்ற அதிரடி சண்டைப் படத்தில் நடித்துள்ளார். அந்தப் படத்தின் முன்னோட்ட காட்சி, லண்டனில் நடைபெற்றது. அப்போது அவர் தனது புஜபல பராக்கிரமத்தை காண்பிக்கும் வகை யில், செல்பி எடுத்தார். அதுவும், மூன்றே நிமிடங்களில் 105 செல்பி படங்கள் எடுத்தார்.
இதன் மூலம், குறைவான நேரத்தில் அதிக செல்பி படங்கள் எடுத்தவர் என்ற உலக கின்னஸ் சாதனையைப் படைத்திருந்தார்.

# எமிக்கு விருந்து கொடுத்த பிரபுதேவா



ஹிந்தியில் பிரபு தேவா இயக்கும் சிங் ஈஸ் பிளிங் படத்தில் எமி ஜாக்ஸன் நடிக்கிறார். கோவாவில் நடந்த இந்தப் படத்தின் படப் பிடிப்பில் பங்கேற்றார். படப்பிடிப்பு முடிந்தபிறகு எமியின் பிறந்தநாள் என்று அறிந்து விருந் துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
இதற்கான முழு ஏற்பாடையும் பிரபுதேவாதான் செய்தா ராம். படக்குழுவினர் அவருக்கு வாழ்த்து சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது வயதான வெளிநாட்டு முதியவர் ஒருவர் வந்தார். அவரை கண்டதும் ஓடிச் சென்று கட்டிப் பிடித்துக் கொண்டு கன்னத்தில் முத்தம் கொடுத் தார் எமி.
யார் இவர், எமி எதற்காக முத்தம் தருகிறார் என்று அங் கிருந்தவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்த போது, இவர்தான் எனது தந்தை என அறிமுகப் படுத்தியதுடன் மகிழ்ச்சியில் துள்ளி குதித்தார் எமி.
தந்தைக்கு முத்தம் கொடுத்த ஒளிப்படத்தை இணைய தளத்தில் ரசிகர்களுக்காக பகிர்ந்து கொண்ட எமி இந்த பூமி கிரகத்தில் என்னை வியக்க வைக்கும் அற்புதமான மனிதர் என் தந்தைதான். அவர் இல்லாமல் நான் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## ரிலாக்ஸா வாசியுங்க....

ஒருத்தன் கஸ்ட்டமர் கெயார். நம்பருக்கு போன் செய்தான். ஒரு பொண்ணு தான் போனை எடுத்திச்சு.
ஹலோ..!! வணக்கம் !! என்ன விடயம் சொல்லுங்க .
நன்றி..! உங்களுக்கு கல்யாணம் முடிஞ்சிட்டா ?
என்ன ? அதைப் பற்றி நான் உங்களுக்கு சொல்ல வேண் டியதில்லையே ..!
எதுக்கு போன் எடுதீங்களோ அதைப் பற்றி மட்டும் கேளுங்க..!
கோவப் படாதீங்க மடம்...! கல்யாணம் முடிஞ்சிட்டா ? .
இல்லை..!! அதுக்கு என்ன இப்போ?
இல்லை..!! நான் உங்களை கல்யாணம் செய்து கொள்ளலாமா?
மன்னித்துக் கொள்ளுங்கள்..! எனக்கு விருப்பம் இல்லை ..! நான் ஒரு ஒவ்பர் தாறேன். ..என்ன லவ் மரேஜ் செய்தா, ஹனிமூனுக்கு சுவிற்ஸர்லாந்து போகலாம். அரேஞ் மரேஜ் செய்தா, பரிஸ் போகலாம்!!
சார்..!! நான் இஷ்ட்டமில்லை என்று சொல்லிட்டேன்ல. என்னை ஏன் தொந்தரவு பண்ணுறீங்க..?
இப்ப புரியுதா !!.. நான் இஷ்ட்டம் இல்லை என்றாக் கூட அந்த ஒவ்பர் இருக்கு இந்த ஒவ்பர் இருக்கு என்று கொடைச்சலை குடுப்பீங்கல்ல !!.. அப்ப இப்பிடித்தான் மத்தவங்களுக்கும் இருக்கும்..!

இந்த உலகத்துக்கு நீ கெட்டவனா தெரிஞ்சா உன் நல்லவன்னு ஒரு கூட்டம் சொல்லும் ...நீ நல்லவனா தெரிஞ்சா ஒரு கூட்டம் உன்னை கெட்டவன்னு சொல்லும்...



இந்த உலகத்துக்கு நீ எப்படி இருக்கேன்னு முக்கியமில்லை உனக்கு நீ எப்படி வாழ்ந்துட்டு இருக்கேன்றது தான் முக்கியம். ஏனா உலகம் பொய் ஆகலாம்.. உன் மனசு பொய் ஆகாது..

# மீண்டும் வருகிறாரா தேவயானி?

கோலங்கள் தொடர் மூலம் எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பிடித்தவர் நடிகை தேவயானி. தற்போது சின்னத் திரை – வெள்ளித்திரை இரண்டிலும் இருந்து ஒதுங்கியிருந்தார். ஆசிரியர் தொழில் செய்து வந்தார்.
தற்போது அவருக்கு கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் சின்னத்திரைக்கு பிரவேசிக்க முடிவெடுத்துள்ளார். சின்னத்திரை இயக்குநர்கள் பலரையும் சந்தித்து வாய்ப்புக் கேட்டுள்ளார். தொடரில் கதா நாயகி கதாபாத்திரம் வழங்க முடியாது. வேறு கதாபாத்திரங்களில் நடியுங்கள் என்று இயக்குநர்கள் சொல்லியுள்ள வராம். இதனால் தீவிர யோசனையில் உள்ளார் தேவயானி. ஆனாலும் விரை வில் அவர் சின்னத்திரையில் தோன் றுவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்வையடி

# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த

# பொங்கல் விழாச் சிறப்பிதழ் - 29.05.2015

## வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட்பார்வை

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்மனின் அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இன்றைக்கு சுமார் 49 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்தில் தோன்றி யிருப்பதை அடியார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும். அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக் காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம் அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம் பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.



### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத் தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அரு ளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கில் அயலவர் களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம் பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலை யினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக் கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

*"மேன்மை கொள் சைவ நீதி.*
*விளங்குக உலகமெல்லாம்"*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

-கே. வைத்திலிங்கம்

வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தாள் புகுந்த
கல்லும் கசிந்துருகப் பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

## பொங்கல் விழாச் சிறப்புறப் பிரார்த்திப்போரும், விளம்பர அனுசரணையாளர்களும்

கட்டடப் பொருள்கள்,
உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி**
**சேலைச் சோலை**
(பட்டுப் புடவைகளின்
சாம்ராஜ்யம்)
நவீனசந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 2222 503

கோயிலுக்குத் தேவையான பட்டு சரிகைத்
துணிகள், பட்டு வேட்டிகள், சால்வைகள் மற்றும்
நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
25, 4 ஆம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும்
அசல் 22
கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்
மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
டிஜிற்றல் கலர் லாப், வீடியோ அன் ஸ்ரூடியோ
20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்வையடி
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S. **நாதன்**
இல. 96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2491

**மஹா விஷ்ணு ஹாட்வெயர்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
712,மாபழம் சந்தி,
தொ.பே.077 905 0185
510, நாவலர் வீதி, நல்லூர்.
தொ.பே.077 905 0185
புங்கன்குளம் சந்தி,
தொ.பே.077 847 0341

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான
மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில்
பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க. முருகேந்திரன்
174, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க
ஆபரணங்களுக்கு நீங்கள்
நாடவேண்டிய இடம்
**அலங்கார்**
**நகை மாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 2920

தம்பிப்பிள்ளைஅன் கோ
**Thambippillai & Co**
(கால்நடை தீவனங்கள், மருந்து
வகைகள், கோழிக்குஞ்சுகள்
விற்பனையாளர்கள்)
343, கே.கே.எஸ்.வீதி,
**யாழ்ப்பாணம்.**
தொ.பே. 021 222 3353

உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கஸ்கவர் 22
கரட் தங்க நகைகளைப் பெற்றிட
சிறந்த ஸ்தாபனம்
**உதயா ஜூவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும்
நகைகளை ஓடர்க்குப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சானுகா நகைமாடம்**
64, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3700

நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்
**NEW LUCKY HARDWARES**
**343, Kandy Road,**
**Ariyalai, Jaffna.**
**T.P. 021 373 4432,**
**077 237 8062**

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக
முறையில் அழகிய தங்க நகைகளைக்
குறித்த தவணையில்
செய்துபெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய
நகைகளுக்கு நம்பிக்கை
வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
118 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜூவல்லர்ஸ்**
158,193, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.
021 222 8334

**BANUJAN SAW MILL**
**STATE APPROVED TIMBER DEALER**
**No.48, Punkankulam Road,**
**Jaffna.**

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்
கேற்ப தங்கப்பவுண் நகைகளை
நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜூவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
105/1, புங்கங்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 7877 760

**இராஜேஸ்வரி**
**ரெக்ஸ்ரைல்**
இல.105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 6953

## இன்று கொடியேறி உற்சவம் ஆரம்பம்

அராலி, மே 29

அராலிஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை விசேட கப்பல் திருவிழா இடம்பெறும்.

8ஆம் திருவிழா அன்று கொடிக் கம்பத்துக்கு பல நூற்றுக்கணக்கான பலாக்காய்கள் வெட்டப்பட்டு படைக்கப்படுவதுடன் அன்று மாலை கிராமிய ஊர்வலமும் அன்றைய தினம் மாலை முதல் மறுநாள் காலை வரை பொங்கல் வழிபாடுகளும் இடம்பெறும்

இறுதியாக 6ஆம் திகதி சனிக்கிழமை கொடியிறக்க விழாவுடன் உற்சவம்நிறைவுபெறும்என்றுஆலய பரிபாலகர் தெரிவித்தார். (ஒ–50)

# உணவு இடைவேளையை குறைத்தால் போராட்டம்

### *தொழிலாளர் மத்திய நிலையம் எச்சரிக்கை*

கொழும்பு, மே 29

அரச ஊழியர்களின் மதிய உணவுக்கான இடைவேளை குறைக்கப்பட்டால் பெரும் தொழிற்சங்கப் போராட்டங்கள் வெடிக்கும் என தேசிய தொழிலாளர் மத்திய நிலையத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களுக்கானமதிய உணவு இடைவேளையை அரை மணித்தியாலமாக மாற்றும் சுற்றறிக்கை உடனடியாக நீக்கப்பட வேண்டும். உழைக்கும் மக்கள் எட்டு மணித்தியாலப் பணிக் காலத்துடன், ஒரு மணித்தியால மதிய உணவு இடைவேளையும் வென்றெடுக்கப்பட்டது.

இவ்வாறு வென்றெடுக்கப்பட்ட மதிய உணவு இடைவெளிக் காலத்தை ஒரு மணித்தியாலத்திலிருந்து அரை மணித்தியாலமாகக் குறைக்க அரசுக்கு உரிமை கிடையாது.

மக்கள் ஆணை மற்றும் ஒட்சிசன் இல்லாத இந்த அரசு செய்து வரும் வேண்டாத வேலைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.உழைக்கும் மக்களின் உரிமைகளை முடக்குவதற்கு இந்த அரசுக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

இந்த நிலைமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பொறுப்புக் கூற வேண்டும்.

அரச ஊழியர்களுக்கும் அரசுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதன்னை தடுக்க ஜனாதிபதி மத்தியஸ்தம்வகிக்கவேண்டும்–என்றார்.(த–ரி)

## குழந்தைகளின் சொக்கலேட் குறித்துத் தீவிர பரிசோதனை

கொழும்பு, மே 29

குழந்தைகள் பெரிதும் விரும்பும் கிண்டர் ஜோய் சொக்கலேட் வகைகள் உண்பதற்கு உகந்தவைகள் தானா என்பது குறித்துப் பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இந்தச் சொக்கலேட் வகைகள் சட்டபூர்வமற்ற விதத்தில் இந்தியாவிலிருந்து இங்கு தருவிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை கூறியுள்ளது.

இந்திய ரூபாவில் 35ரூபா வரையிலான பெறுமதி கொண்டுள்ள இந்த கிண்டர்ஜோய் சொக்கலேட் ஒன்று இலங்கையில் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், இந்த வகை சொக்கலேட்டைத்தவிர சில பிஸ்கட் வகைகள், சூவிங்கம் வகைகள் சிலவும் சட்டபூர்வமற்ற விதத்தில் இங்கு தருவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள ரூமி மர்சூக், இவை குறித்துத் தொடர்ச்சியான விசாரணைகள் மேற்கொள்ளப்படுமெனவும் கூறினார்.

நுகர்வோருக்கான சட்டக்கோவைக்கு அமைய, இனிப்புப் பண்டங்களில் உற்பத்தியாளரின் அல்லது இறக்குமதியாளரின் பெயர், முகவரி குறிப்பிடுவது கட்டாயமாக்கப்பட்டிருந்தாலும் இந்த சொக்கலேட் வகைகளில் உற்பத்தியாளரினதோ, இறக்குமதியாளரினதோ பெயர், முகவரி குறிப்பிடப்படவில்லை எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (த–22)

## வணிக மன்ற முன்னாள் பொருளாளர் விளக்கம்

சாவகச்சேரி, மே 29

"சாவகச்சேரி வணிகர் மன்றத்துக்கு புதிய பொருளாளர்" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி குறித்து முன்னாள் பொருளாளர் கு. பிரணவராஜா "அந்தச் செய்தியில் வெளிவந்த தகவல் உண்மைக்குப் புறம்பானது" எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வணிகர் மன்றத்துடன் தொடர்பு கொண்டபோது:–

சங்கப் பொருளாளராக பணியாற்றிய கு. பிரணவராஜா " தங்களது நிர்வாகத்தின் செயற்பாடுகள் எனக்கு ஒத்து வராத காரணத்தினால் நான் எனது சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற பொருளாளர் பதவியிலிருந்து ராஜினாமா செய்கிறேன். என்று கடிதம் ஒன்றை 17/03/2015 சமர்ப் பித்திருக்கிறார். இதனை ஏற்றுக் கொள்ளாத நிர்வாகம் பொதுச்சபைக் கூட்டம் நடத்தும் வரை பணியாற்றுமாறு கோரியது.அதை அடுத்து அவர் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்.

2015/05/24 ஆம் திகதி மன்றத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கையிலும் பொருளாளர் பதவியில் குறித்த கு. பிரணவராஜா ஒப்பமிட்டுள்ளார். கூட்டத்தில் பழைய நிர்வாகம் தொடர்ந்து இருக்க வேண்டுமென கூறியதால் கூட்டம் முடிந்த பின்னர் தனது பதவியை ராஜினமாச் செய்வதாகக் கூறினார். ஆனால் நிர்வாகத்தினர் தொடர்ந்து பொருளாளராக செயற்படுமாறு கேட்டனர். அதற்கு " தனக்கு வேலைப்பளு அதிகம்" என்பதால் தனது ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளார்.

இதனையடுத்து விசேட நிர்வாக சபைக் கூட்டம் கூட்டப்பட்டு இவரது ராஜினாமாவை ஏற்று புதிய பொருளாளராக நா. நவரத்தினம் தெரிவு செய்யப்பட்டார்– என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)


### 23 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் R.D.A)

திதி: 29.05.2015

நானிலம் போற்றிடும்
ஞானமதை எமக்களித்து
அப்பா நீங்கள் ஞாலம்
விட்டகன்று – இன்று
ஆனதுவோ ஆண்டுகள்
இருபத்து மூன்று

மலர்வு 19.12.1942
உதிர்வு 11.06.1992

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.
தங்கத்தாமரை,
அல்வாய்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 11 . 1929



மறைவு 09 . 06 . 2014

அமரர் அமிர்தலிங்கம் சுப்பிரமணியம்

(முன்னாள் பிராந்திய முகாமையாளர், E.B.Creasy & Co.Ltd. Alcop Cey. Ltd.)

*பாரினில் கடமைகளையெல்லாம் பாங்குடனே*
*ஆற்றி இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்பட்ட எம் குடும்பத்தின் தலைவர்*
*எமையெல்லாம் விட்டுப் பிரிந்து இன்று ஓராண்டு*
*நிறைவெய்தியும் ஆறவில்லை எம் துயர் மீண்டும்*
*ஒரு பிறப்பு இருப்பின் தாங்களே எம் தலைவராக வரவேண்டும்.*
*அதுவரை துயர் தாங்கும் வல்லமையை எமக்குத் தாருங்கள் ஐயா!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"அங்கயம்"
28/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(60204)(4.6.3)

### 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் நவரத்தினம் ஜீவராஜ்

(மின்சாரசபை ஒப்பந்தகார தொழில்நுட்ப மேற்பார்வையாளர்)

மலர்வு 11.08.1985
உதிர்வு 15.04.2015

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா- உந்தன்
பசுமையான பேச்சும் பதுமைநடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
தொலைபேசியில் உந்தன் செய்தி வந்தகணம் முதல்
உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடிய விழி மலர்ந்திட மறுத்தாலும் குஞ்சாவே!
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ்நாள்தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(60270)(4.6.3)

### கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சியின் பிரபல ஜோதிட விஞ்ஞானியும் திருக்கணித பஞ்சாங்க கணிதருமான ஜோதிட திலகம் சிவாச்சாரிய திலகம்

சிவஸ்ரீ. சி.சிதம்பரநாதக்குருக்கள்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி/16200)(4.3.7)

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்.

### துயர் பகிர்கின்றோம்



ஜோதிட இமயம் வேதாகம சோதிட பூஷணம் கலாபூஷணம்

சிவஸ்ரீ. சி.சிதம்பரநாதக்குருக்கள்

திருக்கணித பஞ்சாங்க அதிபர் அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

அரியாலை
வடமேற்கு. (சி/16196)(4.3.6)

வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி
அம்பாள் ஆலய நிர்வாக சபையினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வயிரவநாதர் மயூரன்

(VM URAN Enterprise)

மண் மகிழ 01.04.1979
கண்நெகிழ 09.06.2014

திதி: பூர்வபக்க ஏகாதசி 29.05.2015

அன்பு முகம் கண்டு ஆண்டொன்று ஆனதுவே
ஆறாத்துயர் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே
கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப்போனாலும்
எம்முள்ளே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
ஏகாதசி திதியில் ஏகன் திருப்பாதம் கண்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்

கச்சாய் வீதி.
கொடிகாமம். (C/16191)(4.3.7)

என்றென்றும் ஈரவிழிகளுடன்
மனைவி. பிள்ளைகள்.
மற்றும் குடும்பத்தினர்.

### 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் தயாபாலன் துரைராஜசிங்கம்

(Computer Repairing)

தோற்றம் 26.03.1992
மறைவு 15.04.2015

கடந்த 15.04.2015 புதன்கிழமை அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வன் தயாபாலன் துரைராஜசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

என்றும் நீங்கா நினைவுகளுடன்

கைதடி நுணாவில்.
சாவகச்சேரி. (4165)(4.3.6)

அன்புத் தந்தை, தாய்,
சகோதரி, சகோதரர்கள்.

# இரண்டு செயற்றிட்டங்கள் மாணவருக்குக் கையளிப்பு

தென்மராட்சி, மே 29
தென்மராட்சி கல்வி வலயத்தினால் உருவாக்கப்பட்ட இரு செயற்றிட்டங்கள் மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏனைய கல்வி வலய மாணவர்கள் பயன்படுத்துவதற்கு வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம் பெற்றது.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கென தயாரிக்கப்பட்ட விழுமியக் கல்வி" நூல் மற்றும் இலத்திரனியல் கற்கை நெறியை வலையமைப்பினூடாகக்கற்கும்வன்பொருள் கற்கை இறுவட்டு ஆகியவை நேற்று மாகாண கல்வித் திணைக்களத்தால் ஏனைய 11 வலய மாணவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டன.

வடமாகாணகல்வித்திணைக்களமாகாணகல்விப்பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வேள்ட் விஷன் லங்கா தேசிய இயக்குநர் எஸ். சுரேஸ் பாட்லெட் ஆகியோரும், கௌரவ விருந்தினராக 'சேர்வ்' இலத்திரனியல் கற்கை நெறி நிறுவுநர் ஒலிம்பியன்' கலாநிதி நா. எதிர்வீரசிங்கமும் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் வெளியிடப்பட்ட விழுமியக் கல்வி' நூல் மற்றும் இலத்திரனியல் கற்கை நெறி இறுவட்டு ஆகியவை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரினால்மாகாணகல்வி அமைச்சர் த.குருகுல ராஜாவிடம் கையளிக்கப் பட்டன. அவை மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக அனைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வேள்ட்விஷன் லங்கா தேசிய அமைப்பாளர் எஸ்.சுரேஸ் பாட்லெட் ஆகியோர் உரையாற்றினர்.

வேள்ட் விஜன் லங்கா நிறுவன அனுசரணையுடன் இந்த இரு செயற்றிட்டங்களும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

## ஆளுமை வளர்ச்சிக் கருத்தரங்கு நாளை

இராமகிருஸ்ண மிசன் நிலையத்தினரின் ஏற்பாட்டில் ஆளுமை வளர்ச்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.17, மருதனார் மடம் வீதி உரும்பிராய்ச் சந்தியில் அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு இராமகிருஸ்ண மிசன் நிலையத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தரால் அறிமுகக் கலந்துரையாடல் நடத்தப்படும். இதில் 20 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் பங்குபற்றலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை இராசம்மா (அத்தம்மா)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வேலணை 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசம்மா (அத்தம்மா) 27.05.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் துறையூர் தாழையம்பதி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரம்.
T.P :076 669 4938
(60300) (4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பு செல்லையா

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா அதிகாரி-
Drawing Office Assistant)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட தம்பு செல்லையா நேற்று (28.05. 2015) வியாழக்கிழமை தனது 99 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொக்குவில் தம்பு-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகாதேவா, சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற மனோகர், ரஜனி, மாலினி (பிரான்ஸ்) பவானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாரதா, அம்பிகாவதி, அருளானந்தம் (பிரான்ஸ்), உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, அன்னம்மா, Dr.இராசையா திருநாவுக்கரசு மற்றும் நகுலேஸ்வரி, மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கார்த்திகா (கச்சேரி-திருகோணமலை) தீபிகா, கோகுலன் (Hotel Manager), மதுகிலன், கஜீபன் (பொறியியலாளர்-லண்டன்) சிரோஜன் (லண்டன்), விவேகா, வித்தியன் (பிரான்ஸ்), சகானா (மருத்துவ பீடம்-4ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு பேரனும், கிருத்திஷன், கபிசன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை ஒழுங்கை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
தொ.பே: 077 318 2930
(60206) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தர்மாவதி சிவசிவா



அல்வாய் மேற்கு, திக்கத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தர்மாவதி சிவசிவா 27.05.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லாச்சி தம்பதியினரின் அன்புமகளும்சிவசிவாவின் (முன்னாள் பிரபலவர்த்தகர் சிவாமாளிகை, கல்முனை) அன்பு மனைவியும் சாந்த குமாரி (தலைவர் மனிதவள முகாமைத்துவ துறை,யாழ் பல்கலைக்கழகம்) சிவகுமாரி (சுவிஸ்) திருவாதரன்ஆகியோரின் அன்புத் தாயாரும் A.M.C மகேந் திரன் (அதிபர், யாழ்/சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை) உதயகுமார் (சுவிஸ்) சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்ஜீவன் (யா/இந்துக்கல்லூரி) அட்சயா (வேம்படி மகளிர் கல்லூரி) துவாரகா (சுவிஸ்) துளசிகா(சுவிஸ்) ஜனன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) விதுஷன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) தனுஷன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) விதுஷிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை) யதுஷன்(திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம் )ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரியின் (ஆசிரியை) அன்புச்சகோதரியும் திருமதி இந்திர குமாரி (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு சிறிய தாயாரும் ஜனனி (அவுஸ்திரேலியா) பைரவி (அவுஸ்திரேலியா) பைரஜன் (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும், ஸ்ரீநிகா (அவுஸ்தி ரேலியா)வின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம்(31.05.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டதெணி,
அல்வாய் மேற்கு ,திக்கம்
தொடர்பு : 077 935 2396

தகவல்:
A.M.C மகேந்திரன்
(மருமகன்)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி அமிர்தாம்பிகை சின்னத்துரை

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தாம்பிகை சின்னத்துரை 27.05.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானசேகரம்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அற்புதராணி (யாழ்ப்பாணம்), கோகிலாம்பிகை (பிரான்ஸ்), சிவபாலன் (மீசாலை), தவபாலன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் கிருஸ்ணபாலன் (மல்லாவி), யோகாம்பிகை (மீசாலை), விமலாம்பிகை (பிரான்ஸ்), சிவநந்தினி (பிரான்ஸ்), சிவதர்ஸன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவதர்ஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், துரைசிங்கம் (யாழ்ப்பாணம்), தர்மராசா (பிரான்ஸ்), இராஜேஸ்வரன் (மீசாலை), சுஜீவன் (பிரான்ஸ்), றஜீவன் (பிரான்ஸ்), தவநந்தன் (மானிப்பாய்), சாந்தினி (மீசாலை), மங்கையர்க்கரசி (பிரான்ஸ்), தயாநிதி (மீசாலை), செல்வராணி (மல்லாவி), தர்ஸி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன் சுபாஜினி சுயாந்தினி ஜயந்தன் கிசோக்கா டிலானி நிஸாந்தன் நிரோஜன் பார்த்தன் தினேஸன் ரம்யா விரோஜன் றாகீஸ் கீதா சசி வனிதா ஜனனி சலீபன் பகீரதன் பிரியங்கா எழிலரசி ஓவியன் சோபி சோபன் றொசான் சோபா றக்ஸிகா சாருஜன் தானிக்கா சுமன் ஒலீவன் ரோகினி பேரின்பநாதன் அம்பிகைவதனி சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சபரீஸன் மதுஸன் தர்சனா றரோசன் அஜீஸ் அத்விகா ஆத்மீகன் ஆர்மீகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், அன்னலட்சுமி, தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு
கொடிகாமம்.
(41158) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

மண்ணில்
08 . 05 . 1965



விண்ணில்
26 . 05 . 2015

### திருமதி நந்தினி தனபாலன்

யாழ். புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நந்தினி தனபாலன் 26.05.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ான தயாபரராசா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் பேரானந்தமணி (அனலைதீவு) தம்பதியரின் அன்பு மருமகளும், தனபாலனின் அன்பு மனைவியும், பிரதீபன், நிசாந்தி, லக்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதலட்சுமி(பிரான்ஸ்), மகேந்திரன் (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி), சாந்தினி(யாழ்ப்பாணம்), சிறீதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயலட்சுமி(கிளிநொச்சி), கிருஸ்ணபாலன் (ஜேர்மனி), யோகராணி (யாழ்ப்பாணம்), விஜயபாலன் (நெதர்லாந்து), சிவபாலன் (அனலைத்தீவு), ஜெயகலா(நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெயராஜா, குணவதி, காலஞ்சென்ற தர்மலிங்கம், பிரேம்குமாரி, காஞ்சனாதேவி ஆகியோரின் அன்பு மச்சாளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் உதயகுமாரி, சிவராசா, கயல்விழி, ஜெயந்தினி, ஜெயரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகலியும், சஜிதா அரவிந்தன், கவிகா, மௌலிகா, வசீகரன், கீதன், மஞ்சரி ஆகியோரின் அன்புச் சித்தியும், அஜந்தன், சுஜீத், லக்மி, நேருகா தர்சன், நிருசன், சிவாஜினி துஸ்யந்தன், யோகதீபன், யோகவதனி கலைவண்ணன், லயாசினி நிருபன், உதயா, சர்மிளா, மோகனதீபன் தர்மினி, நந்தீபன், யோகசிவம், நிருபா, சிவரூபன், அர்ச்சனா, ரகீஸ், ரமிசாந்த், சுருதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனலைதீவு.
(60203) (10.6.3)

தகவல்:
மாமி, மைத்துனர், மருமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 24.06.1930 — மறைவு 29.04.2015

மருதங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட
திருமதி
**இலட்சுமிப்பிள்ளை பொன்னையா**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று (29.05.2015)
வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில்
நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)*

ஜெயந்தி நகர்,
இல 74, கிளிநொச்சி

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## பதினெட்டாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் செல்லத்துரை மனோரஞ்சன்**



மலர்வு 22.11.1954 — உதிர்வு 18.05.1997

*திதி: ஏகாதசி*

உற்றவருக்கு உறுதுணையாய்
உலகத்துக்கு உத்தமராய் நாம்
பெற்ற பெருமைகளுக்கு மூலகாரணராய்
மற்றவர்கள் போற்றும் மரியாதைக்குரியவராய் என்றும்
பற்றும் பாசத்தில் பெருந்தகையாய் வாழ்ந்த
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு. (60298)(4.2.3)
**குடும்பத்தினர்.**

## 4 ஆவது ஆண்டில்

மலர்வு 20.07.1938



உதிர்வு 12.06.2011

திதி: வளர்பிறை ஏகாதசி

**அமரர் பார்வதிப்பிள்ளை திருநாவுக்கரசு**

அன்பின் தெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமே
குறைவில்லாது எமை வளர்க்க
அன்பின் உறைவிடமே
நிறைவான வழிகாட்டி நீங்கள்
எத்தனை காலங்கள் கடந்து சென்றாலும்
ஒவ்வொரு நொடிகளிலும் உங்கள் நினைவுதான்
எம் இதயத்தின் துடிப்பாய் என்றும்
எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்....

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

574, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (51316) (4.6.3)

## சித்திரக் கண்காட்சி

'தனு ஆட்' நிறுவனத்தினால், நடத்தப்படும் சின்ன சின்னக் கைகள் சித்திரக் கண்காட்சி, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி மறு நாள் திங்கள் கிழமையும் இடம்பெறவுள்ளது. ஞாயிற்றுக் கிழமை கண்காட்சியைத் திறந்து வைக்கும் நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமாவதி செல்வின் கலந்து கொள்ளவுள்ளார்.

## சங்காபிஷேகம்

புலோலி,மே 29

புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலய கும்பாபிஷேக தின அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறும்.

மாலை 6.30 மணியளவில் வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாநடைபெறும். (ஒ)

## வருஷாப்திகம் (ஓராண்டு நினைவு)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அத்தியடியை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சிவஸ்ரீ நடராஜஐயர் கணேசராஜக்குருக்கள்**

(அத்தியடிப் பிள்ளையார்
கோயில் பிரதமகுரு)



மண்மகிழ 11.04.1958 — விண் தழுவ 08.06.2014

*திதி : பூர்வபக்க ஏகாதசி*

இறைவன் கருவறையில்
உங்கள் வேத மந்திரம் இன்னும்
ஒலிக்கும் சத்தம் கேட்கிறது
காலத்தின் வேகம்
முதலாவது அத்தியாயமாக எம்
கண்ணீரால் எழுதுகின்றோம்
கருவறை முதல் கல்லறை
வரைதான் வாழ்க்கை
நினைவுகளை வார்த்தைகளுள்
அடக்க முடியாமல்...

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*
**மனைவி- க.நித்தியானந்தினி
மற்றும் குடும்பத்தினர்.**



**பிள்ளையார்
கோயிலடி,
அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.**

(60277)(7.4.3)

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 09.03.1969 — உதிர்வு 02.05.2015

கடந்த 02.05.2015 சனிக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்ப ஒளிவிளக்கு

**அமரர் தர்மலிங்கம் விஜயகுமார்**
(சங்கர்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
நாளை (30.05.2015) சனிக்கிழமை
காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித
தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் 31.05.2015 ஞாயிற்றுக்
கிழமை முற்பகல் 10.00 மணியளவில்
எமது இல்லத்திலும் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப
சகிதம் வருகை தந்து அன்னாரது
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின்
மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து
நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல்
தெரிவித்தோருக்கும், கண்ணீர்
அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும்
அவரது இறுதிக்கிரியையில் கலந்து
கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த
அனைத்து உள்ளங்களுக்கும் எமது
உள்ளம் கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

*[இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.]*

**குடும்பத்தினர்.**

அன்னை இல்லம்
15/16, நடுத்தெருலேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 910 3392

## அளவெட்டி கும்பழாவளை தேர்த் திருவிழா

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12நாள்கள் திருவிழா இடம்பெற்று 3ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது.

31ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும், முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 2ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று மாலை 6.30 மணிக்குக் கொடியிறக்கப்படும். மறுநாள் 3ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும் என தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர். (த-36)

## புகைப்பொருள் விழிப்புணர்வு நாளை மறுதினம்

சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத் தினம் மே 31ஆம் திகதி . இந்தத்தினத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் புகைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வு பரப்புரையை மேற்கொள்ளவுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்தார். (த-36)

## புளி விலை திடீர் உயர்வு

யாழ்.குடாநாட்டில் புளியின் விலை 40 ரூபாவால் மீண்டும் அதி கரித்துள்ளது.

கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்டுவந்த புளி 120 ரூபாவாக உயர்ந்தது. பின்னர் 160 ரூபாவாக உயர்த்திருந்த நிலையில் மீண்டும் 40 ரூபாவால் உயர்ந்து 200 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. (த)

## சிறுதானியப் பயிர் மழையால் அழிவு

*வரணிப் பிரதேசத்தில்*

வரணி இடைக்குறிச்சி மாவில் வயல்வெளிப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் கடந்த மாதம் பெய்த மழை காரணமாக வெள்ளம் தேங்கிய நிலையில் முழுமையாக அழிந்த நிலையில் கட்டாந் தரை யாக விளை நிலங்கள் காட்சியளிக்கின்றன.

பூசணி, பயிற்றை,கௌபி போன்ற பயிர்களே இவ்வாறு பெரிய அழிவுக்குள்ளாகியுள்ளன. ஏக்கர் கணக்கில் பயிர் செய்யப்பட்ட போதிலும் மழையினால் பயனைப் பெற முடியாத நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எந்தநேரமும் விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நிலங்களிலே தரித்து நின்று குரங்கு, கிளி போன்றவைகளுக்குக் காவல் இருந்த நிலையில் முதலீடு செய்யப்பட்ட பணம் கூடக் கிடைக்காமல் போயுள்ளதாக அவர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

விவசாயத் திணைக்களம் கமநல சேவை நிலையம் ஊடாக பயிரழிவு தொடர்பான விவரங்களை கோரியுள்ள நிலையில் உரிய நட்ட ஈட்டைப் பெற ஆவன செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (த-122)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுச் சபை கூடியது திருமலையில்



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை கிளை மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தலைவர் டாக்டர் ஈ. ஜீ. ஞானகுணாளன், கிளைச் செயலாளரும் தேசிய செயலாளருமான எஸ். எச். நிமால்குமார், பொருளாளர் எஸ். ஜெயசங்கர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சகல பிரதேசக் கிளைப் பிரதிநிதிகள், இளைஞர் பிரிவுத் தலைவர் ஏ. ஜே. பிரேமராஜா, இளைஞர்உறுப்பினர்களுடன்கிளை நிறைவேற்று அதிகாரி டாக்டர். என். ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தலைவர் டாக்டர் குணாளன் உரையாற்றும்போது, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அங்கத்தவர்களினதும் தொண்டர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. தொண்டர்கள் தான் செஞ்சிலுவை இயக்கத்தின் முதுகெலும்பாவார்கள். சகல பிரிவுகள், அலகுகளது தலைவர்கள் தங்க ளது பிரதேசத்தில் பாதிப்புக்குட்பட்ட மக்களது நலனைக் கருத்திற் கொண்டு மனிதாபிமான, சமூகச் செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல் வேண்டும். மேலும் தத்தமது பிரிவுகளில் கூடுதலான அங்கத்தவர்களையும் தொண்டர்களையும் இணைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுதல் வேண்டும் எனக் கூறினார்.

தேசிய செயலாளர் தமதுரையில், கடந்த 2004 முதல் 2009 வரை எமது சங்கம் கூடுதலான வெளிநாட்டு நிதியுதவியினைப் பெற்று பல மனிதாபிமானச் செயற்றிட்டங்களை முன்னெடுத்தது. கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது நாடு மத்திய வருமானமுள்ள நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின் நன்கொடையாளர்கள் நிதியுதவி செய்வதிலிருந்து பின்வாங்கத் தொடங்கினர். அது மட்டுமல்ல சர்வதேச ரீதியில் பணப்புழக்கம் வீழ்ச்சியடைந்ததும் நிலைமை பாதிப்படைந்ததும் ஒரு காரணமாகும் எனக் கூறினார்.

கூட்டத்தின் இறுதியில் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட நேபாள மக்களுக்கான நிவாரண நிதியுதவிக்காக நிதிசேகரிப்பில் தங்களது அர்ப்பணிப்பை வழங்கிய இளைஞர்கள் விருதுகள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (த-40)

## பஸ்-சைக்கிள் விபத்தில் ஒருவர் தலையில் காயம்

மல்லாகம் பங்காளா வீதிக்கு அருகில் இடம் பெற்ற பஸ்-சைக் கிள் விபத்தில் ஒருவர் தலையில் காயத்துக்கு உள்ளாகித் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 6.45 மணியளவில் பங்களா வீதிக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் காயத்துக்கு உள்ளாகிய நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாவிட்டபுரத்தில் இருந்து கொழும்பு செல்வதற்காக யாழ்ப்பாணம் சென்ற பஸ் முன்னால் சைக்கிளில் சென்றவரை முந்திச்செல்ல முற் பட்டவேளை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பஸ் சாரதி பஸ்ஸில் வந்த பயணி போன்று நடித்துப் பொது மக்களைச் சமாதானப்படுத்திவிட்டு பஸ்ஸை எடுத்து செல்லச் சாரதியின் ஆசனத்தில் ஏற முற்பட்ட நிலையில் அந்த இடத்தில் நின்ற பொது மக்கள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்து ஆத்திரமுற்று பஸ்ஸை எடுக்க விடாது தடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து தெல்லிப்பழைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டதுடன் பஸ்ஸையும் சையிக் கிளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். . (த-86)

## சிரேஷ்ட மருத்துவ நிர்வாகிகளை நியமிக்கும் தேர்வு கொழும்பில்

சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் வெற்றிடமாகக் காணப்படும் 76 சிரேஷ்ட மருத்துவ நிர்வாகிகளை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு ஜுன் 6ஆம், 7ஆம் திகதிகளில் கொழும்பு சுகாதார அமைச்சில்நடைபெறுமெனஅமைச்சின் செயலாளர் டி.எம்.ஆர்.பி. திஸாநாயக்கா அறிவித்துள்ளார்.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது விண்ணப்பித்தவர்களில் 66பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனையின் பின்னர் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த மருத்துவ் நிர்வாகிகள் இருவர் உட்பட 6 தமிழர்களும் 3 முஸ்லிங்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது . (த-9)

## வீதியோரக் குப்பையால் கடுமையான துர் நாற்றம்



கொழும்புத்துறை, மே 29

யாழ்.இராசாவின் தோட்ட வீதியில் அருள்மாதா ஆலயப் பகுதியில் வீதியோராமாக குப்பைகள், மாமிசக் கழிவுகள் நிறைந்து காணப்படுகின்றன. அதிலிருந்து வீசும் துர்நாற்றம் வீதியால் பயணிப்போரை அசௌகரியங்களுக்கு உள்ளாக வைக்கிறது.

அந்தப் பகுதியில் சேரும் கழிவுகள் பல வாரங்களாக யாழ்.மாநகர சபையால் அகற்றப்படவில்லை. இதனால் துர்நாற்றம் வீசி வருவதுடன், விலங்குகள், பறவைகள் அசேதனக் கழிவுகளை வீதிக்கு இழுத்து வருவதனால் பல சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள அருள் மாதா ஆலயம், கிறிஸ்தவ சபை ஆலயம் என்பனவற்றுக்கு வரும் பக்தர்கள் பல சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர். (த-135)

## யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் ஆய்வரங்கு

### கட்டுரைகள் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 29

அறிவைப் பகிர்வதன் ஊடாக படைப்பாற்றலை ஏற்படுத்துதல் எனும் தொனிப்பொருளிலான சமகால முகாமைத்துவ ஆய்வரங்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. அதற்கான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஆய்வரங்குக்கான குழு கேட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழகமொன்று சமூகத்திற்கான அறிவியல் பங்களிப்பை வழங்க வேண்டுமென்பது அதன் பொறுப்புகளில் ஒன்று. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஆராய்ச்சியில் ஈடுபடுவது மற்றும் சமூகத்துடன் ஒன்றித்த வகையிலாக பங்களிப்புக்களை மேற்கோள்ள வேண்டுமென்ற கடப் பாடு காணப்படுகிறது.

அறிவியல் விருத்திக்கு ஆய்வுகள் மேற்கொள்வது முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். அதனூடாகப் பிராந்திய,தேசிய அபிவிருத்திக்கு அறிவு மற்றும் புத்தாக்கத்தினூடாக உற்பத்தித் திறனை மேம்படுத்த மேற்கொள்ளப்படுகின்றன. நிர்வாக முகாமைத்துவ ரீதியில் நிறுவனங்களை வலுவூட்ட, திட்டங்கள், கொள்கைகளை வகுக்க இந்த ஆய்வரங்கு பங்களிப்புச் செய்யும்.

இதற்குக் கணக்கீடும் நிதியும், வங்கியியலும் காப்புறுதியும், வணிகப் பொருளியல், வணிகமும் சட்டச் சூழலும், முயற்சியாண்மையும் செயற்பாட்டு முகாமைத்துவமும், சூழல் முகாமைத்துவம், சமூகப் பொறுப்பு, தகவல் தொழினுட்பமும் தொடர்பாடலும், சர்வதேச வியாபாரமும் நிதியும், அறிவு முகாமைத்துவம், சந்தைப் படுத்தலும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவமும், செயற்பாட்டு ஆய்வு, நிறுவன நடத்தையும் மனிதவள முகாமைத்துவமும், தந்திரோபாய முகாமைத்துவம், சுற்றுலாத்துறை விருந்தோம்பல் மற்றும் நிகழ்வு முகாமை ஆகிய தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுச் சுருக்கம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 15 ஆம் திகதி ஆய்வுச் சுருக்கமும் ஏற்பறிவிப்பும், 30 ஆம் திகதி ஆய்வுக் கட்டுரை கையளிப்பும், ஜுன் 20 ஆம் திகதி ஆய்வுக் கட்டுரை ஏற்பறிவிப் பும், 21ஆம் திகதி ஆய்வரங்குப் பதிவும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி ஆய்வரங்கும் இடம்பெறும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)


## சமூக சேவைகள் அலுவலர் படுகொலைக்குக் கண்டனம்

தென்மராட்சி, மே 29

கிழக்கு மாகாண நாவிதன்வெளி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சச்சிதானந்தன் மதிதயனின் படுகொலையை வடக்கு மாகாண சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர்கள் சங்கம் வன்மையாக கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை இயங்கிய காலம் தொடக்கம் எம்முடன் இணைந்து பல வேலைத் திட்டங்களில் துடிப்புடன் ஈடுபட்ட மதிதயன் தனது சேவைக்காலத்தில் போர்க் காலத்திலும், போருக்குப் பின்னரான காலத்திலும் நலிவுற்ற குடும்பங்களுக்கு நிறைந்த சேவைகளை வழங்கியுள்ளார்.

இவரது அர்ப்பணிப்பான சேவைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் அவரைப் படுகொலை செய்த பாதகர்கள் தண்டிக்கப்படல்வேண்டும். தனது பிரதேசத்தில் மட்டுமல்ல கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் நலிவுற்ற மக்களுக்கு அளப்பரிய சேவைகளை வழங்கிய உத்தியோகத்தரின் சேவைகளைத் தடுக்கும் வகையில் படுகொலை செய்ததை சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (த-9)



# மோடி - மன்மோகன்சிங் திடீர் சந்திப்பு

டில்லி,மே29
டில்லியில் பிரதமர் மோடியை மன்மோகன் சிங் நேற்று முன்தினம் திடீரென சந்தித்துள்ளார்.
டில்லி ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்துக்கு மன்மோகன்சிங் சென்று அங்கு மோடியைச் சந்தித்துள்ளார். மன்மோகன் சிங்கன் சந்திப்பு முடிவடைந்த சிறிது நேரத்தில் மோடி ரூவிற்றர் வலைத்தளத்தில் இது குறித்து பதிவேற்றியுள்ளார். (14)

# விமானியின் சாமர்த்தியத்தால் உயிர் தப்பிய 37 பயணிகள்

டூலா,மே29
எயார் பிரான்ஸ் விமானங்களில் ஒன்று தென்னாபிரிக்காவின் உயரமான மலை மீது மோதி விபத்தில் சிக்கவிருந்த தகவலை அதிகாரிகள் வெளியிட் டுள்ளனர்.
கடந்த 2 ஆம் திகதி 37 பயணிகளுடன் மாலபோவில் இருந்து கமரூமின் பெரிய நகரமான டூலாவுக்கு எயார் பிரான்ஸ் விமானம் சென்றது. அந்த விமானம் மாலபோவில் இருந்து புறப்படும் போதே விமானத்தின் தானியங்கி எச்சரிக்கை மணி பிரச்சினையாக இருந்துள்ளது. இந்த சமயத்தில் புயல் காரணமாக விமானமானது அதன் நிலையான பாதையில் இருந்து மாற்றி வேறு பாதைக்கு அனுப்பப்பட்டது.
இந்த நிலையில் திசைமாறிய விமானம் 13 ஆயி ரத்து 255 அடி உயரமுள்ள கமரூமின் மலையில் மோதும் நிலைக்குச் சென்றுள்ளது. ஆனால் அந்த சிக்கலான சமயத்தில் எச் சரிக்கை மணி ஒலிக்கவில்லை. உடனே தயாரான விமானி சரியான கோணத்தில் விமானத்தைத் திருப்பி பெரிய விபத்தைத் தவித்தார். இந்தத் தகவல், விபத்து விசாரணை அதிகாரிகள் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. புயல் காரணமாக விமானம் திருப்பி விடப்பட்டதும்; எச்சரிக்கை மணி சரியாக வேலை செய்யாமல் இருந்ததும் தான் இதற்குக் காரணம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், சரியான நேரத்தில் திறமையாகச் செயற்பட்ட விமானியால் நடக்கவிருந்த அசம்பாவிதம் தடுக்கப்பட்டுவிட்டதாகவும் கூறியுள்ளனர். (14)

# வாழ்வில் சுவையான அனுபவத்தை இழந்துவிட்டேன்

## மனம் திறக்கிறார் பாப்பரசர்

வத்திக்கான்,மே29
உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை குருவாக விளங்கும் புனித பாப்பரசர் பிரான்சிஸ் தனது வாழ்வில் சுவையான அனுபவம் ஒன்றை இழந்துவிட்டேன் என்று கூறியுள்ளார்.



அர்ஜென்ரீனா நாளிதழ் ஒன் றுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் அளித் துள்ள பேட்டியில், கால்பந்தாட்ட இரசிகரான நான் கடந்த 1990 ஆம் ஆண்டில் இருந்து தொலைக்காட்சி பார்ப்பதை நிறுத்திவிட்டேன். இதற்குத் தனிப்பட்ட காரணம் எதுவும் கிடையாது, நான் மேரி மாதா மீது சத்தியம் செய்தேன், இனிமேல் நான் தொலைக்காட்சி பார்க்க மாட்டேன் என்று, அந்தச் சத்தியத்தை இன்றுவரை காப்பாற்றி வருகிறேன்.
அவ்வாறு கால்பந்தாட்டத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், எனது மெய்காப்பாளரிடம் ஆட்டத்தின் வெற்றி, தோல்வியை பற்றி கேட்டு தெரிந்துகொள்வேன். தலைமை பாப்பரசராகப் பதவியேற்ற பின்னர், பணிச்சுமை எனக்கு அதிகரித்துவிட்டது, ஆயிரக்கணக்கான பிரச்சினைகளை கையாளும் நான் வாழ்வில் ஒரேயொரு சுவையான அனுபவத்தை இழந்துவிட்டேன் என்று கூறியுள்ளார். (14)

# மடகாஸ்கர் ஜனாதிபதியை நீக்க நாடாளுமன்றில் வாக்களிப்பு

அன்ரானாரிவோ,மே29
ஆபிரிக்க நாடான மடகாஸ்கரின் ஜனாதிபதியான ரஜ்வா நரிஹ்மன்ப்பியானாவைப் பதவி நீக்கம் செய்வதற்கு அந்த நாட்டின் நாடாளுமன்றம் வாக்களித்துள்ளது.



நாடாளுமன்றத்திலுள்ள 125 உறுப்பினர்களில் நால்வரைத் தவிர ஏனைய அனைவரும் ஜனாதிபதியைப் பதவி நீக்குவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.
நாட்டின் அரசியல் சாசனத்தை ஜனாதிபதி மீறினார் என அவர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அது மட்டுமன்றி அவர் திறமையற்றவர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.
மடகாஸ்கரில் முன்னெடுப்பதாக கூறிய சீர்திருத்தங்களை அவர் செய்யவில்லை, உயர்நீதிமன்றத்தை அமைக்கத் தவறினார் என்றும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. முன்னதாக ஜனாதிபதிக்கு தமது ஆதரவைத் தெரிவித்த அமெரிக்கா, நாட்டின் ஸ்திரத் தன்மையை முன்னிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டது.
கடந்த வருடம் ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தலில் ரஜவா நரிஹ்மன்ப்பியானா வெற்றி பெற்றதை அடுத்து அங்கு பத்து வருடங்களாக நிலவிய அரசியல் கொந்தளிப்பு முடிவுக்கு வந்துள்ளது. (14)



# வெயிலால் 1,367 சாவு

ஐதராபாத்,மே29
கொடும் வெயிலின் தாக்கம் தமிழகம் மட்டுமின்றி ஏனைய மாநிலங்களிலும் அதிகமாகக் காணப்படுகிறது. ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் அதிகபட்சமாக 116.6 டிகிரி வரை வெயில் கொளுத்துகிறது. இதனால் பகல் நேரங்களில் அனல் காற்று வீசுகிறது. பொது மக்கள் எங்குமே தலை காட்ட முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளனர்.
கொளுத்தும் வெயிலைச் சமாளிக்க முடியாமல் ஆந்திராவில் தினமும் ஏராளமானோர் உயிரிழந்து வரும் நிலையில் ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் வெயிலுக்கு இதுவரை ஆயிரத்து 367 பேர் உயிரிழந்துள்ளனர். அக்னி வெயில் தொடங்கிய நாளில் இருந்து இதுவரை ஆந்திராவில் ஆயிரத்து 27 பேரும், தெலுங்கானாவில் 340 பேரும் உயிரிழந்துள்ளனர். (14)

# ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்துக்கு அரபு நாடுகள் அதிக ஆதரவு

கட்டார்,மே29
ஈராக் மற்றும் சிரியாவின் ஒரு சில பகுதிகளைப் பிடித்து வைத்து உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்தப் பகுதிகளை இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர்.



மேலும் சுற்றி உள்ள அரபு நாடுகளுக்கு அச்சுறுத்தலாகவும் விளங்கி வருகிறார்கள். அதனைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது போர் தொடுத்து வருகிறார்கள்.
ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்துக்கு அரபு நாடுகளில் ஆதரவு எவ்வாறு உள்ளது என அல்ஜசீரா அரபிக் செய்தி சேனல் நடத்திய ஒன்லைன் கருத்து கணிப்பில், ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் வெற்றியை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? எனக் கேள்வி கேட்கப்பட்டு இருந்தது. இந்தக் கேள்விக்கு 81.3 சதவீதம் பேர் ஆம் எனவும், 18.7 சதவீதம் பேர் இல்லை எனவும் பதில் அளித்துள்ளனர். (14)

# நாய்க்கும் தங்கக் கடிகாரம்

பீஜிங்,மே29
சீனாவில் பிரபல ரியல் எஸ்டேட் அதிபராக இருப்பவரும் சீனாவின் பெரும் கோடீஸ்வரர்களில் ஒருவருமான வாங்ஜியன்லின் என்பவர், தனது வீட்டில் உயர் ரக நாய் ஒன்றுக்கு அதன் முன்கால்களில் விலை உயர்ந்த தங்க கடிகாரத்தை அணிவித்துள்ளார்.
இந்தக் கடிகாரம் அப்பிள்; நிறுவனம் தயாரித்துள்ள விலை உயர்ந்த டிஜிற்றல் வசதி கொண்டதாகும். தங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள அந்தக்கடிகாரம் 7 லட்சம் ருபா (இந்திய) மதிப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)



# மக்களைத் துன்புறுத்தும் ஹமாஸ் அமைப்பு

பலஸ்தீனம்,மே29
ஹமாஸ் அமைப்பு தனது சொந்த மக்களுக்கு எதிராக ஆள்கடத்தல், சித்திரவதை, கொலை போன்ற அட்டூழியங்களைச் செய்வதாகச்



சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.
இஸ்ரேலுடனான கடந்த வருட மோதல் காலத்தில், சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் இருபதுக்கும் அதிகமானோருக்கு சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அந்த அமைப்பின் ஆவணங்கள் காட்டுகின்றன. பலஸ்தீன பத்தா அமைப்பின் பல உறுப்பினர்கள் சித்திரவதைக்கு உள்ளானதாகவும் அது கூறுகின்றது. (14)

# ஐ.எஸ். வெறியாட்டம்; 20 பேர் சுட்டுக்கொலை

பால்மைரா, மே 29
பால்மைரா நகரைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அமைப்பு அங்குள்ள கலையரங்கத்தில் வைத்து 20 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.




ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த வாரம் சிரியாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பால்மைரா நகரை கைப்பற்றினர்.
இந்த நிலையில் அங்கு பொது மக்கள் முன்னிலையில் தங்களது வெறியாட்டத்தை ஐ.எஸ் அமைப்பு அரங்கேற்றியுள்ளது. சிரியாவின் பழைமையான நகரமான பால்மைராவில் உள்ள ரோமானிய கலையரங்கம் அருகே பொதுமக்கள் ஏராளமானோரைத் திரட்டினர். அவர்களின் முன்பாக, தங்களுக்கு எதிராகப் போராடிய 20 பேரைச் சுட்டுக் கொன்று சாவுத் தண்டனையை பயங்கரவாதிகள் நிறைவேற்றினர் என்று சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ராமீ அப்துல்ரஹ்மான் தெரிவித்துள்ளார். (14)

# யேமன் கிளர்ச்சியாளர்கள் மீது சவூதி விமானப்படை குண்டுமழை

## பொதுமக்கள் வேறு நாடுகளுக்கு ஓட்டம்

சனா,மே29
யேமன் நாட்டில் ஜனாதிபதி மன்சூர் ஹாதியின் ஆட்சிக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் வான்வழியாகத் தாக்குதல் நடத்தி வருகின்றன.
உள்நாட்டுப் போர் தொடங்கிய கடந்த இரண்டு மாதங்களில் நடத்தப்பட தாக்குதலை விட மிகப் பெரிய தாக்குதலை சவூதி கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் நடத்தின. முக்கியமாக தெற்கு சனாவில் உள்ள ஹவுத்தி போராளிகள் முகாம் மற்றும் பஜ் அட்டான் பகுதியில் உள்ள அவர்களின் ஆயுத கிடங்கு மீது சவூதி விமானப்படைகள் குண்டு மழை பொழிந்தன.
இதேபோன்று, செங்கடலை ஒட்டியுள்ள ஹொடைடா, சவூதி எல்லையின் வடபகுதியில் உள்ள ஹஜ்ஜா மற்றும் டலே மாகாணத்தின் தெற்கு பகுதியில் உள்ள ஹவுத்தி போராளிகளுக்குச் சொந்தமான முகாம்கள் மீதும் சவூதி விமானப்படைகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதல்களில் மொத்தமாக சுமார் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பொதுமக்கள் அருகில் இருக்கும் நாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகிறார்கள். (14)





## உயிர் தப்பினார் லிபியா பிரதமர்

பெங்காசி,மே29
லிபியாவில் முன்னாள் ஜனாதிபதி கடாபி தலைமையிலான அரசு வீழ்ச்சிக்குப் பின்னர் இருவேறு அரசுகள் நாட்டை ஆண்டு வருகின்றன. இதில் பிரதமர் அப்துல்லா அல்–தின்னி தலைமையிலான அரசை சர்வதேச நாடுகள் அங்கீகரித்துள்ளன.
அங்கு இரு அரசின் படைகளுக்கு எதிராக அடிக்கடி தாக்குதல்கள் நடந்து வரும் நிலையில், பிரதமர் அப்துல்லா அல்–தின்னியையும் மர்ம நபர்கள் தாக்க முயன்ற தகவல் வெளியாகியுள்ளது. நாடாளுமன்றக் கூட்டம் ஒன்றை முடித்து திரும்பும் வழியில் இந்தக் கொலை வெறித் தாக்குதல் நடந்ததாக அவரே கூறியுள்ளார்.
இந்தத் தாக்குதலின் போது ஏராளமான துப்பாக்கிக் குண்டுகள் எங்களை நோக்கி வந்தன. ஆனால் நாங்கள் அதிர்ஷ்டவசமாக தப்பினோம். கடவுளுக்கு நன்றி என்று அவர் கூறியுள்ளார். எனினும் இந்தத் தாக்குதலில் பாதுகாவலர் ஒருவர் காயமடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தகவல்கள் எதையும் அல்–தின்னி கூறாத நிலையில், நாடாளுமன்றம் மீது தாக்குதல் நடத்த முயன்ற கூலிப் படையினரே இந்தத் தாக்குதலிலும் ஈடுபட்டிருந்ததாக அவரது அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (14)

## ஒபாமாவின் மகள் மீது காதல்

நைரோபி,மே29
கென்யாவைச் சேர்ந்த வழக்கறிஞர் கிப்ரோனோ என்பவர், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மகளை 7 வருடங்களாகக் காதலிப்பதாகக் கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
'தி நைரோபி' பத்திரிகைக்கு அந்த வழக்கறிஞர் அளித்துள்ள பேட்டியில், கடந்த 2008 ஆம் ஆண்டு முதன் முதலாக ஒபாமாவின் மகள் மலியாவை(வயது–16) பார்த்தேன், அன்று முதல் அவரைக் காதலிக்க ஆரம்பித்துவிட்டேன். எனது வாழ்க்கையில் எந்தப் பெண்ணையும் காதலித்ததில்லை, அதனால் அவ[illegible]கு வாழ்நாள் முழுவதும் உண்[illegible]யாக இருப்பேன், மேலும் இது தொடர்பாக ஜனாதிபதி ஒபாமாவுக்கு கடிதம் எழுத இருக்கிறேன்.
அத்துடன் கென்யா வரும்போது மலியாவை அழைத்துவருமாறு ஒபாமாவிடம் வலியுறுத்தவுள்ளேன். அவ்வாறு நான் மலியாவைச் சந்தித்தால், பாரம்பரிய முறைப்படி எனது காதலை அவரிடம் வெளிப்படுத்துவேன். திருமணத்துக்குப் பின்னர் மலியாவுக்கு பால் கறக்கவும், சோளக் கஞ்சி செய்யும் கெலேஞ்சின் பெண்களின் பாரம்பரியம் குறித்தும் கற்றுக் கொடுப்பேன் என்று கூறியுள்ளார். அத்துடன் அதிபர் ஒபாமாவுக்கு 50 மாடுகள், மற்றும் 70 ஆடுகளைத் தருகிறேன் என்றும் கூறியுள்ளார்.
ஒபாமா மகளின் செல்வாக்கைக் கொண்டு அவர் மீது காதல் கொண்டீர்களா? என்ற கேள்விக்கு, மலியாவுடன் எளிமையான வாழ்க்கையை வாழ விரும்புவதாக கிப்ரோனோ தெரிவித்துள்ளார். (14)



## பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது

ஜெனிவா,மே29
உலகளவில் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக ஐ.நாவின் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.
ஆபிரிக்காவின் பல நாடுகளில் இன்னும் அதிகமானவர்கள் பட்டினியால் வாடுகின்றனர். கடந்த 25 வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபை உலகளவில் பட்டினியால் வாடும் மக்கள் தொகையைக் கணக்கிட்டு வரும் நிலையில், அந்தத் தொகை இப்போது 800 மில்லியனுக்கும் குறைவாகவுள்ளது என ஐ.நாவின் ஓர் அங்கமான உணவு மற்றும் விவசாய அமைப்பு கூறியுள்ளது.
உலகின் மக்கள் தொகை பெருகி, மோதல்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்டாலும், பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.
இந்த வருடத்தின் இறுதிக்குள் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடைவதில் பெரும்பாலான நாடுகள் வெற்றி கண்டுள்ளன என்றும் ஐ .நா. கூறுகிறது.
பட்டினியிலிருந்து மக்களை விடுவிப்பது தொடர்பில் கிழக்கு ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவு நாடுகள் ஆகியவை வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளன. எனினும் சஹாரா பாலைவனத்துக்குத் தெற்கே உள்ள பகுதியிலேயே இன்னும் உலகளவில் பட்டினியின் தாக்கம் அதிகமாகவுள்ளது என ஐ நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு கூறுகிறது. (14)





## வடதுருவத்தில் எண்ணெய் அகழ்வதற்கு எதிர்ப்பு

வொஷிங்டன்,மே29
இதுவரை கண்டுபிடிக்கப்படாமல் இருக்கும், உலக இயற்கை வாயு வளத்தில் மூன்றில் ஒரு பங்கையும், எண்ணெய் வளத்தில் எட்டில் ஒருபங்கையும் வடதுருவம் தன்வசம் கொண்டிருக்கிறது.
ஆகவே, வடதுருவத்தில் பெற்றோலிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவது ஒன்றும் அதிசமான விடயமல்ல. அலஸ்கா கரையோரமாக பெற்றோலியம் அகழ்வதற்காக ஷெல் நிறுவனத்துக்கு அண்மையில் அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், அதற்கு சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மத்தியில் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. மாசடைதலை தவிர்ப்பதற்காக புதிய தொழில்நுட்பத்தை சர்வதேச பெற்றோலிய நிறுவனங்கள் தேடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த அனுமதி என்பது இனிமேல் இந்த நிறுவனங்கள், வடதுருவத்தில் பெற்றோலிய அகழ்வில் நம்பிக்கையுடன் ஈடுபட வழிசெய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## உலகின் குட்டி பேரழகியாக உக்ரைன் சிறுமி தெரிவு

கீவ்,மே29
வடமேற்கு உக்ரைனைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமி உலகின் குட்டிப் பேரழகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
உக்ரைனின் லட்ஸ்க் நகரைச் சேர்ந்த 10 வயதுசிறுமியான அன்னா கிலிமோவெட்ஸ், ரஷ்யாவின் புகழ்மிக்க சமூக வலைத்தளமான 'விகொண்ட்டாக்டே' மூலம் துருக்கி நாட்டின் போட்ரம் நகரில் நடைபெற்ற உலகின் குட்டி அழகு ராணிப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார்.
ஒழுக்கம், பாரம்பரிய உடை மற்றும் நவநாகரிக உடை அணியும் நேர்த்தி, அறிவுத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த 10 நாள்களாக ஒன்லைன் மூலம் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் அன்னா கிலிமோவெட்ஸ், முதலிடத்தைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதேபோன்று, உலகின் குட்டி ஆணழகனாக உக்ரைன் நாட்டின் டெர்னோபில் பகுதியைச் சேர்ந்த அர்சேனி மகேகா என்ற சிறுவன் தெரிவு செய்யபட்டுள்ளான். (14)






# யோகர் சுவாமிகளின் வழிவந்த மார்க்கண்டு சுவாமிகள்

ந.சண்முகராசா

ஈழநாடு செய்த தவப்பயனாக சித்தர் பரம்பரையில் அவதரித்த கடையிற் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக கருதப்படுபவர் செல்லப்பா சுவாமிகள். இவரைத் தேரடிச் சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமிகளின் சீடராக யோகர் சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத் திங்கள் 17 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை (29.01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக்குட்டி அம்மையார். மார்க்கண்டு சுவாமிகளுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர். சுவாமிகள் ஆரம்பக் கல்வியை பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும், வடலியடைப்பு சைவ வித்தியாலயத்திலும் கற்று, பின்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்று கேம்பிறிட்ஜ் சீனியர் தேர்வில்சித்தியடைந்ததுடன், அவரது பாடசாலைப் படிப்பு முற்றுப் பெற்றது. மார்க்கண்டு சுவாமிகள் தனது ஊரில் அமைந்துள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் சிவத்தொண்டுகள் செய்து, திருமுறைப் பாடல்களைப் பாடி பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். இந்தக் காலப்பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது. சுவாமிகள் நேரத்துக்கு அலுவலகத்துக்குச் செல்லுதல், அன்றாட வேலைகளை அன்றன்றே செய்தல், செவ்வனே செய்தல் ஆகிய தொழில் சீர்த்துவம் தொடக்கத்திலேயே அவரிடம் தெரியலாயிற்று. சத்தியம், சாந்தம், இன்முகம், பரோபகாரம் எனும் பண்புகளால் ஒரு நல்லவராக மற்றையோரால் மதிக்கப்பட்டார். சுவாமி பணத்தைப் பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரம்மச்சரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித்தம் வாய்ந்தவர். விடுமுறை நாள்களில் தனது சொந்த ஊரான பிரான்பற்றுக்கு வருகைதந்து பெற்றோரைப் பேணினார். சகோதரிகளின் திருமணச் சடங்கை நிறைவேற்றினார். கோயில் திருப்பணி, பாடசாலை, வாசிகசாலை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை அடைவதற்காக உபயோகிக்கும் உறுதியையும் உடையவரானார். காலையிலும், மாலையிலும் தியானம் செய்தல் வேண்டும் என்ற ஒழுங்கைத் தவறாது மேற்கொண்டார். இந்தக் காலப் பகுதியில்தான் யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க்கண்டு சுவாமிகளுக்குக் கிடைத்தது. தெய்வ சித்தம் எவ்வித சிவத்தொண்டுக்காக அவரைத் தோற்றுவித்ததோ அந்தத் தொண்டை நிறைவு செய்வதற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன. குருநாதரான யோகர் சுவாமிகள் தனது சீடரான மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆன்மிகப் பயணம் தொடர்பானவற்றை தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும், செயலாலும், இடைஇடையே திருமுகங்கள் மூலமாக உணர்த்திய பின்னர் அவரை சுயமாக இயங்க விட்டார். மார்க்கண்டு சுவாமிகள் தியத்தலாவையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறிது காலம் தொழில்புரிந்தார். இந்தக் காலப் பகுதியில் கல்விமான்கள் நடத்திய சைவ சித்தாந்த வகுப்புக்களுக்கும் சென்று வந்தார். சுவாமிகள் 50 ஆவது வயதில்தனது உத்தியோகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து கொழும்பில் இருந்து நேரே கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் குடிகொண்டிருந்த கொட்டிலை வந்தடைந்தார். குருநாதரான யோகர் சுவாமிகள் அவரை ஏற்று வண்ணார் பண்ணையில் ஒரு வீட்டில் தங்கவைத்தார். பின்னர் கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில் 29.12.1950 ஆம் ஆண்டு மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் அந்த ஆச்சிரமத்தில் தங்கியிருந்து உயர் ஞான சாதனையில் ஈடுபட்டார். சில வேளைகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவதொண்டன் நிலையத்துக்கும் சென்று வருவார்.

யோகர் சுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்கவைத்து இராம்ஸ போதத்துக்கு அருளுரை வழங்குமாறு கூறினார். சோல்பரி பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப்போல அன்பு செலுத்தி எந்தவித வசதிகளையும் எதிர்பாராத ஒரு தொண்டனாகவும், தோழனாகவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார். அமெரிக்கத் துறவு சுப்பிரமுனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, ஆஸ்திரேலிய பன்றிக் குட்டிச் சுவாமிகள் உட்படப் பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் மார்கண்டு சுவாமிகளிடம் அருளாசிபெற்று வந்தார்கள். சில பௌத்த துறவிகள்கூட மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.



மார்க்கண்டு சுவாமிகள் தமது அந்திம காலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் உமது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார். அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தமது இறுதி நாள்களில் குளிப்பு, முழுக்கு முதலியவற்றைக் கைவிட்டதோடு உணவையும் பெரிதாகச் சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்து இருந்தபோது வைத்திய கலாநிதி யோகு பசுபதி அவர்கள் பார்வையிட வந்தபோது தமக்கு எந்தவித வருத்தமும் இல்லை எனக் கூறி பார்வையிட அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் சும்மாயிருந்து இரத்தாசி வருடம் வைகாசி மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார். மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன்பிறந்த சகோதரியின் பேரனால் மார்க்கண்டு சுவாமிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சபையால் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சபையால் மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் சமூகப் பணிகள், சமயப் பணிகள், கலாசாரப் பணிகள் போன்ற பல பணிகள் சபையால் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன.

# மீண்டும் அறிமுகமாகும் தீவா காணி அதிர்ஷ்டம்

தனது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மாற்றியமைக்கும் வகையில், வருடாந்தம் முன்னெடுக்கும் 'தீவா காணி அதிர்ஷ்டம்' நிகழ்வை தொடர்ச்சியான ஐந்தாவது வருடமாகவும் 2015 மே மாதம் முதலாம் ஆம் திகதி முதல் ஜுலை மாதம் 31ஆம் திகதி வரை முன்னெடுத்து வருகிறது.

ஹேமாஸ் மெனுஃபெக்ஷரிங் நிறுவனத்தின் முன்னணி டிடர்ஜன்ட் வர்த்தக நாமமான தீவா, நுகர்வோருக்கு ஆடைகளை கழுவும் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், நுகர்வோருக்கு சகாயமான விலையில் ஆடைகளை கழுவும் பவுடர் வகைகளை அறிமுகம் செய்த வண்ணமுள்ளது. கடந்த வருடங்களில் தொடர்ச்சியாக தனது உற்பத்திகளை மேம்படுத்தியிருந்ததுடன், அண்மையில் தனது புதிய உற்பத்தி தெரிவுகளை அறிமுகம் செய்திருந்தது.




உள்நாட்டு டிடர்ஜன்ட் சந்தையில் முன்னோடியாக திகழும் தீவா, தனது நுகர்வோருடன் தொடர்ந்தும் தொடர்புகளை பேணியிருந்தது. தமக்கென சொந்தக் காணியொன்றை கொண்டிருப்பது என்பது பல இலங்கையர்களின் கனவாக திகழ்கிறது. இதற்கமைய, தீவா இலங்கையர்களுக்கு பெறுமதி வாய்ந்த காணிகளை அன்பளிப்பாக வழங்க முன்வந்திருந்தது. ஹேமாஸ் தமது நுகர்வோரின் வாழ்வுக்கு வளமூட்டும் நடவடிக்கைகளுக்கமைய, கொழும்பை அண்மித்து 'தீவா காணி அதிர்ஷ்டம்' எனும் ஊக்குவிப்பு திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

முன்னர் இடம்பெற்ற ஊக்குவிப்பு திட்டங்களுக்கமைய, வெற்றியாளர்களுக்கு கொழும்பை அண்மித்து 10 பேர்ச்கள் கொண்ட காணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன. இன்று வரை மொத்தமாக 16 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 16 காணித்துண்டுகளை வெற்றியீட்டியுள்ளனர். மொத்தமாக ஒரு ஏக்கர் பரப்புக் காணி பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கையர்களின் வாழ்க்கையை வளமூட்டும் வகையில் தீவா வர்த்தக நாமம், 300 பணப் பரிசுகளையும், தங்க நாணயங்களையும் மோட்டார் சைக்கிள்களையும் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கியிருந்தது.

2014 ஆம் ஆண்டு வெற்றியாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்தவர்களில் ஒருவரான உடுபத்தாவ பிரதேசத்தைச் சேர்ந்த நிஷாந்த வீரசிங்க கருத்து தெரிவிக்கையில்; 'தீவா பயன்படுத்தியதால் என்னால் பணத்தையும், நேரத்தையும், வலுவையும் சேமிக்க முடிந்திருந்தது. தீவாவிடமிருந்து நான் எதிர்பாராத அன்பளிப்பு எனக்கு கிடைத்திருந்தது. தீவா தெரிவு செய்திருந்த தன் மூலமாக நான் சரியான தீர்மானத்தை மேற்கொண்டிருந்தேன் என்பது இப்போது உறுதியாகியுள்ளது –என்றார்.

கடந்த ஆண்டு தெரிவாகியிருந்த மற்றுமொரு அதிர்ஷ்டசாலி வெற்றியாளரான சிசிர ஆனந்த கருத்து தெரிவிக்கையில்; 'எட்டு வருடங்களுக்கு மேலாக நான் வாடகை வீட்டில் வசித்து வந்தேன். காணி ஒன்றை வாங்குவதற்கு பணம் சம்பாதிக்கும் வகையில் எனது மனைவி வெளிநாடு சென்றார். எனது ஒரே குழந்தை என் உறவினர்களுடன் வாழ்ந்து வருகிறார். இந்தக் காணி கிடைத்ததன் மூலமாக, நாம் அனைவரும் ஒன்றாக வாழக் கூடியநிலைஏற்பட்டுள்ளது' –என்றார்.

தீவா காணி அதிர்ஷ்டம் நுகர்வோர் ஊக்குவிப்பு திட்ட அணி, நகரங்களிலும் கிராமங்களிலும் தமது பயணங்களை மேற்கொண்டு, நுகர்வோருக்கு இந்தத் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள். இந்த செயற்பாட்டின் மூலமாக தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு இந்த நுகர்வோர் ஊக்குவிப்பு திட்டத்தில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். நுகர்வோர்கள் தீவா மேலுறைகளை (தீவா சவர்க்காரம், தீவா ரெகியுலர் அல்லது தீவா ஃபிளவர்ஸ்) ஆகியவற்றை தபால் பெட்டி இல. 128/9, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலமாக இந்த திட்டத்தில் பங்குபற்ற முடியும்.

இந்த ஆண்டு மொத்தமாக 3 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், கொழும்பை அண்மித்து காணிகள் இவர்களுக்கு வழங்கப்படும். மேலும், தீவா வாடிக்கையாளர்களுக்கு தங்க நாணயங்களை வாராந்த அடிப்படையிலும், 10,000 ரூபாய் பணப் பரிசுகளை நாளாந்த அடிப்படையில் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

தொடர்ச்சியான ஐந்தாவது ஆண்டாக, தீவா தனது வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வகையில் காணித் துண்டொன்றை பரிசாக வழங்க முன்வந்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட ஈடுபாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பங்குபற்றல் போன்றவற்றின் மூலமாக அதிகளவு எதிர்பார்க்கப்படும் வருடாந்த நிகழ்வாக அமைந்துள்ளது, என ஹேமாஸ் மெனுபக்ஷரிங் நிறுவனத்தின் தீவா வர்த்தகநாம முகாமையாளர் ஷானக பிரனாந்து தெரிவித்தார். (த)

# ஜனாதிபதியின் பெருந்தன்மை

புங்குடுதீவு மாணவியின் படுகொலைச்சம்பவத்தைத் தொடர்ந்து குடாநாட்டில் தோன்றியுள்ள அசாதாரண நிலையை நேரில் அவதானிக்கும் பொருட்டு ஜனாதிபதி வருகை தந்தமை இங்குள்ள மக்களுக்குப் பெரும் ஆறுதலை அளித்துள்ளது.

மேலும் அவர் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் உரையாற்றியமை சிறந்த பயனைத் தரும் ஒரு விடயமாகும்.

எவ்வித பாதுகாப்புக் கெடுபிடிகளும் இல்லாது இங்குவந்த ஜனாதிபதி பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறியமை அவரது பெருந்தன்மையை எடுத்துக் காட்டியுள்ளது.

மாணவியின் கொலையைத் தொடர்ந்து உணர்ச்சி வசப்பட்டவர்கள் சில வேண்டத்தகாத செயல்களில் ஈடுபட்டது உண்மைதான். ஆனால் இது புலிகளின் மீள் வருகைக்கான ஆரம்பம் என பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இனவாதத்தைக் கிளப்பும் செயற்பாடுகளில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளமை அவரது அரசியல் மற்றும் சமூக வங்குரோத்துத் தனத்தையே எடுத்துக் காட்டுகின்றது. நாட்டின் உயர்ந்த பதவியில் அமர்ந்திருந்த இவர் இவ்வாறு கீழ்த்தரமான நடவடிக்கையில் ஈடுபடுகின்றமை வெட்கத்துக்குரியது.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது யாழ்.வருகையின் மூலமாகத் தானொரு கனவான் என்பதை நிரூபித்திருக்கிறார். சிறுபான்மை இனத்தவர்களையும் இந்த நாட்டின் குடி மக்களாக ஏற்றுக்கொண்டு அரவணைத்துச் செல்கின்ற பண்பையும் அவரிடம் காண முடிந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையின மக்கள் அவருக்கு வழங்கிய ஆதரவு வீண் போகவில்லை என்பது இதன் மூலமாக நிரூபணமாகியுள்ளது.

மேலும் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலாவும் ஜனாதிபதியின் வருகையை நன்கு பயன்படுத்திக்கொண்டு வடபகுதியின் தேவைகள் குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துக கூறியமை பாராட்டுக்குரியது.

ஜனாதிபதி தமது வருகையின் மூலமாக இங்குள்ள மக்களின் மனங்களைக் கவர்ந்துள்ளார். இனவாதிகள் என்ன கூறினாலும் அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளாது தமது தனிவழியில் பயணிக்கும் ஜனாதிபதியின் நற்பணிகள் தொடரவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**தி.பாலசுப்பிரமணியம்,**
*கொழும்புத்துறை.*

# நீதி தேவதையே உன் இரு கண்களையும் கட்டவிழ்த்து விடு

நீதி தேவதையே உன் இரு கண்களையும் திற. யாழ்ப்பாணத்தில் நடக்கும் அநியாயங்களை நீயும் ஒரு கணம் பார்.

பூத்துக்குலுங்கிய எம் பெண்ணினத்தை படுபாதகர்கள் பிடுங்கி வீதியிலே எறிகின்றார்கள். மதுபான் பாவனை, களவு, பாலியல் துஷ்பிரயோகம் என்பன நாட்டிலோ தினம் தினம் அரக்கர் படைகளால் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றது. பள்ளிகளில் சென்று படித்து பட்டம் பெற்று எமது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் ஒரு தலைவியாக வரவேண்டிய வித்தியா எனும் வித்தகியை காமக் காமுகர்கள் கடித்து குதறியுள்ளார்கள். இவர்களுக்கு பாரபட்சம் பார்க்காமல் தூக்கிலிடு. நீ இவர்களை தப்பிக்க விட்டால் ஆண்டவன் பார்த்துக்கொள்வான் என்று நாம் இனியும் பொறுத்திருக்க மாட்டோம்.

அவதார புருஷர்கள் ஓடித்திரிந்த மண்ணோடு மண்ணாக ஆகுதியான சிவந்த மண் இது. இந்த மண்ணில் இப்படிப்பட்டதாய் குலத்தையே கீறி கீழித்து சின்னாபின்னம் ஆக்கிய அரக்கர்களை உடன் தூக்கிலிடு.

இனியும் உன் இரு கண்களையும் கறுப்புத்துணியால் இறுக்க கட்டியிருந்தால் நூற்றுக் கணக்கான வித்தியாக்களை இந்த அரக்கர் கூட்டம் தமது காமப் பசிக்கு இரையாக்கும். இருப்பவர்கள் இருந்திருந்தால் இவையெல்லாம் நடத்திருக்குமா? அப்படிநடந்தால் இவர்கள் அடுத்த நிமிடமே உயிரற்ற உடல்களாய் நடு வீதியிலோ பிணங்களாக தெரு நாய்களுக்கும் பறவைகளுக்கும் இரையாகி இருப்பார்கள். (பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டதாம் கருடா சௌக்கியமா? யாரும் இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது அர்த்தம் உள்ளது.)

*மலையூர் பி.தீபன்.*




கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# ஊழல் விசாரணைகளில் தாமதமேதும் வேண்டாம்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவர் திடீரென பதவி விலகியதை அடுத்து ஆணைக்குழுவின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. புதிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துதல், சுற்றி வளைப்புகளை மேற்கொள்ளுதல், வழக்குத் தொடருதல் ஆகிய செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. அதனால் பதவி விலகிய ஆணையாளரின் இடத்துக்கு புதிய ஆணையாளர் ஒருவரை நியமிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர் களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் அரசமைப்புச் சபைக்கே உண்டு. அரசமைப்புச்சபை புதிய ஆணைக்குழுவை நியமிக்கும்வரை தற்போதைய ஆணைக்குழு இயங்க முடியும். ஆணைக் குழு உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் 5 வருடங்கள். பதவிக்காலம் முடிய இன்னும் ஒரு வருடம் உள்ளது. அப்படி இருக்க, ஆணையாளர்களில் ஒருவர் பதவி விலகுவது பலருக்கும் ஆச்சரியம் அளித்துள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய புதிய ஆணைக்குழுவை நியமிக்க இடமளிக்கும் வகையிலேயே ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் கீர்த்தி விமலச்சந்திர பதவி விலகியுள்ளார் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கிறார். ஆனால், இரண்டு ஆணையாளர்களுடன் ஆணைக்குழு செயற்பட முடியாது. இது தெரிந்தும் அவர் பதவி விலகியமை குறித்து விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஜனவரி 8இல் புதிய அரசு பதவியேற்ற பின்னர் துரிதமாகச் செயற்பட்ட ஆணைக்குழுக்களில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னிலை வகிக்கிறது. 2011 மே மாதம் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. எனினும் முன்னைய ஆட்சிக் காலத்தில் இந்த ஆணைக்குழுவால் அரசியல் தலையீடு காரணங்களால் சிறப்பாக இயங்க முடியவில்லை. முன்னைய ஆட்சிக் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள், ஜனவரி 8 க்குப் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் குறித்து பெரிய எடுப்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மூன்று ஆணையாளர்களில் ஒருவரின் பதவி விலகல் இடம்பெற்றிருப்பது ஏமாற்றமளிக்கிறது.

முன்னைய மஹிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற மோசமான ஊழல் மோசடி முறைகேடுகள் குறித்து இப்போது பல்வேறு விடயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. மஹிந்த ஆட்சியில் இருந்த வேளை பொதுச் சொத்துக்களை தனது தனிப்பட்ட தேவைக்காக அதிகளவில் பயன்படுத்தியமை, ஆடம்பர வாழ்க்கைக்காக பல மில்லியன் ரூபா செலவில் அலரி மாளிகையில் வசதிகளை ஏற்படுத்தியமை, காங்கேசன்துறையில் அதி நவீன வசதிகளுடன் ஆடம்பர மாளிகை ஒன்றை அமைத்தமை, அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானம், மத்தள விமான நிலையம் ஆகியவற்றில் பல மில்லியன் ரூபா பண மோசடிகள் இடம்பெற்றதாக தற்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன. அதேவேளை இறுதிப் போர் வேளையில் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான தங்க நகைகள், பணம் என்பன எங்கு போய்ச் சேர்ந்தன என்பது நாட்டு மக்களுக்குத் தெரியாது. மஹிந்தவின் குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த மோசமான முறைகேடுகள் குறித்து எதிர்காலத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக புதிய அரசு கூறி வருகின்றது. அதற்கமைய சில சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. மஹிந்தவின் அமைச்சரவையில் இருந்த பரிவாரங்களும் பெருந்தொகைப் பணத்தை தமது பதவிக் காலத்தில் ஏப்பம் விட்டுள்ளன. நாட்டு மக்களின் இந்த வரிக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை தெளிவில்லை. எனவே எதிர்காலத்தில் இந்த மோசடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் பணி அத்தியாவசியமாகின்றது.

எதிர்காலத்தில் இந்த மோசடிகள் தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். விசாரணைகளின் முடிவில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இனிமேலும் பொதுச் சொத்துக்களை மோசடி செய்ய முடியாதவாறு புதிய செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். தேர்தல் காலத்தில் பரப்புரைகளில் அரச அலுவலர்கள் ஈடுபடுவது, அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் செயற்பாடு மிக முக்கியமான ஒன்றாக நோக்கப்படுகின்றது.

இந்த ஆணைக்குழுவின் முழுமையான செயற்பாடுகளுக்கு இதன் யாப்பின் பிரகாரம் மூன்று ஆணையாளர்களும் தேவை. சுற்றி வளைப்புகள், உட்பட்ட சில கருமங்களை இரண்டு ஆணையாளர்களுடன் செயற்படுத்த யாப்பில் இடமில்லை. அதனால்தான் மூவரில் ஒருவர் பதவி விலகிய நிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு செயலிழந்து காணப்படுகிறது. பழைய முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்வதும் புதிய முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதும் கோவைப்படுத்துவதுமே அதன் பணியாகத் தற்பொழுது உள்ளது. அதனால் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற இலஞ்ச ஊழல் தொடர்பான விசாரணைகள் குழம்பிப் போயுள்ளன. புதிதாக முறைப்பாடு செய்வதற்கும் பலர் தயங்குகிறார்கள்.

இவற்றைக் கருத்தில் கொண்டு 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஏற்ப அமைக்கப்பட்ட அரசமைப்புச் சபை மூலம் புதிய ஆணைக்குழு தாமதமின்றி நியமிக்கப்படவேண்டும். ஆணைக் குழு முழுமையாகச் செயற்பட்டால் மட்டுமே இது அமைக்கப்பட்டதன் நோக்கத்தை நாம் அடைய முடியும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இளசுகள் கல்வியில் மேம்பட முந்தைய பரிமாணம் தேவை

♦ வடக்கின் பாடசாலைகள் பலவற்றில் உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவு இல்லை.

♦ மிகப் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை முதன்மைப் பிரச்சினையாகி உள்ளது.

♦ மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக உள்ளதால், அவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடையும் ஆபத்து மேலெழுந்து உள்ளது.

♦ வடக்கின் பல பகுதிகளில், வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்கள் பாடசாலைகளுக்குப் பிந்திச் செல்லும் பின்னடைவு ஏற்படுகிறது.

♦ பெரும் எண்ணிக்கையான வன்னிப் பாடசாலைகளில் போதிய வகுப்பறைகள் இல்லாமையால், மாணவர்கள் ஓலைக்கொட்டில்களிலேயே கற்க வேண்டியுள்ளது.

♦ தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்ட முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதற்கான உதாரணங்களில் ஒன்று.

--அங்கு தரையில் இருந்தே கல்வி கற்க வேண்டிய நிலை.

அதனால், மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிப்புற்று, தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாகி கல்வியில் உரிய கவனம் செலுத்த முடியாத நிலை உருவாகிறது.

வடக்கின் பாடசாலைகள் மிகப் பலவற்றில், ஆசிரியர் பற்றாக்குறை முதன்மைப் பிரச்சினையாக நெடிது உயர்ந்து நிற்கிறது.

அதனைத் தடுப்பதற்கு, தவிர்ப்பதற்கு நிர்வாகத்தரப்பில், மூல நிலையமான வடக்கின் கல்வி நிர்வாகத் தரப்பில், அதாவது கல்வி அமைச்சினால் போதிய அக்கறை எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பெற்றோர்களின் தரப்பில் மேலுயர்ந்து நிற்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வடக்கில், அதன் ஐந்து மாவட்டங்களின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையும், அதன் கல்வி அமைச்சும் மேற்போந்த குறைகளைத் தீர்ப்பதில் உரிய, வேண்டிய வசதிகளை, நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அசமந்தம் அல்லது தாமதம் காட்டுவது ஏன் என்ற வினா, மாணவர்களின் பெற்றோர்களின் நெஞ்சங்களை நெருடுகின்றது.

பாடசாலைகளின் பௌதிக வளங்களை, மிகப் பிரதானமான ஆசிரியர் தேவையை, நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரும் பொறுப்பு, மத்திய, மாகாண அரசுகளின் கல்வி நிர்வாகங்களின் தட்டிக்கழிக்க முடியாத பணியாகும். சாக்குப்போக்குகளை துணைக்கு இழுத்து, அதிகார வெறியுடன் அதனை, பொறுப்பைக் கையாள முனையக் கூடாது.

பெற்றோரும், மக்களின் பிரதிநிதிகளான அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் ஒன்றிணைந்து முக்கூட்டுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

எமது முந்தைய சந்ததியினர் போன்று, இன்றைய இளசுகளும் கல்வியில் மேம்படவும், அது சார்ந்து வாழ்வில் உயர்ந்து ஓங்கவும், --

மூத்தவர்கள், கல்வியியலாளர்கள், ஆசான்கள், பெற்றோர்கள் என்ற நான்கு தூண்களும் ஒரே கோட்டில், வட்டத்தில் மேலோங்கி நின்று உழைக்க வேண்டும். நற்சேவை நல்க வேண்டும்.

பல பத்து ஆண்டுகளாக, இந்த நாட்டின் இலங்கையிலேயே, கல்விப் புலத்தில், பரிணமித்து முதல் வரிசையில் நின்ற வடக்கு, மீண்டும் தனது முந்தைய பரிமாணத்தைத் தொட வேண்டும்.

அண்மைய வரலாற்றில், பல்வேறு ஒடுக்குமுறைகளை அனுபவித்தவர்கள் என்பதால், அவற்றில் இருந்து மீள எழுச்சிப் பெறுவதற்கு கல்வி ஒன்றே கைகொடுக்கவல்ல கருவி.



# வரலாற்றில் இடம்பிடித்துள்ள ஜனாதிபதியின் யாழ்.வருகை

■ வந்தியத்தேவர்

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு திடீர் பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களைச் சந்தித்து புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு தனது வருத்தத்தைத் தெரிவித்ததுடன் ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தினூடாக விசாரணை துரிதப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டதுடன் மாணவி வித்தியாவின் பெற்றோரைச் சந்தித்து நேரில் தனது துயரைத் தெரிவித்தும் கொண்டார். இது அவரின் மனிதாபிமானத்தையும் குற்றவாளிகள் தாமதமின்றித் தண்டனை பெறவேண்டியவர்கள் என்பதையும் புலப்படுத்தியுள்ளது. ஒரு மாணவியின் மூர்க்கத் தனமான படுகொலைக்காக அதுவும் இரு இனங்களுக்கு இடையில் நிலவும் கசப்புணர்வுகளுக்கு மத்தியில் தென்னிலங்கை அரசியல்வாதியான ஒரு ஜனாதிபதி, ஒரு தமிழ் மாணவியின் படுகொலைக்காக நேரில் வந்து அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்டது இலங்கை வரலாற்றிலேயே இப்போதுதான் முதல் தடவையாக இடம்பெற்றுள்ளது. கடந்த காலங்களில் கிருஷாந்தி உட்பட பல்வேறு மாணவிகள் மூர்க்கத் தனமான பாலியல் வன்முறையில் மரணமடைந்தமைக்காக அப்போதைய அரசுத் தலைவரும் அரசும் துளியளவு கூட வருத்தப்படாத நிலை அந்த மாணவர்களுக்கு நீதி கிடைப்பதைக் கூட விரும்பாததாகவே இருந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரியின் இந்த வருகையும் ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தினூடாக விசாரணையைத் துரிதப்படுத்தும் அறிவிப்பையும் விரும்பாத தென்பகுதியில் உள்ள சிலர் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை தென்பகுதி மக்களைப் புண்படுத்துவதாக அமைகிறது எனக் கூறியுள்ளனர். புத்த தர்மத்துக்கு எதிரான கோட்பாடுகளைத் தமதாகக் கொண்டு பௌத்த துறவிப் போர்வையில் வலம் வரும் கலகொட அத்தே ஞானசாரர் போன்றவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரியின் மனச்சாட்சி வேப்பங்காயாகக் கசக்கிறது. வகுப்புவாதத்தை மூலதனமாகக் கொண்ட பொது பலசேன அதைக் கைவிட்டால் அந்த அமைப்பே இல்லாமற் போய்விடும் என்ற அச்சத்தில் ஆழ்ந்து கிடக்கும் அத்தே ஞானசாரர், வடக்கில் மட்டுமா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்று நடக்கிறது. அதற்கு விசேட நீதிமன்றம் அமைக்க ஜனாதிபதி வடக்கில் அதிக அக்கறை காட்டுகிறார் என்று புலம்பத் தொடங்கியுள்ளார்.

மாணவி வித்தியா எவ்வளவு கேவலமான முறையில் கூட்டு வன்புணர்வால் மோசமான படுகொலைக்குள்ளானார் என்பது அத்த ஞானசாரர் அறியாததல்ல. இதில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு மோசமானவர்களாக வன்மம் கொண்டவர்களாக இருந்திருப்பார்கள் என்ற உண்மையைக் கூட உணர்ந்து கொள்ள முடியாத இவர் போன்றவர்களுக்கு புத்த தர்மம் புரிந்திருக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே. தெற்குக்கு ஒரு சட்டம் வடக்குக்கு ஒரு சட்டம் நியாயமில்லை என்று கூப்பாடு போடுபவர்களுக்கு கடந்த அரசு இது மாதிரியான சட்டநவடிக்கைகளையே அன்று நடைமுறைப்படுத்தி வந்தது குறித்து அப்போது ஏன் வாய் மூடியாக இருந்தார்கள் எனக் கூற முடியுமா? காலொடிந்த ஆட்டுக்காகக் கண்ணீர் விட்டவர் புத்தர். கயவர்களை விசாரிக்க ட்ரயல் அட்பார் ஏன் என்கிறார் இந்தக் காவியுடைக் காரர்.

இவ்வாறான குற்றவாளிகள் தாமதமின்றி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உச்ச தண்டனை பெறவேண்டியவர்கள். இதுகாலவரை இது போன்ற குற்றச் செயல்கள் துரிதமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக இல்லை. இது குற்றவாளிகளுக்கு உகந்ததாக அமையும் என்பதும் கலகொட அத்தே ஞானசாரருக்குத் தெரியாததல்ல. இவ்வாறான குற்றவாளிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என இவர் விரும்புகிறாரா? மாணவி வித்தியாவுக்கு நிகழ்ந்த கொடூரத்தின் பின்னரும் கூட பரந்தன், நாரந்தனைப் பகுதிகளில் இது போன்ற சீரழிவுகள் தொடர்ந்துள்ளன. தென்பகுதியிலும் கூட இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாமல் இல்லை. சிங்கள மக்களைப் பாதுகாக்க எம்.பியாகவேண்டும் என்று வேறு ஆசையில் மூழ்கியுள்ளார் போலவும் தெரிகின்றது. கெடு காலம் இலங்கைக்குஉச்சத்தில் உள்ளது போல்தான் இருக்கிறது.

ஈராக், சிரியா போன்ற நாடுகளில் எசிதி இனப்பெண்களையும் சிறுமிகளையும் கூட ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பாலியல் வன்முறையின் பின் உயிரோடு எரித்துவிடும் சம்பவங்கள் இடம்பெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன. இவற்றுக்கெல்லாம் உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றால் அதையும் கூட இவர் நிராகரித்து விடுவார்போல் தெரிகின்றது.

சட்டத்தை மீறி நடந்தார் எனக் கூறி நீதிமன்றில் நிற்கும் ஒருவர் ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைப்பது குறித்துப் பேசுவதுதான் வேடிக்கை. போரினால் பாதிக்கப்பட்ட ஓர் இனத்துக்கு நன்மைசெய்ய வேண்டும் என்றோ அநியாயமாக ஓர் அப்பாவி மாணவி படுகொலைக்குள்ளாகி இருக்கிறாள், அவளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றோ பொதுபல சேனா செயலாளர் கூறியிருந்தால் அது ஏதோ யோசிக்க வேண்டிய விடயம் தான். அநீதிக்கு ஆதரவளிப்பதன் மூலம் பொதுபல சேனாவைப் பலமுள்ளதாக்க அதன் செயலாளர் முனைகிறார் போலும். மாணவியின் படுகொலைக்கு எதிராக சிங்கள முஸ்லிம் மக்கள் பேராதரவு கொடுத்திருப்பதோடு நாடு முழுவதும் துரித விசாரணை உச்ச தண்டனைகள் குற்றவாளிகள் மீது இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளனர். இதையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டே விதண்டாவாதக் கருத்தைக் கூறி பிரபலமாக அவர் முனைந்துள்ளார் என்பது தான் நிஜம்.

யாழ்ப்பாண மாணவிக்கு நடந்த சம்பவம் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

18 வயதுப் பெண்ணுக்கு இவ்வாறு நடந்துள்ளமை கவலைக்குரியது. இவ்வாறானவர்கள் இந்தச் சமூகத்திலேயே உள்ளார்கள் என்பதால் அனைத்து மதத் தலைவர்களும் இது தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனப் போதிக்க வேண்டும். அனைவருடனும் ஒற்றுமையாகவும் பேதங்களின்றியும் வாழ வேண்டும் என்று அஸ்கிரிய பீடாதிபதி கூறியிருப்பதை அனைவரும் சிந்தனைக்கு எடுக்க வேண்டும்.



# நிலைநாட்டப்பட வேண்டும் அரசின் நல்லாட்சி

● சேரலாதன்

ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசில் நல்லாட்சி என்னும் தத்துவத்தை சிலர் தவறாகப் புரிந்து கொண்டதாகத் தெரிகின்றது. எல்லோருக்கும் நல்லவர்களாக இருப்பதற்கு எவராலுமே முடியாது. மேலும் நல்லவர்களின் கண்களுக்கு நன்றாகத் தெரிகின்ற விடயங்கள் குற்றவாளிகளுக்கும் தீமையாகவே காணப்படும். இதற்கு ஏற்றாற்போன்று மைத்திரி அரசின் நல்ல விடயங்கள்கூட முன்னைய ஆட்சியில் பங்குகொண்டிருந்தவர்களின் கண்களுக்கு கெட்ட விடயங்களாகவே காட்சி தருகின்றன.

இதனால்தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக் ஷவை பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்தமை நல்லாட்சியின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையென அவரது மூத்த புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

எனது குடும்பத்தில் நானும் எனது தந்தையும் மட்டுமே அரசியலில் ஈடுபட்டோம். அம்மாவும், தம்பிமாரும் அரசியலில் ஈடுபடாத போதிலும் தற்போதைய அரசினால் பழிவாங்கப்படுகின்றனர். பழிவாங்கும் நடவடிக்கைகள் ஒருபோதுமே நல்லாட்சி ஆகாது என்று தெரிவித்துள்ளார்.

ஓர் அரசின் நல்லாட்சி என்பது நாட்டில் வாழுகின்ற சகல மக்களுக்கும் சமமான நீதியை வழங்குவது என்பதேயாகும். இந்த நிலையில் மஹிந்த ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வது பழிவாங்கல் நடவடிக்கை ஆகாது. குற்றவாளிகளின் தகுதியைப் பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஒருபோதுமே நல்லாட்சி ஆகமாட்டாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சியில் பெருமளவு ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலமாகத் தெரிய வருகின்றது. மஹிந்தவும் அவரது சகாக்களும் லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருப்பதாக அரசின் சார்பில் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டப்பட்டது. இந்தத் தொகை நாட்டின் தேசிய வருமானத்தில் காப்பங்கு எனவும் அதிர்ச்சித்தகவல்கள் வெளிவந்தன. இந்தக் கணக்குகளையெல்லாம் பார்க்கும்போது நாட்டின் வளம் எவ்வளவு மோசமாகச் சூறையாடப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. இந்த நிலையில் நல்லாட்சி என்று கூறிக்கொண்டு மோசடிக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்காமல் இருப்பத எந்த வகையிலும் நியாயமாகாது.

“

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சியில் பெருமளவு ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலமாகத் தெரிய வருகின்றது. மஹிந்தவும் அவரது சகாக்களும் லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருப்பதாக அரசின் சார்பில் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டப்பட் டது. இந்தத் தொகை நாட்டின் தேசிய வருமானத்தில் காப்பங்கு எனவும் அதிர்ச்சித்தகவல்கள் வெளிவந்தன. இந்தக் கணக்குகளையெல்லாம் பார்க்கும்போது நாட்டின் வளம் எவ்வளவு மோசமாகச் சூறையாடப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. இந்த நிலையில் நல்லாட்சி என்று கூறிக்கொண்டு மோசடிக்காரர்களுக்கு எதிரான நடவ டிக்கை எடுக்காமல் இருப்பத எந்த வகையிலும் நியாயமாகாது.

உண்மையைக் கூற வேண்டுமாயின் மைத்திரி அரசு பல விடயங்களிலும் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. மைத்திரியின் இடத்தில் மஹிந்த ராஜபக்ஷ இருந்திருப்பாராயின் பலர் சிறைக் கம்பிகளுக்குள் இருந்திருப்பர். பலரது வாழ்வும் கேள்விக் குறியாக மாறியிருக்கும். ஆனால் மைத்திரி ஆற அமர யோசித்து நடவடிக்கை எடுப்பதை அவதானிக்க முடிகின்றது. இதுவே அவருக்குப் பாதகமாகவும் அமைந்து விட்டது.

மஹிந்த ராஜபக்ஷ தாம் செல்லு மிடமெல்லாம் மைத்திரி அரசைக் குறை கூறுவதிலேயே தமது நேரத்தைச் செலவிடுகின்றார். தாம் தவறெதுவும் புரியவில்லை என்ற எண்ணத்துடன் அவர் செயற்படுவதை நிறுத்துவதற்கு எவரும் துணிவதாகவும் தெரியவில்லை. இதற்கு ஜனாதிபதியும், அவரும் ஒரே கட்சியில் அங்கம் வகிப்பதும் காரணமாக அமைந்துவிட்டது. அவர்மீது நடவடிக்கை எடுத்தால் கட்சி பிளவுண்டு இடம்பெறப்போகும் தேர்தல்களில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுவிடலாம் என்ற அச்ச உணர்வு ஜனாதிபதியிடம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் தனிப்பட்ட இலாப நட்டக் கணக்குகளைப் பார்த்து குற்றவாளிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்காது தாமதப்படுத்துவது ஒருபோ துமே நல்லாட்சி ஆகாது.

அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த பஸில் ராஜபக் ஷ விமான நிலையத்தில் தமக்கு அளிக்கப்பட்ட அமோக வரவேற்பை ஒருபோதுமே எதிர்பார்த்திருக்க மாட்டார். குற்றச்சாட்டுக்களின் பேரில் நாடு திரும்பிய அவர் தமக்குக் கிடைத்த வரவேற்பினால் உணர்ச்சிவசப்பட்டு சில வார்த்தைகளை அரசுக்கு எதிராகத் தெரிவித்ததுடன் தாம் குற்றமற்றவன் எனவும் தம்மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார். ஆனால் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அவர் புரிந்த குற்றங்களின் தாக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது. இவர் அரசின் மீது குற்றம் சுமத்துவதால் குற்றமற்றவர் எனக் கூறி விட முடியாது.

மைத்திரி அரசின் பலவீனங்களும் அரசின் மீதான விமர்சனங்களுக்கு வழி வகுத்துவிட்டது. அறிக்கைகளை வெளியிடுவதிலும், ஊடகங்களுக்குப் பேட்டி அளிப்பதிலும் சில அமைச்சர்கள் ஈடுபடுகின்றனரே தவிர உருப்படியான எதையும் அவர்கள் சாதித்ததாகத் தெரியவில்லை. ஊழல், மோசடிகள் தொடர்பாகப் பேசுவதைவிட நடவடிக்கைகளை மேற்கொள்வதே இன்றைய பிரதானமான செயற்பாடாகும். இது மேலும் மேலும் தாமதமடையுமாயின் நல்லாட்சி என்று கூறுவதில் அர்த்தம் இல்லாமலே போய்விடும்.


குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஏடாகூடமான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி இடல் வேண்டும். அவர் மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமர்வதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார். அவரது எண்ணம் ஈடேறுமானால் இந்த நாடு மீண்டுமொரு இருள் யுகத்துக்குத் தள்ளப்பட்டுவிடும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.



# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 60 | 80 | 30 |
| கத்தரி | 100 | 100 | 120 | 80 | 100 | 50 | 80 | 46 |
| கரட் | 200 | 150 | 180 | 120 | 200 | 240 | 200 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 50 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 200 | 80 | 170 | 120 | 140 | 60 |
| பாகல் | 150 | 130 | 120 | 120 | 140 | 120 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 120 | – | 100 | 140 | 120 | 75 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 110 | 90 | 120 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 120 | 140 | 100 | 120 | 85 |
| பூசணி | 40 | 30 | 40 | 20 | 30 | 40 | 65 | 15 |
| தக்காளி | 80 | 80 | 70 | 60 | 60 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 80 | 40 | 40 | 50 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 40 | 50 | 15 | 40 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 50 | 60 | 40 | 50 | 40 | 60 | 120 | 20 |
| புடோல் | 80 | 60 | 100 | 100 | 120 | 80 | 120 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 120 | 80 | 100 | 100 | 40 |
| வெண்டி | 120 | 80 | 120 | 100 | 100 | 60 | 100 | 40 |
| போஞ்சி | 140 | 200 | 240 | 160 | 200 | 340 | 200 | 120 |
| லீக்ஸ் | 160 | 150 | 160 | 160 | 220 | 290 | 200 | 170 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 60 | 35–45 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 160 | 140 | 180 | 160 | 100 | 120 | 140 | 140 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 70 | 120 | 160 | 170 | 120 | 120 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 100 | 120 | 140 | 180 | – |
| முருங்கைக்காய் | 600 | 300 | 600 | 300 | 400 | 400 | 250 | 200 |

# கருச்சிதைவை உண்டாக்கவல்ல காய்கறிகள்



கர்ப்பமாக இருக்கும் போது மருத்துவர்கள் எந்த ஒரு உணவிலும் கவனமாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். ஏனெனில் ஒருசில உணவுகளில் வயிற்றில் வளரும் சிசுவுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதாலேயே தான். பொதுவாக அனைவருக்கும் ஒருசில பழங்களை சாப்பிட்டால் தான் கருச்சிதைவு ஏற்படும் என்று தெரியும். ஆனால் பழங்கள் மட்டுமன்றி, ஒருசில காய்கறிகளின் மூலமும் கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. குறிப்பாக முதல் மூன்று மாதத்தில் கர்ப்பிணிகள் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். ஏனெனில் இந்த காலத்தில் தான் கருச்சிதைவு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே இக்காலத்தில் உணவுகளில் கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அது உடனே வேலையை காண்பித்துவிடும். அதற்காக அதனை முற்றிலும் தவிர்க்கக்கூடாது. ஆனால் மிகவும் குறைந்த அளவில் உட்கொள்ள வேண்டும். இதற்கு காரணம் அதில் உள்ள அதிகப்படியான விற்றமின்கள் தான். ஏனென்றால் வைற்றமின்கள் அதிகமாக இருந்தால், இரத்தக்கசிவு ஏற்படுவதோடு, கடுமையான வலியையும் உண்டாக்கும். எனவே கீழ்க்கூறிய சில காய்கறிகளை பிரசவத்திற்கு முன் தவிர்ப்பது நல்லது.

கத்திரிக்காயில் இரும்புச்சத்து அதிகம் இருந்தாலும், இதனை கர்ப்பிணிகள் அதிகம் உட்கொண்டால், இது கருச்சிதைவுக்கு வழிவகுக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே இதனை கர்ப்பிணிகள் தவிர்ப்பது மிகவும் நல்லது.

கர்ப்பிணிகளுக்கு ஒரு ஆபத்தான ஒரு கீரை என்றால் அது வெந்தயக்கீரை தான். ஏனெனில் வெந்தயக்கீரையை கர்ப்பிணிகள் சாப்பிட்டால், சிசுவின் மூளை வளர்ச்சிக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே இந்தக் கீரையை கர்ப்பிணிகள் இறுதி மூன்று மாதங்களில் தொடவே கூடாது.

பசலைக்கீரையை அதிகம் உட்கொண்டாலும், கருச்சிதைவு ஏற்படும். அதிலும் இந்த கீரையை தினமும் உட்கொண்டு வந்தால், விரைவில் கருச்சிதைவு ஏற்படும். எனவே இந்த கீரையை மாதத்துக்கு ஒரு முறை சாப்பிட்டால் போதும்.

கசப்பு தன்மையுடைய ப்ராக்கோலியை தினமும் கர்ப்பமாக இருக்கும் போது உட்கொண்டால், அது கருச்சிதைவை ஏற்படுத்திவிடும். குறிப்பாக முதல் மூன்று மாதங்களில் இதனை சாப்பிடக் கூடாது. ஏனெனில் இதில் வைட்டமின் சி அதிக அளவில் நிறைந்துள்ளது. எனவே தின மும் உட்கொண்டால் கருச்சி தைவு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

கர்ப்பமாக இருக்கும்போது காலிஃப்ளவர் சாப்பிட்டால் நல்லது என்று சொன்னாலும், இதனை கோபி மஞ்சூரியன் போன்று செய்து சாப்பிட்டால், பின் கர்ப்பமானது பிரச்சினையாகிவிடும். ஏனெனில் இதிலும் விற்றமின் சி எண்ணற்ற அளவில் நிறைந்துள்ளது.

குடமிளகாயின் சுவை அனைவரையும் ஈர்க்கும். ஆனால் இதனை சாப்பிட்டால், கர்ப்பத்தில் பிரச்சினை ஏற்படும். ஆகவே பிரசவம் முடியும் வரை இதனை சாப்பிடுவதை சற்று தவிர்க்கலாமே.

## நாளை

**வைகாசி-16**
**சனிக்கிழமை**
**30.05.2015**

திதி: துவாதசி மு.இ. 08.33 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப.04.29 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
இராகுகாலம்: 05.52-10.22 வரை

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 600 | 800 | 600 | 600 |
| நண்டு | 300 | 500 | 300 | 400 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 500 | 450 |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 600 | 380 |
| சுறா | 550 | 500 | 500 | 650 | 500 | – |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 260 | 320 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 350 | 450 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 350 | 400 | – | – |
| ஒரா | 400 | 400 | 350 | 400 | 500 | – |
| திரளி | 200 | 300 | 250 | 300 | 150 | 250 |
| நகரை | 200 | 300 | – | 300 | 300 | 250 |
| சூடை | 150 | 200 | 300 | 120 | 170 | 100 |
| ஒட்டி | 300 | 150 | 250 | 300 | 400 | 200 |
| திருக்கை | 150 | 350 | 300 | 250 | 150 | 130 |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 400 | |
| வாளை | 100 | 150 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 220 | 250 | 200 | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | 3 | 4 | | | | 6 |
| 3 | | | | 9 | | | 1 | |
| | 8 | 9 | | | | 2 | 3 | |
| | 6 | 1 | | 3 | | 7 | | 5 |
| | 2 | 7 | | | | 3 | 8 | |
| 9 | | 4 | | 5 | | 6 | 2 | |
| | 7 | 8 | | | | 1 | 6 | |
| | 5 | | | 8 | | | | 2 |
| 2 | | | | 1 | 6 | 5 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 4 | 1 | 5 | 7 | 9 | 2 | 8 |
| 2 | 1 | 7 | 8 | 9 | 4 | 3 | 6 | 5 |
| 5 | 8 | 9 | 3 | 2 | 6 | 7 | 4 | 1 |
| 7 | 5 | 8 | 2 | 4 | 3 | 6 | 1 | 9 |
| 6 | 4 | 3 | 7 | 1 | 9 | 8 | 5 | 2 |
| 1 | 9 | 2 | 6 | 8 | 5 | 4 | 7 | 3 |
| 9 | 3 | 1 | 4 | 7 | 2 | 5 | 8 | 6 |
| 4 | 2 | 5 | 9 | 6 | 8 | 1 | 3 | 7 |
| 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 2 | 9 | 4 |

# நல்லதை உணர்ந்தால் நல்வழி கிட்டும்

ஞானச்சுடர்



அச்சமும், அகங்காரமும் தான் மக்களை நல்ல வழியில் செல்ல விடாமல் தடுக்கிறது. மனதிலே அச்சம் கொண்டவர்களால் எக்காரியத்தையும் துணிந்து செய்ய முடியாது. தூயவை துணிந்தபோது பழி வந்து தொடர்வதில்லை என்பது கம்பன் வாக்கு. நாம் செய்கின்ற காரியம் தூய்மையானது என உணர்ந்து கொண்டால், சோதனைகள் எது வந்தாலும் அவற்றைத் தாண்டிச் செய்து முடிக்கும் தன்மை நம்மிடம் ஏற்படும். அகங்காரம் படைத்தவர்கள் பிறர் சொல்வதை பொருட்படுத்த மாட்டார்கள். நினைத்ததை முடிப்பவன் என்ற ஆணவத் திமிரோடு செயற்படுவார்கள். அச்சமும் அகங்காரமும் நீங்கிய இடத் திலேயே ஆண்டவன் வீற்றிருப்பான்.

"அச்சம் அகங்காரம் அகத்து அடக்கினால் பின்னை நிச்சயம் ஆம் ஈசன் நிலை"

*–ஔவையாரின் ஞானக்குறள்*



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

## பரணி

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், உங்களைப் பற்றிய அபாண்டமான வதந்திகளுக்கு இலக்காவீர்கள். உபயோகமற்ற முயற்சிகளில், நீங்கள் நேரத்தை செல விடுவீர்கள். அன்றாடப் பணிகளில், நீங்கள் ஒழுங் காகச் செயற்படமாட்டீர்கள். வழக்கத்துக்கு விரோதமான செயல் களில் நீங்கள் நாட்டம் காட்டுவீர்கள்.

## திருவாதிரை

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், உண்மைக்குப் புறம்பாக இருப்பதுடன், மிகவும் மோசமான கோப சுபாவம் கொண்டவராகவும் இருப்பீர்கள். ஆயினும்கூட, நீங்கள் அறிவுத் திறன்பெற்ற புத்திசாலியாக இருப்பீர்கள். பிறருக்கு கொடுமை விளைவித்து, அதில் மகிழ்ச்சிகாண முயலும் நீங்கள், பல சமயங்களில், நன்றிகெட்டவராகவும், வருங்காலத்தில் நல்ல நம்பிக்கை கொண்ட தைரியசாலியாகவும் விளங்குவீர்கள்.

உங்கள் வாழ்க்கையில், சாதாரணமாக பல வசதிகளும் சுகபோகங்களும் இராது. நீங்கள் கடினமான வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கலாம். நீங்கள் செலவாளியாக இருப்பதுடன், துன்பங்கள் நேரிடும்போதும், மனம் கலங்காமல் இருப்பவர். உங்கள் உடல்வாகு, சீரானதாக இராது. 25 வயதுக்குப் பின்னர், நீங்கள் வாழ்க்கையில் வெற்றி காண்பீர்கள்.

## மகம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், நல்ல செல்வந்தராகவும், புத்திசாலியாகவும், பிறரிடம் கருணை காட்டி உதவி செய்பவராகவும் இருப்பீர்கள். நீங்கள் வியாபாரத்தில் வெற்றி காண்பதுடன், சுகபோகமான வாழ்க்கையொன்றும் நடத்துவீர்கள்.

உங்களுக்கு பல பணியாள்கள் இருப்பார்கள். மத காரியங்களில் உங்களுக்கு ஈடுபாடு இருக்கும். உங்கள் மனைவியுடன் சுமுகமான உறவுகளைக் கொண்டிருப்பீர்கள்.

உங்கள் பெற்றோர்களிடம், கடமைப் பற்றுடன் நடந்து கொண்டாலும், எதிலும் கண்டிப்பாக இருக்கக்கூடிய, ஒரு கடும் சுபாவம், உங்களிடம் குடிகொண்டிருக்கும். உங்கள் எண்ணமும் செயலும், தெளிவானதாய், திட்டவட்டமானதாக அமைந்திருக்கும்.

உங்கள் கல்லீரல் பலவீனமடைந்ததாய் இருக்கும்.

இந்த நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருப்பதால், பூஜைகள் செய்யவேண்டும் 25 வயதுக்குப் பின்னர், நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவீர்கள்.

## சித்திரை

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், பல்வேறான வண்ணங்களிலான துணிகளிலும் உடைகளிலும், உங்களுக்குக் கொள்ளை ஆசை இருக்கும். மலர்களை, நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். போர் உத்திகள் பற்றிய பல விடயங்கள், உங்களுக்குத் தெரிந்திருக்கும். படிப்பும், அறிவும், பணமும் படைத்தவரான நீங்கள், சத்தியவாதியாக விளங்குவீர்கள். உங்கள் மனைவியும் குழந்தைகளும், உங்களுக்கு மன மகிழ்ச்சி தருவார்கள். நல்ல வசதியான வாழ்க்கை நடத்தப்போகும் நீங்கள் கடின உழைப்பாளியாகவும், துணிச்சல் மிக்கவராகவும், பொருள் ஆர்வம் கொண்டவராகவும் விளங்குவீர்கள். கட்டடங்கள் கட்டுவது, வைத்தியம், ஜோதிடம் ஆகியவற்றில், உங்களுக்கு நல்ல அறிவாற்றல் இருக்கும். நீங்கள் சமயப்பற்றும், தெய்வ பக்தியும் கொண்டிருப்பீர்கள். நீங்கள் பணம் சம்பாதித்தாலும் பணம் சேர்த்து வைத்திட முடியாது. நீங்கள் பொதுவாக, பருமனாக இருப்பீர்கள். 30 லிருந்து 35 வயது வரையான காலத்தில் உங்களுக்கு நல்ல அதிர்ஷ்டங்கள் கிடைக்கும்.

## கேட்டை

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், பூஜை செய்திட வேண்டும். உங்கள் தந்தை, சகோதரர் உங்கள் வயதுடையவர்களுக்கு, உங்களால் தீங்கு ஏற்படலாம். உங்களுடைய 13 வது, 27 வது, 31 வது மற்றும் 49 வது வயதின்போது, உங்கள் உடல்நலம் மோசமாக பாதிக்கப்படலாம்.

## உத்தரட்டாதி

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராகவும், மகிழ்ச்சி நிறைந்தவராகவும், நற்குணமும், எதிரிகளை ஒடுக்கி வெற்றி கொள்ளும் திறனும் மிக்கவராகவும் விளங்குவீர்கள். நீங்கள், தாராள சிந்தையுடையவராகவும், செல்வவளமும், அறிவாற்றலும் நிறைந்தவராகவும் இருப்பீர்கள். உங்களுக்கு கவர்ச்சிகரமான, வுசீகர உடற்கட்டு இருக்கும். உங்களுக்கு குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் இருப்பார்கள். உங்கள் வாழ்க்கையில், 27, 31 ஆம் வயதில்தான், நல்ல அதிர்ஷ்டசாலியாக விளங்குவீர்கள்.

# தன்னம்பிக்கைப் பெண்களுக்கு



ஆணும், பெண்ணும் சமமெனும் வாதங்கள் எதற்கு? பெண்கள் ஆண்களை விட உயர்ந்தவர்கள் அல்ல என்பதைப் பறைசாற்றவா? என பெண்கள் உற்சாகக் குரல் கொடுக்கும் காலம் இது. வாழ்வில் உயரவேண்டும் எனும் வேட்கை பெண்களை அலுவலகங்களுக்குள் நுழைய வைக்கிறது. அதே பெண்கள் தன்னம்பிக்கை உடையவர் களாகவும் இருந்துவிட்டால் அலுவலகத்திலுள்ள உயரிய இருக்கைகள் எல்லாம் அவர்களுக்காகக் காத்திருக்கும்.

தன்னம்பிக்கைக்கும், வாழ்க்கைச் சூழலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வீட்டில் மதிக்கப்படும் ஒருவர் அலுவலகத்திலும் தன்னம்பிக்கையுடன் செயல்படும் வாய்ப்பு அதிகம். வீட்டிலோ, நண்பர்களாலோ நிரர்கரிக்கப்படும் நபர், அலுவலக சூழலில் தன்னம்பிக்கை இல்லாமல் அவஸ்தைப்படவும் வாய்ப்பு அதிகம் என்கின்றன உளவியல் ஆய்வுகள்.

நமது வாழ்க்கைச் சூழல் பல்லாயிரம் ஆண்டுகளாக ஆண்களை மையப்படுத்தியே அமைந்து விட்டது. ஆண்களை விடப் பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், அதைத் தேடும் வேட்கையும் அதிகமாய்த் தேவைப்பட அதுதான் காரணம். அலுவலக ஆண்கள் சக பெண் பணியாளரைக் கொஞ்சம் இளக்காரமாய்ப் பார்ப்பதும், பெண் உயரதிகாரிகளைக் கொஞ்சம் பொறாமையாய்ப் பார்ப்பதும் வெகு சகஜம். இந்த உளவியல் எதிர்ப்பு ச[illegible]க்குப் பலியாகாமல் இருக்க வேண்டியது பெண்களின் [illegible]வை. தன்னுடைய பலங்களின் மேல் வைக்கும் நம்பிக்கையும், [illegible]து பலவீனங்களை ஏற்றுக் கொள்ளும் திடமும் பெண்களை அலுவலகத்தில் திரும்பிப் பார்க்க வைக்கும். அலுவலகத்தில் ஆண்–பெண் பேதமெல்லாம் கிடையாது என்று நீங்கள் முதலில் மனதில் எழுதிக்கொள்ள வேண்டும். அப்படியே ஒரு பாகுபாடு திரை மறைவில் இயங்கினால் கூட, எந்த நிறுவனமும் அதை வெளிக்காட்டுவதில்லை. எனவே, நிர்வாக விதிமுறைப்படி பெண்களுக்கு எதுவும் மறுக்கப்படப் போவதில்லை. அதையே துருப்புச் சீட்டாய்க் கொள்ளுங்கள். ஆணும் பெண்ணும் சமம் எனும் எண்ணமே தன்னம்பிக்கையை உயர்த்தும் நெம்புகோல் தான். எல்லோரும் சமமெனில், அங்கே திறமைசாலிகளுக்கு மட்டும் தானே வரவேற்பு!

சின்ன வேலையோ, பெரிய வேலையோ உங்களுக்கு இடப்படும் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றுங்கள். சின்னச் சின்ன வேலைகளை செவ்வனே செய்து முடிப்பவர்களுக்குத் தான் பெரிய பெரிய வாய்ப்புகள் காத்திருக்கும் எனும் அடிப்படையை மறக்காதீர்கள். புதிது புதிதாக படித்துக் கொண்டே இருங்கள். உங்களுடைய அசர வைக்கும் கல்வியினாலும், திறமையினாலும் அலுவலகத்தில் கவனிப்புக்கு உள்ளானீர்கள் எனில், நீங்கள் வென்று விட்டீர்கள் என்று அர்த்தம். தயக்கமில்லாத மனம் இன்னொரு தேவை. பெரும்பாலானவர்கள் அலுவலகத்தில் உயர் அதிகாரியிடமோ, சக பணியாளரிடமோ அலுவல் நிமித்தமான ஒரு சின்னக் கேள்வியைக் கேட்கக் கூடத் தயங்குவார்க்ள். இது ரொம்ப சாதாரண கேள்வியே? இது கூட தெரியவில்லையா என்று நினைத்திடுவார்களோ போன்ற தயக்கம் தான் இதன் காரணம். உண்மையில் சாதாரண கேள்வி என்று ஒன்று கிடையாது. தயங்காமல் கேள்வி கேட்பவர்கள் தான் பதிலைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

முதல் சுவடு எடுத்து வைக்காத பயணங்கள் இல்லை. சிறகை விரிக்காமல் வானத்தில் பாதைகள் இல்லை. எனவே, தோல்விகள் ஏற்படுமோ, பிறருக்கு முன்னால் ஒரு அவமானச் சின்னமாய் நிற்போமோ எனும் பயமே வேண்டாம். தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனிதனை அவமானங்கள் சந்திப்பதில்லை.

தயங்குபவர்கள் அலுவலக சூழலில் முன்னேற முடியாது. அவர்களை மிதித்து, அவர்களுடைய முதுகில் ஏறி மற்றவர்கள் ஓடிக்கொண்டே இருப்பார்கள். அப்புறம் காலம் முழுதும், மிதிபட்டுக் கொண்டே கிடக்க வேண்டியது தான். எனவே, தயக்கம் இல்லாத அணுகுமுறை அலுவலக வாழ்வில் மிகவும் அவசியம். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். இது என்னால் முடியும் என்று சொல்வது மட்டுமல்ல தன்னம்பிக்கை. இதை என்னால் செய்ய முடியாது... என்று சொல்வதும் தன்னம்பிக்கையின் வடிவம் தான். குறிப்பாக அலுவலக சூழலில் உங்களால் முடியாத விடயங்களை 'முடியாது' என்று மறுத்தால் தான் நீங்கள் கம்பீரக் குதிரை! இல்லையேல் பொதி சுமக்கும் கழுதை தான். எப்போதும் உங்கள் முதுகில் ஏதேனும் விழுந்து கொண்டே இருக்கும்! வேலை விடயத்தில் நான் ரொம்பத் திறமைசாலி எனும் உயர்வான அபிப்பிராயம் இருக்க வேண்டியது அவசியம். நம்மை நாமே உயர்வாக நினைக்கவில்லை யேல், பிறர் உயர்வாக நினைக்கப் போவதில்லை.

பெண்களின் தன்னம்பிக்கைக் குறைபாடுகளுக்கு பெற்றோரும் ஒரு வகையில் காரணம் என்கின்றனர் உளவியலாளர்கள். சின்ன வயதிலிருந்தே அவர்களை சிறப்புக் கவனம் எடுத்து தன்னம்பிக்கையை ஊட்டி வளர்த்தால், அவர்கள் அலுவலகங்களில் வீதிகளில் நடக்கும் போது தலை கவிழ்வதில்லையாம்! சின்ன வயதில் அப்பா, அம்மா, பிறகு நண்பர்கள், அதன் பின் கணவன், அவருடைய குடும்பம் என பிறர் சொல்லும் கருத்துக்களின் பிரதிபலிப்பாய் பெண்கள் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். உண்மையில் பெண்கள் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதன் பிம்பமல்ல. தான் யார், தன்னுடைய இயல்பு என்ன என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். (தொடரும்)



# கருவிகளும் பயன்களும்

| | | |
|---|---|---|
| ஏரோமீற்றர் | – | காற்று மற்றும் வாயுக்களின் எடை மற்றும் அடர்த்தியை அளக்கும் கருவி. |
| அம்மீற்றர் | – | மின்சாரத்தின் அளவீட்டை கணக்கிடுவது. |
| ஆடியோமீற்றர் | – | மனிதர்களின் கேட்கும் திறனை கணக்கிடும் கருவி. |
| போலோமீற்றர் | – | வெப்பக் கதிர்வீச்சின் அளவை கணக்கிடும் கருவி. |
| கிரையோ மீற்றர் | – | குறைவான வெப்பநிலையை அளவிடும் கருவி. |
| எலெக்ட்ரோ டைனமோமீற்றர் | – | மின்சாரம், வோல்டேஜ், திறன் எல்லாவற்றையும் மொத்தமாக அளவிடும் கருவி. |
| மேனோமீற்றர் | – | வாயுவின் அழுத்தத்தைக் கணக்கிடும் கருவி இது. |
| டோனோ மீற்றர் | – | ஒலியின் அளவை அளவிடும் கருவி. |
| வெர்னியர் | – | சென்ரிமீற்றர் அளவைவிட மிகக் குறைவான அளவீட்டை அளக்கும் கருவி. |
| பைரோமீற்றர் | – | அதிகபட்ச வெப்பநிலையை அளவிடும் கருவி. |
| பாத்தோமீற்றர் | – | ஒலி அலைகளைப் பயன்படுத்தி கடலின் ஆழத்தை அளவிடும் கருவி. |
| டைனமோ | – | எந்திர ஆற்றலை மின்சார ஆற்றலாக மாற்றும் கருவி. |
| வேவ்மீற்றர் | – | ரேடியோ அலைகளின் அலை நீளத்தை அளவிடும் கருவி. |
| பிளானிமீற்றர் | – | பரப்பை அளவிடும் கருவி. |
| ரெக்டிபையர் | – | ஏ.சி. மின்சாரத்தை டி.சி. மின்சாரமாக மாற்றும் கருவி. |
| டென்சிமீற்றர் | – | ஆவியின் அழுத்தத்தை அளவிடும் கருவி. |







# சிவிங்கிப்புலி

சிவிங்கிப்புலி பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த ஊனுண்ணி வகையைச் சேர்ந்த பாலூட்டி விலங்காகும். இது நிலத்தில் வாழும் விலங்குகளிலேயே மிகவும் வேகமாக ஓடக்கூடியதாகும். இதனால் மணிக்கு 105 கி.மீ. (65 மைல்) வேகத்துக்கு மேல் ஓட முடியும். ஓடும் போது வெறும் மூன்று நொடிகளில் 110 கி.மீ. வேகத்தை எட்டிப் பிடிக்கும். இதன் உடல் முழுவதும் 2 முதல் 3 செ.மீ. அளவுள்ள வட்டவடிவ கறுப்புப் புள்ளிகள் காணப்படும். அதன் கீழ்வயிற்றுப் பகுதியில் புள்ளிகள் எதுவும் காணப்படாமல் வெள்ளை நிறத்தில் இருக்கும். வயது வந்த ஒரு சிவிங்கிப்புலி 40 முதல் 65 கி.கி. எடையும் 112 முதல் 135 செ.மீ. நீளமான உடலும் 84 செ.மீ. நீளமுடைய வாலும் கொண்டிருக்கும். ஆண் சிவிங்கிப்புலிகள் பெண் சிவிங்கிப்புலிகளை விட சற்றுப் பெரிய தலையை உடையதாய் இருக்கும். பெண் சிவிங்கிப்புலிகள் 20 முதல் 22 மாதங்களில் இனப்பெருக்கம் செய்யும் பருவத்தை எட்டுகின்றன.





ஆண் சிவிங்கிப்புலிகள் 12 மாதங்களிலேயே இப்பருவத்தை எட்டி விடுகின்றன. பெண் சிவிங்கிப்புலியின் கர்ப்பகாலம் 98 நாள்கள் ஆகும். சிவிங்கிப் புலி குட்டிகள் பிறக்கும் போது வெறும் 150 முதல் 300 கிராம் எடையுள்ளனவாகவே உள்ளன. சிவிங்கிப்புலி இப்போது இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் அற்றுப் போய்விட்டது. மேலும் ஆபிரிக்க கண்டத்தில் அழிந்து வரும் உயிரினமாக வகைப்படுத்தப்பட்டு வேட்டையாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

# நண்பனாகும் தகுதி

சுண்டெலி ஒன்று..... தவளை ஒன்றுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. தவளையோ பெரும்பாலும் தண்ணீரிலேயே வசித்து வந்தது. அது ஒரு நாள் சுண்டெலிக்கு ...தான் நீச்சல் கற்றுக் கொடுப்பதாகக் கூறி... சுண்டெலியின் காலை தன் காலுடன் ஒன்று சேர்த்து கயிற்றால் கட்டிக் கொண்டது. அப்போது மேலே பறந்த பருந்து ஒன்று இவற்றைப் பார்த்து கொத்த வந்தது. உடனே தவளை ...சுண்டெலியுடன் தண்ணீரில் பாய்ந்தது.தண்ணீரில் சுண்டெலி மூழ்கி மூச்சு திணறி இறந்தது...அதன் உடல் மேலே மிதந்தது...ஆனால் கால்கள் இன்னமும் தவளையுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது.... அந்த சமயம்...தண்ணீரில் செத்த சுண்டெலி மிதந்ததைப் பார்த்த பருந்து கீழ் நோக்கி வந்து அந்த எலியைக் கொத்திக் கொண்டு உயரே பறந்தது. அதனுடன் சேர்ந்து கட்டப்பட்டிருந்த தவளையும் பருந்தின் பிடியில் சிக்கியது.பருந்து தவளையையும் கொன்று தின்றது.

நாம் ஒருவரை நண்பராக ஏற்றுக்கொள்வதற்கு முன்.. அதற்கு அவர்கள் தகுதியானவரா என்று யோசிக்க வேண்டும்.இல்லையேல் தவளைக்கு ஏற்பட்ட கதிதான்!



# வாழ்வை உயர்த்தும் பண்பு

(தொடர்ச்சி....)

அதிக மார்க் வாங்குகிறார்கள். பணிவு நல்ல நட்பை தருகிறது. எளிதில் வேலை கிடைக்க உதவுகிறது. பணி உயர்வுக்கு பிறரிடமிருந்து பரிந்துரை பெற்றுத்தருகிறது. போட்டிகள் பொறாமைகள், எதிர்ப்புகள், தடைகள் எதுவும் இருக்காது. மற்றவர்கள் கருத்துக்கு எதிர் கருத்தைக் கூட பணிவுடன் சொல்லும்போது அதற்கு நிச்சயம் அங்கீகாரமோ கவனிப்போ இருக்கும். இனிமையாகப் பேசுதலும் பிறர் நலனில் அக்கறை காட்டுதலும் எப்போதும் நமக்கு பல மடங்காகத் திருப்பிக் கிடைக்கும்.

திறமையான பாய்மரக்கப்பல் மாலுமிகள் காற்றின் சக்தியைக் கொண்டே காற்றுக்கு எதிர் திசையில் கூட கப்பலை செலுத்தக் கூடியவர்கள்.

அதிகமான கல்வி, புகழ், பதவி, அதிகாரம், செல்வம் நம்மிடம் சேர்ந்தால் அதைக் கொண்டு பிறர் பயன் பெறும் வரை தான் நமக்கு உயர்வு. மாறாக அது தரும் செருக்கால் மற்றவர்களது உணர்வுகள் காயப்படும் போது நாம் கீழ் நோக்கி செல்லத் தொடங்குகிறோம். அப்படி பிறர் நோகும் படி மமதையில் வாழ்பவர்கள் கீழே விழ நேர்ந்தால் அவன் கதி மாட்டிக்கொண்ட பிக் பொக்கட் கதி தான்.



அறிவை , அதன் பலயை பிறருக்கு பகிர்ந்து கொள்ளாத அறிவாளிகளை யாரும் மதிப்பதும், விரும்புவதுமில்லை. யாருக்கும் பயன்படாத பணத்தை காக்கும் பணக்காரனைப் பற்றி தெரிந்து கொள்ள திருடனைத் தவிர யாரும் ஆர்வம் காட்டுவதில்லை. புகழ் வரும்பொது தன்னடக்கத்தை பேண வேண்டும். புகழ் மமதையை தருமானால் மமதை விரைவில் அந்த புகழை அழித்து விடும். கல்வியும் சிந்தனையும் ஒருவனுக்கு சாபக்கேடாக கூட மாறலாம். கல்வியும் சிந்தனையும் ஒருவனை, அவனது உலகத்தை விரிவு படுத்துகிறது. அதோடு சேர்ந்து அவனது ஈகோவும் அதாவது ' தான்' என்ற அகந்தையும் வளர்கிறது. பிறருக்கும் அவனுக்கும் இடையே முதலாளி– தொழிலாளி போன்ற இடைவெளி அதிகரிக்கிறது. தனித்தனி தீவுகளாக மாறுகிறார்கள். இதனால்தான் கற்றவர்கள் ஒத்துப்போவதில்லை. படித்தவர்கள் தான் அதிகம் விவாகரத்து செய்கிறார்கள். கற்றவர்கள் தான் அதிகம் குழம்புகிறார்கள். பிறர் பேச்சை காது கொடுத்து கேட்பதும் பணிவு தான். தன்னடக்கம் உடையவனது அதிகாரம் மந்திரக்கோல் போன்றது. பணிவுள்ளவன்தான் சிறந்த தலைவனாக முடியும். அரசு இயந்திரத்தின் பல் சக்கரங்கள் பலருக்கும் பதவி மட்டும் தான் அடையாளம். அதிகாரப் போதையில் பொது மக்களிடம் பணிவின்றி நடந்து கொண்டவர் பலரும் பதவி போன பின் கிழிந்ததுணிதரைதுடைக் போவது போல் ஆகிவி கிறார்கள். தன்னைச் சுற்றித்தான் உலகம் எனும் மாயையை ஒழித்து, உலகத்தில் தான் ஒரு பாகம் எனும் அகந்தையற்ற நிலை மிக உயர்வான நிலை. எதையும் நாம் கொண்டு வரவில்லை, எதையும் எடுத்துச் செல்லப் போவதில்லை. எதையும் புதிதாக அறிகிறோம் அன்றி எதையும் நாம் உருவாக்கி விடவும் இல்லை.

# வடக்கு முதல்வரின் விருப்பத்திற்காகவே செயற்படுகிறது அரசு

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே 29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கிடைத்த 58 லட்சம் வாக்குகளை 70 லட்சம் வரை உயர்த்துவதற்குச் செயற்படுவதாக மேல் மாகாண சபை உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டியவில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதி முழு நாட்டுக்கும் கெட்ட காலம் ஆரம்பிக்கப்பட்டதாகவும், சிறிலங்கா சுதந்திர கட்சியைப் பிளவடையச் செய்தது மைத்திரி பின்னால் சென்றவர்களே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசு புடலங்காய், பீர்க்கங்காய் அரசு எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு விரும்பியது போன்று தற்போது இந்நாடு செயற்படுவதாக முன்னர் நினைத்திருந்தேன். ஆனால் வடக்கு முதல்வருக்கு விரும்பியது போன்றே அரசு நடந்துகொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கில் இடம்பெறும் அசம்பாவிதங்களை விட தற்போது வடக்கில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் குறித்தே ஆராய்வதற்கு ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (த)

# மைத்திரி கூட்டணியில் போட்டியிடுவதில்லை

## உறுதியான தீர்மானத்தில் பஸில்

கொழும்பு, மே 29

ராஜபக்ஷவினரை மிகவும் வன்மமான முறையில் பழிவாங்கி வரும் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான கூட்டணியில் இணைந்து அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இந்த தீர்மானத்தில் உறுதியாக இருக்கும் அவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் தனித்து வேறு கட்சி ஒன்றின் ஊடாகப் போட்டியிட தயாராகுமாறு தனது ஆதரவாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பஸில் ராஜபக்ஷவை அவரது ஆதரவாளர்கள் நேரில் சென்று பார்த்த போதே அவர் இதனை கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசின் முக்கியஸ்தர் ஒருவரின் அழுத்தங்களுக்கு அமைய தனது மனைவிக்கு எதிராகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ள பஸில் ராஜபக்ஷ, சிரிலிய சவிய நிதியத்தின் நிதி குறித்து வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவையும் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் எதிர்வரும் முதலாம் திகதி முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# இலங்கை-இந்தியா இடையே வர்த்தக உறவு பலம் வாய்ந்தது

## அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் பலம் வாய்ந்தவை என கைத்தொழில்,வணிகத்துறை அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 'டாட்டா' குழுமத்தினருக்கும் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கும் இடையிலான சந்திப்பு ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையில் அண்மையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடுகளை செய்வதுடன், உற்பத்தி துறையில் அதிக ஆர்வத்தை தாங்கள் கொண்டிருப்பதாகவும் அதற்கான சூழலை ஏற்படுத்தி தருமாறும் குறித்த சந்திப்பின்போது 'டாட்டா' குழுமத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சந்திப்பின்போது இலங்கையில் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையைத் தமக்கு சமர்ப்பிக்குமாறு அமைச்சர் றிஷாத் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை இலங்கையின் கைத்தொழில் துறை சார்ந்த மேம்பாடுகளுக்கு இந்தியாவின் பங்களிப்பு பெரும் உதவியாக இருப்பதாகவும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டினார். தற்போதைய அரசின் கீழ் ஏற்றுமதி துறையில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டு வருவதாகவும் அமைச்சர் றிசாத் டாட்டா குழும பிரதி நிதிகளிடம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-10)

# பஸில் உரிமை மனு ஜூனில் விசாரணை

கொழும்பு, மே 29

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அடிப்படை உரிமைமீறல் மனுவின் விசாரணை எதிர்வரும் ஜூன் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது

இது தொடர்பான அறிவிப்பை நேற்று முன்தினம் இந்த மனு அழைக்கப்பட்டபோது உயர் நீதிமன்றத்தின் மூன்று பேர் கொண்ட நீதியரசர்கள் குழு விடுத்தது.

இந்தக் குழுவில் பிரதம நீதியரசர் கே ஶ்ரீபவன் தலைமையிலான நீதியரசர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

மனுதாரரான பஸில் ராஜபக்ஷ சார்பில் நேற்று முன்தினம் முன்னிலையான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, தமது கட்சிக்காரருக்கு விடுதலையை கோரி மனுவைத் தாக்கல் செய்வதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, நிதிமோசடி வழக்கு தொடர்பில் பஸில் ராஜபக்ஷவுக்கான விளக்கமறியல் தண்டணையை நேற்று முன்தினம் கடுவலை நீதிமன்றம் நீடித்தமையும் குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோதமான முறையில் தான் கைது செய்யப்பட்டு தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தன்னை விடுதலை செய்ய வேண்டும் என பஸில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

திவிநெகுமவில் நிதி மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பஸில் உட்பட 4 பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி சனத் விஜயவர்த்தன ஊடாகத் தாக்கல் செய்யபட்டிருந்த மனுவில் பிரதிவாதிகளாக பிரதமர் அமைச்சரவை, நிதிமோசடிப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், மகஸின் சிறைச்சாலை ஆணையாளர், சட்டமா அதிபர் உட்பட 45 பேர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ப்ஸில் ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 04 ஆம் திகதி மற்றும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது. (த)

# சுதந்திரக் கட்சி அரசு விரைவில்

## தயாசிறி ஜயசேகர நம்பிக்கை

கொழும்பு, மே 26

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் கீழ் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசை விரைவில் ஏற்படுத்தப் போவதாக வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசைக் கட்டியெழுப்பிச் சகல இனங்களுடன் இணைந்து, நாட்டை முன்னெடுத்துச் சென்று முன்னுதாரண நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

குருணாகல் மடிகே மிதியால பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நான் முதலமைச்சராக தெரிவாகி ஒன்றரை வருடங்களில் 31 பாடசாலைகளை ஆரம்பித்தேன். பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் ஆசிரியர் பற்றாகுறை தீர்க்கப்படும்.

புதிய நல்லாட்சி அரசின் தடைகளை மீறி முன்னேறி செல்ல வேண்டியுள்ளது. அமைச்சரவையினால் நாட்டுக்கு எந்த நன்மையுமில்லை. அதேபோல் அவர்களால் வடமேல் மாகாணத்தில் வேலை செய்ய முடியாது.

தயாசிறியைப் பழி வாங்குவதற்காக இந்த மாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் 3000 ஆசிரியர் நியமனங்களை நிறுத்தியுள்ளார். அவர் பழிவாங்குவது என்னை அல்ல, அப்பாவிகளான மாகாண மக்களை என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். (த)

# பசிலின் மனைவிக்கும் வந்துள்ளது சோதனை

கொழும்பு, மே 29

கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற துறைமுக நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட சீன நிறுவனத்தினால் 600 மில்லியன் ரூபா புஷ்பா ராஜபக்ஷ என்ற அறக் கட்டளையின் வங்கிக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மனைவி புஷ்பா ராஜபக்ஷவின் கீழ் குறித்த அறக்கட்டளை இயக்கப்பட்டுள்ளது.

துறைமுக நிர்மாணிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியின் பொறுப்பாளரான கொழும்பு இன்ரர்நஷனல் கொன்ரெய்னர் ரேர்மினல் என்ற நிறுவனம் ஒரே காசோலையில் நேரடியாக குறித்த 600 மில்லியன் பணத்தை புஷ்பா ராஜபக்ஷ அறக்கட்டளை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்துள்ளனது.

குறித்த நிறுவனம் அறக்கட்டளையாக நிறுவப்பட்டிருந்தாலும், அதனை உருவாக்கியவர்கள் அந்த அறக்கட்டளையின் பணத்தைத் தனிப்பட்ட முறையில் மாத்திரம் பயன்படுத்துவதாக நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு உறுதி செய்துள்ளது.

அந்தச் சீன நிறுவனத்திற்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பின்னால், முன்னாள் அரசியல் முக்கியஸ்தர் ஒருவரும் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீன நிறுவனத்தின் ஒப்பந்தத்தின்போது குறித்த அரசியல் முக்கியஸ்தர் அவரது நிறுவனத்திற்கு சேர வேண்டிய 600 மில்லியன் தரகுப் பணத்தை நேரடியாகப் பெற்றுக்கொள்ளாமல் புஷ்பா அறக் கட்டளைக் கணக்கில் வைப்பு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல்கள் உறுதியாக்கப்பட்ட பின்னர் இவ் ஊழல் மோசடியில் தொடர்புடையவர் குற்றபுலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு அவருக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18.10.1938

மறைவு
09.06.2014

அமரர்
இராசையா
புவனேந்திரராசா

திதி: 29.05.2015



ஆண்டு ஒன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் துயரம்
ஆனாலும் என்றும் எங்கள்
நெஞ்சில் நீங்காது அப்பா
உங்கள் நினைவு

உங்கள் நினைவில் என்றும்

பாரதி வீதி, பத்தமேனி.

குடும்பத்தினர், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி இரங்கற்திருப்பலி அழைப்பும் நன்றி நவிலலும்



தாயின் மடியில் ★ 26.05.1951

ஆண்டவன் அடியில் ★ 03.05.2015

அமரர் மேரி மாலினி திருச்செல்வம்

பொறுமையின் பொற்குடம் சரிந்ததேனோ!
அமைதியின் அழகுப் பூங்கா சிதைந்ததேனோ!!
நிழல் தந்த தளிர் மரம் சாய்ந்ததேனோ - எம்
இல்லத்தின் குலவிளக்கு அணைந்ததேனோ!
சற்றுமே நினையாத சடுதியாய்ப் பிரிந்த உங்கள் நினைவு!
பற்றியே எரியுதே எம் இதயங்களில்,
மண்ணக வாழ்வின் வெற்றியே உங்கள் விண்ணக நுழைவு
என நம்பி ஒற்றியே நிற்கின்றோம்! எம்
விழிகளில் ததும்பிடும் நீரினையே!

கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சக்கோட்டை, அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட அமரர் மேரி மாலினி திருச்செல்வம் கடந்த 03.05.2015 இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தோருக்கும், நோயுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது முடிந்தவரை உயிர்காக்கப் போராடிய வைத்தியர்கள், தாதிகள், பணியாளர்களுக்கும், நேரடியாகவும், தொலைபேசி மூலமும் துயர் பகிர்ந்துகொண்டவர்களுக்கும், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு, மலர் வளையம் சாத்தியோருக்கும், இரங்கல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து அனைத்து வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

02.06.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்தி இரங்கல் திருப்பலியிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சக்கோட்டை, அல்வாய்.
T.P: 077 981 0057

குடும்பத்தினர்.

# சனத்தொகை அதிகரிப்பை ஒழுங்குபடுத்த வேண்டும்

*கோருகிறது பொதுபலசேன*

இனப்பரம்பல் பிரச்சினையை கையாளும் வகையில் நாட்டில், சனத்தொகை அதிகரிப்பை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுபலசேன இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், இது தொடர்பில் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

நாட்டின் பல இடங்களில் இன்று சிங்கள சனத்தொகையின் அளவு குறைந்துள்ளது.இந்நிலையில் பிராந்தியங்கள் இனத்துவ அடிப்படையில் நோக்கப்படக்கூடாது. அனைத்து மதங்களுக்கு மான திருமண சட்டங்கள் சமமாக இருக்கவேண்டும்.

இதேவேளை, தமது அரசியல் கட்சியின் மூலம் இது தொடர்பான யோசனைகளை ஏனைய கட்சிகளுக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்சிக் கொள்கையின்படி ஒரு சிங்கள குடும்பத்தில் ஒருவாக்கு தமது கட்சிக்கு கிடைக்கும் வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தேரர் கூறினார். (த)

# வெளிநாடுகளில் பாதிப்புற்ற இலங்கையருக்கு இழப்பீடு

கொழும்பு, மே 29

வெளிநாடுகளில் துன்ப துயரங்களுக்கு மத்தியில் தொழில் புரியும் இலங்கையர்கள் காரணமாகவே நாட்டுக்கு அதிகளவில் அந்நிய செலாவணி கிடைத்து வருவதாக வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற வெளிநாடுகளில் தொழில் புரிந்த நிலையில், பாதிப்புகளை அனுபவித்தவர்களுக்கு இழப்பீடு களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள தமது குடும்பத்தினர் களுக்காக அதிகளவிலானோர் வெளிநாடு களுக்கு சென்று தொழில் புரிந்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் பல துன்ப துயரங்களுக்கு மத்தியில் தொழில் புரிந்து வரும் இலங்கையின் தொழிலாளர்கள் காரணமாகவே இலங் கைக்கு அதிகளவிலான அந்நிய செலாவணி கிடைத்து வருகிறது. இதனை எம்மால் மறக்க முடியாது என மங்கள சமரவீர குறிப்பிட்டுள் ளார். (த)

# ஒரு கோடி ரூபா பெறுமதியான இரத்தினக் கல்லுடன் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்களு டன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரை நோக்கிப் புறப் பட்டுச் செல்வதற்காக நேற்று அதிகாலை விமான நிலையத்திற்கு வந்த போதே அவர் கைது செய் யப் பட்டதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தந்திரமான முறையில் மறைத்து வைத்திருந்த 105 மாணிக்கக் கற்களை தாம் கைப்பற்றியதாகவும் சுங்க அதிகாரிகள் கூறி யுள்ளனர். அளுத்கம பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

விமான நிலையச் சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த)

## மரண அறிவித்தல்கள்



### விநாசித்தம்பி கனகநாயகம் (காலி வர்த்தகர்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி கனகநாயகம் 26.05.2015 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"துரைமலர் பொய்கை"
கனகேந்திரா கொரினர்ஸ்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்.

### நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி



(உரிமையாளர்-ஜெகதா ஹாட்வெயர்ஸ், இல.321, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.)

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், 145/3, பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி (உரிமையாளர், ஜெகதா ஹாட்வெயர்ஸ், இல.321, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.) 26.05.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா-பொன்மலர் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெகதாம்பிகையின் அன்புக் கணவரும், நிஷாகரன் (ஜெகதா மொபைல் உலகம்), நிஷாந்தன் (Global Engineering Net Work) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர்மதி, ஸ்ரீமகள் ஆகியோரின் அன்பு மாமனும், ஜனனி, ஜர்ஷனன், திருவரேஸ்வர் ஆகியோரின் அன்புப் பேரனும், தவமலர் (லண்டன்), யோகேஸ்வரி, வாகீஸ்வரன், சிவயோகம் பத்மாசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், சிறிஸ்கந்தராசா மற்றும் சாந்தரூபி, வசந்தகுமார், தயாபரன், நிர்மலாதேவி (ஜேர்மனி), இந்திரவதனா, ஜெயவதனா, ஜெயமாலா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

145/3, பிரப்பங்குளம் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்: தெ.நிஷாகரன்
தெ.நிஷாந்தன்
(மகன்மார்)

(60221) (10.6)

## மரண அறிவித்தல்

### சதானந்தம் (வவி) பிரசாத்



பாரதி வீதி கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதானந்தம் (வவி) பிரசாத் நேற்று முன்தினம் (27.05. 2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சதானந்தம் (வவி) -ஜீவ வதனி (வதனி) தம்பதியரின் அன்பு மக னும், ஐயாத்துரை-தேவராணி காலஞ் சென்ற மணியம் மற்றும் செல்லம் தம்பதிகளின் அன்புப் பேரனும், ரேவதி (மாலா), சரண்ஜா, சஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நித்தியரஞ்சிதம் (கமலா) கந்தசாமி



யாழ்.பிறவுண் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பு புளூமெண்டல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியரஞ்சிதம் (கமலா) கந்தசாமி 25.05.2015 திங்கட்கிழமை யாழ்ப் பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசி கந்தையா-கனகமணி தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் துரையம்மா தம்பதியரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- ஆசைப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், கந்தசாமியின் அன்பு மனை வியும், விஜிதா, சுஜாதா, சிவமுரளி ஆகியோரின் அன்புத் தாயும், விமலன், விக்கினேஸ்வரி (உஷா), அன்ரன், விஜயன் அருள்வதனி, நிர்மலாதேவி, பிங்கலாதேவி (கிளி), பத்மசேகர், கிருஷ்ணரூபன், காலஞ்சென்றவர் களான கமலேஸ்வரன், சிறீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெசிந்தா, பிரதீபா, சுபாஜினி, நித்தியானந்ததேவி, ஜெயராணி, இந்திரா- சின்ராசு, புஸ்பராணி-கந்தசாமி, நாகேஸ்வரி, ஐயாத்துரை, தவபாலன், ராச ரத்தினம், தெய்வேந்திரம், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பன்னீர் செல்வம் ஆகியோரின் மைத்துனியும், கவிதா, சுபீதா, சுபீதர், ஷோபிதர், விவேக்சன், சுவேக்சன், டாலி, ராதிகை, ரதிக்கா, நந்தீஸ், ரதீஸ், ஒமேரா ஆகியோரின் பெரியதாயும், போனாட், கிருபாகரன், வத்சலா, குமார், பிரபு, சிந்து, கிரி, திருச்செல்வம், ரவீந்திரன், புஸ்பநாயகி, ஜசுந்தா-நிமலன், சுஜி- அமலன், எஸ்தர், எட்வினா, ஜெடிஸ், ஹயன்சன், ஸ்டானி, கிருஷ்ணி, வர்ஷா, ஷாருஜன், மயூரி-பிரதீசன், சஞ்ஜீவன், சுஜீவன், நிவாயினி, மயூரி, மைதிலி, துஷ்யந்தன், துஷ்யந்தி, துசிகரன், ப்ரியா, பிரின்சன் ஆகியோ ரின் அன்பு மாமியும், நொயலின், ரேச்சல், பெனட்டா, ஜேசன், ஷெரின், ரொபின், மத்தியு, கபிரியேல், ஏஞ்சல், ஷர்ணி, தாரிகா, மகிஷா, அக்ஷரா, ஜேய்டன், தேவ்னா, அர்ஜீன், கீர்த்தனன், கீர்த்தனா, ராஜ்தனன், கிஷானிகா, டயானா, தியன்சன், அருண், அக்ஷயன், கல்கி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை அவரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக மு.ப 11.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

76/59B, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 422 3187

(60210) (10.6.5)

தகவல்: குடும்பத்தினர்.

பிறப்பு : 07.03.1943

இறப்பு : 25.05.2015

## இலங்கை அரசின் நிலைப்பாடு மீனவர் பிரச்சினைக்கு தீர்வாகா

புதுடில்லி, மே 29

இரண்டு நாட்டு மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு பிரச்சினைக்கு தீர்வை கொண்டு வராது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் வருடத்தில் 65 நாள்களுக்கு, இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று இந்தியத் தரப்பு கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

எனினும் இதனை நேற்று முன் தினம் மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர நிராகரித்திருந்தார்.

65 நாள்கள் அல்ல, 65 மணித்தியாலங்கள் கூட இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பில் அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் குறிப்பிட்டிந்தார்.

இந்தநிலையில் குறித்த கருத்து பிரச்சினையைத் தீர்க்க உதவாது. இலங்கை மீனவர்களும் இந்திய கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக அடிக்கடி அவர்களும் இந்திய தரப்பால் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த சூழ்நிலையில் இரண்டு நாட்டு மீனவர்களினதும் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு நிலைமைகள் ஆராயப்பட வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (த)

## விமலின் மனைவி திடீர் சுகவீனம்

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவிக்குத் திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்சவுக்கு கொழும்பு நிதி குற்ற விசாரணைப் பிரிவு, நேற்றுக் காலை 9 மணிக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்திருந்த போதும், அவர் அங்கு முன்னிலையாகவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

காணி விவகாரம் ஒன்று தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப் பாட்டுக்கு வாக்குமூலம் அளிப்பதற்காகவே அவர் நேற்றுக் கொழும்பு நிதி குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

உடல் நிலை சரியில்லாத காரணத்தினாலே அவர் கொழும்பு நிதி குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (த)

## தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பம் கோரியுள்ளது சு.க

நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடு வதற்கான விண்ணப்பங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரியுள் ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சியின் உறுப்பினர்கள் விண்ணப்பிக்க முடியும்.

புதிய வேட்பாளர்களைப் போன்றே தற்போது பதவி வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளும் தேர்தலில் போட்டியிடுவதற்கான தமது விருப்பத்தை தெரிவிக்க இந்த விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒரு விண்ணப்பப்படிவத்தின் விலை 2000 ரூபாவாகும். இந்த விண்ணப்பப்படிவம் ஜூன் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஒரு விண்ணப்பப்படிவத்தின் விலை 500 ரூபாவாகும். இந்த விண்ணப்பப்படிவம் ஜூன் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

இணையத் தளத்தில் பணத்தைச் செலுத்தியோ அல்லது சுது வெல்லவில் அமைந்துள்ள மக்கள் வங்கி கிளையில் பணத்தைச் செலுத்தி அந்தப் பற்றுச் சீட்டைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலமும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)


### சிறுநீரகம் தேவை

வயது 22-45 B+ve வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
(இருபாலாரும்)
தொடர்பு:- 077 5738194

### வேலைவாய்ப்பு

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ரிஸ்பரி, ஏமாஸ் தொழிற்சாலைக்கு ஆண்/பெண் தேவை 18 - 35, 35000/= உயர் சம்பளம்.
இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்:
077 292 6468 (60072) (3.3.6)

### காணி விற்பனைக்கு

ஜின்னாலேன்,
மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணத்தில்
(ஐந்து சந்திக்கு அண்மையில்)
2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 967 2684,
004 915 213 286 080 (60209) (3.3.6)

### சேவை

தாவடிக்கு அண்மையில் மிருகவைத்திய சேவைகளுக்கு
தொடர்பு: 077 973 8802, 021 224 2502

### விற்பனைக்கு

லோர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0778605098

### சீரடி சாய்பாபா ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை.
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கஸ்தூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக), நல்லூர்,
(59429)(4.3.7)

### IELTS UK KU Education

MBA(London) Qualified Trainer Call: 0777302887
Visit: http://edu.kugroup.info/ielts
021-3208342 (A.G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அனுபவமுள்ள சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம் IELTS Life Skills-A2-B1
K.U Education, No 626 1/1, First Floor, K.K.S Rd, Jaffna.

### வேலையாள் தேவை

சாவகச்சேரி டச்சுவீதியில் உள்ள
அபிஷன் ஒட்டுத் தொழிலகத்திற்கு
மின் ஒட்டுநர்(Welding)
உடனடியாகத் தேவை.
தொடர்பு:077 949 2238

### தவறவிடப்பட்டுள்ளது

சாவகச்சேரி கால்நடை வைத்திய நிலையத்தில் கடைமையாற்றி ஓய்வு பெற்ற அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தரான சரவணமுத்து இரத்தினசிங்கம் என்பவரினது தேசிய அடையாளஅட்டை, வரி அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம் என்பன சாவகச்சேரி பகுதியில் தவறவிடப் பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
T.P - 0779595059

### விற்பனைக்கு

SAFARI மோட்டார் சைக்கிள், CCTV கமரா செற், வீட்டுத் தளபாடங்கள், மேலும் தொலைத் தொடர் பகம், அரைக்கும் ஆலை, ரயர் கடை மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றுக்குரிய பொருள் களும், அரிசி ஆலை பாவனைக்குரிய தேடி எலிவேட்டர் (4) 5KV லிஸ்டர் டைனமோ என்பன வும் மலிவு விலையில்
தொடர்பு: 0779912304

### இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்திரி மதிமுருகன் ஜோதிடர்

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இல. 175, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ஸ்டான்லி வீதி, G.G.Hotel, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 595 0463

### வீட்டுப் பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் தேவை. வயது30-45, ஓரளவு ஆங்கிலம் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது. இன்று (29.05.2015) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்
தொடர்பு: 076 702 2737
(60209) (3.3.6)


### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்-2015

யா/இணுவில் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தினை 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 2.00 மணிக்கு கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் வைப்பதற்கு நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது. எனவே பெற்றோர்கள் அனைவரும் தவறாது அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.


தலைவர்/செயலாளர்
யா/இணுவில் மத்தியகல்லூரி

### மகளிர் தொழில் வங்கி கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பினைத் தேடுவோரையும், தொழில் வழங்குநர்களையும் இணைக்கும் முகமாக மாவட்ட மட்டத்தில் மகளிர் தொழில் வங்கியினை ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கு திறன்சார்ந்த / திறன் சாராத அனைத்து ஆர்வமுள்ள பெண் களும்எமது அலுவலகத்தில் உரிய விண்ணப்ப படிவத்தினைப் பெற்று பதிவினை, மேற்கொள் ளலாம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவி,
கிளிநொச்சி மாவட்ட மகளிர்
அபிவிருத்தி ஒன்றியம்,
பழைய கச்சேரி,
கிளிநொச்சி.
தொடர்பு: 021 320 8172

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரி முதல்வர்
திருவாளர்
வீரவாகு ஓங்காரலிங்கம் (SLPS - I) அவர்கள்

இலங்கை அதிபர் சேவை வகுப்பு தரம் I இற்கு பதவிஉயர்வு பெற்றமையையிட்டு எமது பாடசாலையின் ஆசிரியர் நலன் புரி சங்கம் அவரை அகமகிழ்ந்து பாராட்டுவதோடு அவர் மென்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

நலன்புரி ஆசிரியர் சங்கத்தினர்.
யா/ நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம்

### வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) பதவி வெற்றிடம்

பதவி பொதுமுகாமையாளர்
சம்பள குறியீட்டு இல:- 101/06
சம்பளஅளவுத்திட்டம் - 11200-140 x 10-150 x 10-14100.00
வயது - 18-45 வரை

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பொதுமுகாமையாளர் (101/08) பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்பு அத்தாட்சிப்பத்திர சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்து **தலைவர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வேலணை.** என்னும் முகவரிக்கு 15.06.2015 ஆம் திகதிக்கு முன்னர் நேரடி யாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்ட முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 வருடகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 வருட கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமை ஒன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் குறைந்தது 04 வருட கால அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருடகால அனுபவம் / க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 06 வருடம் சேவையாற்றிய அனுபவம்.

**விண்ணப்ப முடிவுதிகதி :- 15.06.2015**

குறிப்பு - கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கப்பணியாளர்கள் தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
வேலணை.


### Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES
SURIYA IN & AS



பிளாட்டினம் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☏ 021-2227712
CeylonTheatres www.ceylontheatres.com

# பிரியதர்ஷன யாப்பாவை உடனடியாக கைது செய்க

## ஜனாதிபதியிடம் ஜே.வி.பி கோரிக்கை

கொழும்பு, மே 29

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு எதிராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் குற்றம் சுமத்தப்பட்டதற்கமைய அவரைக் கைது செய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.

குருணாகல் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தங்கள் கட்சி பொதுச் செயலாளரை கைது செய்ய ஆயத்தமா என தற்போது நாங்கள் ஜனாதிபதியிடம் கேட்கிறோம். ஏனென்றால் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் அவர் களவு செய்துள்ளார்.

அவர் பெற்றோலிய அமைச்சராகச் செயற்பட்ட போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணம் எடுத்து தேர்தலின்போது உலர் உணவுப் பொருள்களை மக்களுக்குப் பகிர்வதாகக் கூறி 2500 பெறுமதியான 2300 உணவுப் பொதிகள் பெற்று அதனை அவரது வீட்டுக் களஞ்சிய அறையில் வைத்திருந்தார்.

அந்தப் பொருள்களைப் பெறுப்பேற்றுக்கொண்ட இளைஞர் சதொசவில் இருந்த பொருள்களை அனுர பிரியதர்ஷன யாப்பா வீட்டில் இறக்கியதாகச் சாட்சி கூறுகிறார்.

ஜோன்ஸ்டன் மீது சுமத்தப்பட்டுள்ள அதே குற்றசாட்டு அநுர யாப்பாவுக்கும் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் ஜொன்ஸ்டன் உள்ளே இருந்தார், அனுர யாப்பா வெளியே இருக்கின்றார் ஜனாதிபதி தலைவராகச் செயற்படுகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அநுர யாப்பா என்பதனால் தான் அவர் கைது செய்யாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

முடியும் என்றால் ஜோன்ஸ்டனைப் போன்று அனுர யாப்பாவையும் கைது செய்து காட்டுங்கள்– என்றார். (த)

# நைஜீரியாவில் கடத்திய இலங்கையர் விடுதலை

கொழும்பு, மே 29

நைஜீரியாவில் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் விடுவிக்கப்பட்டுள்ளார். இதனை அவரின் குடும்ப உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

10 வருடங்களாக நைஜீரியாவில் பணிபுரியும் டி.ஏ.கருணாதாஸ என்பவர் அண்மையில் கடத்திச் செல்லப்பட்டார். இதன்போது அவருக்குப் பாதுகாப்புக்காகச் சென்ற பொலிஸ்காரர் கொல்லப்பட்டார். வாகனச் சாரதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இந்தநிலையில் கருணாதாஸவை விடுவிக்க ஆயுததாரிகள் பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாகக் கோரியிருந்தனர். எனினும் அவரின் விடுவிப்புக்காகப் பணம் செலுத்தப்பட்டதா? என்ற விடயம் இன்னும் தெரியவரவில்லை. (த)

# மினி சூறாவளியால் இரு படகுகள் சேதம்



வடமராட்சி, மே 29

பருத்தித்துறை துறைமுகக் கடலில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் வீசிய மினி சூறாவளியால் கடலில் மூழ்கிய இரு படகுகளை பருத்தித்துறை பிரதேச 551 ஆவது படைப்பிரிவினர் நேற்றுப் பகல் மீட்டெடுத்தனர்.

இந்தச் சம்பவத்தில் படகில் கடலில் மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவரர் கடலில் தூக்கி வீசப்பட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

திடீரேன வீசிய சூறாவளியின் போது கடலில் மீன்பிடியில் ஈடுபட சென்ற மேலும் சில படகுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### அ'புரம்

கற்களால் தாக்கப்பட்டது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தல் 130 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் அவர்கள் அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

எதிர்வரும் முதலாம் திகதியும் 3 மற்றும் 4ஆம் திகதிகளிலும் இந்த வழக்கு மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படும். அப்போது குற்றத்தில் நேரடியாகத் தொடர்புபடாத மாணவர்களை பிணையில் விடுவிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை ஒன்றரை மணி நேரம் அவர்கள் மாணவர்கள் மற்றும் கைதிகளைச் சந்தித்துப் பேசினர். முதலில் மாணவர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. தொடர்ந்து ஏனையவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (உ–4)

### பிரதமர்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 85 பேர் கையெழுத்திட்டுள்ளனர். மொத்தமாக 130 பேர் இதில் கைச்சாத்திடுவர். அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள் சிலரும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர். இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் – ஜூன் 9ஆம் திகதியின் பின்னர் – ரணில் விக்கிரமசிங்கவால் பிரதமர் பதவியில் நீடிக்க முடியாது. நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அனைவரும் கைச்சாத்திட்டதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்போம். இது குறித்து அவருக்கு அறிவித்ததன் பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முடியாது என்று ஜனாதிபதியால் கூறமுடியாது. நாம் பிரேரணையை முன்வைத்ததன் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் அல்லது எமது பிரதமர் ஒருவரை நியமிக்கவேண்டிய நிலைதான் ஜனாதிபதிக்கு ஏற்படும்.

இந்த அரசுக்கு நாம் 100 நாள்களை வழங்கினோம். மேலதிகமாக 50 நாள்களையும் வழங்கினோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நாட்டில் மைத்திரி (கருணை) அரசொன்றை ஏற்படுத்துவதாகக் கூறினார். ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ இந்த நாட்டில் வைராக்கியமானதொரு ஆட்சியையே நடத்தி வருகின்றார்" – என்றார். (உ–சி)

### மதிதயனின்

அவரது சடலம் அவருடைய வீட்டிலிருந்து இறுதிக் கிரிகைகளின் பின் நல்லடக்கத்திற்காக மண்டூர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அவருடைய இறுத்திச் சடங்கில் அவரது சமூக சேவையினைப் பாராட்டி இரங்கல் உரைகள் பல இடம்பெற்றன. இதில் அரசியல் பிரமுகர்கள் அரச அதிகாரிகள் உறவினர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர். (உ–10)

### கப்டனைக்

வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவர் தொடர்பான வழக்கு 2011ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. விசாரணையின் பின்னர் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி அறிவித்தார். எனவே எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு சாவுத் தண்டனை விதிப்பதாகத் தீர்ப்பில் தெரிவிககப்பட்டது.

யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளர் கனகாம்பிகைமலர் சிவபாசுந்தரம் தீர்ப்பை அறிவித்தார். மின் விளக்குகள் அணைக்கப்பட்டு, மின் விசிறிகள் நிறுத்தப்பட்டன. அனைவரும் எழுந்து நிற்க, ஆணையாளர் தனது தீர்ப்பை அறிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி தீர்மானிக்கும் தினத்திலும் இடத்திலும் உயிர் பிரியும் வரை தூக்கில் இடப்படுவார் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தீர்ப்பு ஆவணத்தில் கையொப்பம் இட்ட பேனாவை நீதிபதி உடைத்து எறிந்ததுடன் நீதிமன்று கலைந்தது. (உ–4)

### காணாமற்

வுள்ளது.

இந்த ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட இந்தக் குழு ஏற்கனவே வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல இடங்களிலும் தனது விசாரணை அமர்வுகளை நடத்தியிருக்கிறது. தனது விசாரணைகள் குறித்த இடைக்கால அறிக்கை ஒன்றையும் அது ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது. எனினும் இன்னும் விசாரிக்கப்படவேண்டிய பல ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் உள்ளன.

ஆணைக்குழு அதனது தற்போதைய வேகத்தில் நகர்ந்தால் அனைத்து முறைப்பாடுகளையும் விசாரித்து முடிப்பதற்கு குறைந்தது 15 ஆண்டுகள் எடுக்கும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதியின் செயலாளருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையை மேலும் இரண்டால் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகமவும் உறுதிப்படுத்தினார்.

"ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றை விசாரணை செய்வதற்காக, ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய, இரண்டு புதிய ஆணையாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை விட புதிய விசாரணைக் குழுக்களை நியமிப்பதற்கும் இந்தச் சந்திப்பில் அனுமதி வழங்கப்பட்டது. ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கையளித்த இடைக்கால அறிக்கையில் இதற்கான அனுமதிகளைக் கோரியிருந்தது. அதற்கமையவே, இந்த அனுமதிகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன" – என்றார் பரணகம. (உ–5)

### யாழ். நகர

திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ். நகரப் பகுதியின் கழிவகற்றல் பொறிமுறையின் கீழ், மாநகரப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மலசலகூடம் மற்றும் சமையலறைக் கழிவு நீர் வெளியேற்றப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும். இதற்காக நிலத்தடிக் கழிவகற்றல் குழாய்கள் நகரம் முழுவதும் பொருத்தப்படவுள்ளன.

அதேபோன்று நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான நிலத்தடிக் குழாய்களும் பொருத்தப்படவுள்ளன.

நகரப் பகுதியிலுள்ள பிரதான வீதிகள் மற்றும் உப வீதிகளில், இரண்டு அடி ஆழத்திற்குத் தோண்டப்பட்டு குழாய்கள் புதைக்கப்படவுள்ளன. எதிர்வரும் டிசெம்பர் மாதம் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–5)

### இராணுவத்தை

வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில், வடக்கிலிருந்து மட்டும் இராணுவத்தை அகற்ற வேண்டிய தேவையில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் போர்க் குற்றம் புரிந்த இராணுவம் ஆக்கிரமிப்பு படையாக தொடர்ந்து இருக்கக் கூடாதென்று, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியிருந்த நிலையிலேயே, அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (உ–5)

### பாலியல்

விழிப்புக் குழு ஒன்றும் கல்விக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

பரந்தன் பகுதியில் 6 வயது சிறுமியி ஒருத்தி அடையாளம் தெரியாத நபரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். பாடசாலைக்குச் சென்றிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கிளிநொச்சிப் பொலிஸார் இது தொடர்பிலான விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். சந்தேகத்தின் பேரில் சிறுமியின் ஊரைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவன் ஒருவனைக் கைது செய்துள்ளனர். அவனை சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தற்போது சிறுவன் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நேற்றுக் காலை ஊரவர்களும் சிறுமியின் உறவினர்களும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். எனினும் பின்னர் அது சிறுமியின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று மாலை அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொலிஸார் இணைந்து ஊர் மக்களுடன் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண கல்லி அமைச்சர் த. குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி பிரதேச சபை உப தவிசாளர் நகுலன், கண்டாவளை பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி சுரேஸ், கிராம அபிவிருத்தி தலைவர், பாலர் அபிவிருத்தி உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச செயலகத்தில் பெண்கள் விவகாரங்களைக் கவனிக்கும் அலுவலர், கிராம சேவகர், கிளிநொச்சி தலைமை பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி பிரியந்த ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சிறுமியினுடைய இந்தச் சம்பவத்திற்கு பின்னர் எந்த அசம்பாவிதங்களும் இடம்பெறாதவண்ணம் கிராமத்தை பாதுகாக்கவேண்டும் என்று கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. அதற்காக பரந்தன் சிவபுரம் பகுதியில் உள்ள 11 குறுக்கு தெருக்களிலும் இருந்து ஒருவர் வீதம் தெரிவுசெய்து அவர்களுடன் கிளிநொச்சி பொலிஸார், கரைச்சி பிரதேச சபை உப தவிசாளர் உள்ளடங்கலாக 15 உறுப்பினர்களை உள்ளடக்கிய விழிப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அத்தோடு பாடசாலை செல்லாத மாணவர்களை கண்டறிந்து பாடசாலையில் சேர்ப்பதற்காக 5 பேரைக் கொண்ட கல்விக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. (உ–21)

### 4 மாதங்களில்

"குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தவர் களது எண்ணிக்கை மாத்திரமே இவை. முறைப்பாடு செய் யப் படாத சம்பவங்கள் இன்னும் பல இருக்கலாம்"

என்றார் அமைச்சர்.

சர்வதேச புகைத்தல் தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார் அமைச்சர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பாலியல் கொடுமைகள் இடம்பெற்றிருந்தாலும் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். "இங்குள்ள மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் பதிவான முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிக அதிகமாகவுள்ளது. இந்த வருடம் கடந்த ஏப்ரல் வரையான காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாலியல் முறைகேடுகள் மிக அதிக அளவில் பதிவாகியுள்ளன. எமது சமூகத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ–4)

## கட்டுநாயக்கா ஊடாக சவூதிக்கு பயணிக்கும் இந்தியப் பெண்கள்

### இரகசியச் செயற்றிட்டம் மும்முரம்

கொழும்பு, மே 29

சுற்றுலா விஸா மூலமாக இந்தியப் பெண்களை இந்த நாட்டுக்கு வரவழைத்து குவைத், சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக அனுப்பி வைக்கும் வியாபாரமொன்று இடம்பெற்று வருவதாக விமான நிலைய ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகப் பணியாற்றுவதற்குப் பெண்களை அனுப்ப இந்திய அரசு தடை விதித்திருப்பதால் இந்தியாவிலும் இங்கும் செயற்படும் முகவர்கள் ஒருங்கிணைந்து இந்த வியாபாரத்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து சுற்றுலா விஸா மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சிறு சிறு குழுக்களாக வரும் பெண்கள் உள்வரும் பாதையில் உள்ள மேடைக்கு வந்ததன் பின்னர் அவர்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கி மீளவும் வெளியேறும் பாதையின் மேடை ஊடாக விமான நிலையத்துக்குள் அவர்களை அனுப்பும் இரகசியச் செயற்றிட்டமொன்று இடம்பெற்று வருவதாக விமான நிலைய ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (த-22)

## இலங்கை - பாகிஸ்தான் நெருங்கிய வர்த்தக உறவு



கொழும்பு, மே 29

இலங்கையுடனான இரு தரப்பு வர்த்தக உறவை ஒரு பில்லியனுக்கு குறையாதவாறு ஈட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகப் பாகிஸ்தான் தூதுவர் கூறியுள்ளார். கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோதே இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் சைத் ஷகீல் ஹுசைன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் விசேட அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்த தூதுவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் புதிய மாற்றமானது பாகிஸ்தான் – இலங்கை இடையேயான உறவுகளை வலுவான நிலையில் முன்னோக்கி நகர்த்தக் கூடியதாக இருக்கும். பாகிஸ்தான்–இலங்கை இடையேயான இரு தரப்பு வர்த்தகம் 2014 ஆம் ஆண்டில் 350 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் கடந்திருக்கின்றது. இந்த நிலையில் எமது அடுத்த கட்ட இலக்காக இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை 460 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிக்கு அப்பால் ஒரு பில்லியனாக உயர்த்த வேண்டும் என்பதுதான்.

இஸ்லாமாபாத்தில் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு அமர்வுகளுக்கான முன்னாயத்தங்கள் துரிதப்படுத்தப்படுகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் எமது உயர்மட்ட வர்த்தகக் குழுவினரோடு உடன்பட்ட புதிய வர்த்தக முயற்சிகளை தொடர்ந்து எங்கள் புதிய வர்த்தக துறை அமைச்சர் குர்ராம் டஸ்ட்கிரி கான் கொழும்புக்கு வரத் தயார் நிலையில் இருக்கின்றார். பாகிஸ்தான் முதன் முதலாக இலங்கையுடனேயே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் [illegible]ச்சாத்திட்டது. இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளுக்கிடையிலான பிராந்திய கொள்கையின் நல்லுறவையும், நாட்டின் பொருளாதரத்தில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுகின்றது–என்றார். (த-10)

## கதிர்காமப் பாதயாத்திரை சந்நிதியிலிருந்து ஆரம்பம்



யாழ்ப்பாணம், மே 29

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டுப் பாதயாத்திரை ஆரம்மாகியுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி வடமராட்சி தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் இருந்து ஆரம்மாகிய பாத யாத்திரை புத்தூர் மிருசுவில் ஊடாக கடந்த 25 ஆம் திகதி பரந்தன் முரசுமோட்டை சிவசுப்பிரமணிய ஆலயத்தை வந்தடைந்து பாதயாத்திரை அங்கு இடம்பெற்ற உற்சவத்தில் பங்கு கொண்டு மீண்டும் கருமபரம் மற்றும் புதுக்குடியிருப்பு வற்றாப்பளை கண்ணகி ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

வற்றாப்பளை கண்ணகி ஆலயத்தின் பொங்கல் நிகழ்வை நிறைவு செய்து கொண்டு எதிர்வரும் 2ஆம் திகதி புறப்படும் பாதயாத்திரை திருகோணமலை மற்றும் சீனன் குடா ஊடாகப் புறப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவுடன் பாத யாத்திரை நிறைவு பெறும். (த-421)

# கிழக்கு அபிவிருத்தியை துரிதப்படுத்த உத்தரவு

### விடுத்தார் அமைச்சர் ஹக்கீம்



கொழும்பு, மே 29

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு நகர அபிவிருத்தி திட்டங்களுக்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளைப் பணித்துள்ளார் அமைச்சர் ஹக்கீம்.

நாடளாவிய ரீதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு அமைவாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்வதற்கான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் அவரது அமைச்சில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது முக்கியமாக அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் வரை நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பிரதான செயற்திட்டங்கள் பற்றி வரைபடங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் தரிசு நிலமாகக் காணப்படும், காணியை ஒலுவில் நகர அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்குப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதையிட்டு அமைச்சர் ஹக்கீம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஒலுவில் பிரதேசத்தில் மண் அரிப்பினால் பெரும் நிலப்பகுதி கடலினால் காவு கொள்ளப்படுவதாக அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டிய அமைச்சர் ஹக்கீம், அத்தகைய பாதிப்பை தடுத்து நிறுத்துவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு அத்திவாரத்துடன் சேர்த்து ஒலுவில் வெளிச்ச வீடு ஆபத்தான நிலையில் இருப்பது பற்றியும் குறிப்பிட்டு, அதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்–என்றார்.

மட்டக்களப்பு நகரில் ஒல்லாந்தர் கோட்டை அமைந்துள்ள பிரதேசத்தை பாரம்பரிய மரபுரிமைப் பிரதேசமாக மையப்படுத்தி, தேவையான புனர் நிர்மாணங்களை மேற்கொண்டு எழிலூட்டுவதற்கான வழிவகைகளும் ஆராயப்பட்டன. காத்தான்குடி கடற்கரை பூங்கா, கல்லடிப் பாலத்தை அண்டிய பறவை சரணாலயத்தோடு கூடிய பூங்கா, காந்தி பூங்கா, ஏறாவூர் கடலேரி பூங்கா, ஏறாவூர் பஸ் தரிப்பிடம், ஏறாவூர் புன்னக்குடா வீதி, பழைய சந்தை, செங்கலடி நவீன சந்தை அபிவிருத்தி என்பன பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. நகரப் பகுதிகளில் குப்பை கூளங்கள் கொட்டப்படுவதை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

ஒரு மாத காலத்துக்கு முன்னர் அமைச்சர் ஹக்கீமின் பணிப்புரைக்கமைய சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று அபிவிருத்தி செய்யக்கூடிய இடங்களை அடையாளம் கண்டு, உரிய வரைபடங்களை தயாரித்து, உத்தேச செலவு பற்றிய மதிப்பீடுகளை மேற்கொண்டு அவை பற்றிய தெளிவான விளக்கமொன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

இதில் நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆகியவற்றின் உயரதிகாரிகளும் பங்குபற்றினர். அவர்களுடன் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் பீ.சுரேஸ், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.எச்.எம்.சல்மான், பொது முகாமையானர் ஸ்ரீமதி சேனாதீர, நகர அபிவிருத்தி அதிகார சபையின் செயலாற்றுப் பணிப்பாளர் கிஷான் கருணாரத்ன, மேலதிகப் பணிப்பாளர் நாயகம் சமந்த ஜயசுந்தர, செயல்திட்ட பணிப்பாளர் மஹிந்த வித்தானச்சி, சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.தாம்புகல, அமைச்சரின் இணைப்புச் செயலாளர்களான யூ.எல்.எம்.முபீன், ரஹ்மத் மன்சூர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-10)

# மாணவரைக் கல்வியில் ஊக்குவிக்கும் திட்டம்

### முல்லைத்தீவில் ஆரம்பம்



முல்லைத்தீவு, மே 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமையோடு கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பாடசாலை மாணவர் இடைவிலகலை முற்றாக நீக்கும் நோக்கோடும் பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் 'சாதிக்கும் சந்ததி' என்னும் தொனிப்பொருளோடு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த ஆண்டு மே 17 அன்று முள்ளிவாய்க்கால் மண்ணில் ஆரம்பித்திருந்த 'சாதிக்கும் சந்ததி' செயற்திட்டமானது, புலம்பெயர் தமிழ் மக்களின் பங்களிப்போடு இன்றுவரை பதினொரு கட்டங்களைக் கடந்துள்ளது.

இந்தச் 'சாதிக்கும் சந்ததி' செயற் திட்டம் இம்முறை 70 மாணவர்களை உள்ளடக்கியதாக மூன்று நாள்களில் ஆறு பாடசாலைகளைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பத்து கட்டங்கள் ஊடாக 703 மாணவர்கள் உள்வாங்கப்பட்ட நிலையில் கடந்த வாரம் நிகழ்ந்த பதினோராவது கட்டத்தின் மூலம் மேலதிகமாக 70 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான உதவிகளை புலம் பெயர் தமிழர்களான இலண்டனில் வசிக்கும் சுந்தரவதன் மகாலிங்கம், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் செந்தூரன் சோதிலிங்கம், செட்சுமணன் இளங்குமரன், கரிகரன் விக்னாகரன், சைலி சிதம்பரகுமரன் மற்றும் குபேரன் கணேசராசா ஆகியோரும், கனடாவில் வசிக்கும் யோகரட்ணம் ஜெகதீஸ் மற்றும் யோகரட்ணம் ஜெகாந்த் ஆகியோரும் வழங்கியுள்ளனர்.

அத்தோடு மாணவர்களின் வாழ்[illegible]தாரக் கட்டமைப்புகளைப் பலப்ப[illegible]தும் நோக்கில் 'வாழ்வோம் – வ[illegible] பெறுவோம்' செயற்திட்டமும், பா[illegible]சாலைகளில் உள்ள நூலகங்க[illegible] நிரப்பும் வகையில் 'கல்விச்செழு[illegible]' என்ற செயற்திட்டமும், ஆரம்பி[illegible]பட்ட நிலையில் மூன்றாவது செ[illegible]திட்டமாக வறுமையோடு கல்வி[illegible] தொடரும் பாடசாலை மாண[illegible]களுக்கான ஊக்குவிப்புச் செ[illegible] திட்டமாக 'சாதிக்கும் சந்ததி' [illegible]னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பி[illegible]தக்கது. (த-[illegible])

# வடமாகாண கரப்பந்தாட்டம்

## கோப்பாய் ம.வி., மகாஜனா, சோமஸ்கந்தா அபாரம்







வடமாகாண பாடசாலைளிற்கிடையிலான ஆண்களிற்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15வயதுப்பிரிவில் கோப்பாய் மகா வித்தியாலயமும் 17 வயதுப்பிரிவில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும் 19 வயதுப் பிரிவில் சோமஸ்கந்தா கல்லூரியும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

*15வயதுப்பிரிவு*

15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலயத்தை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி மோதியது. முதற் செற்றில் 25:23 என்ற அடிப்படையில் கோப்பாய் மகா வித்தியாலய அணி பெற இரண்டாவது செற்றில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி 25:23 என்ற அடிப்படையில் பழி தீர்த்தது. ஆட்டத்தின் முடிவை தீர்மானிக்கப்போகும் செற்றாக மூன்றாவது செற் அமைய ஆட்டத் தின் விறுவிறுப்புத் தன்மை இரட்டிப்பானது. இருந்த போதிலும் கோப்பாய் மகா வித்தியாலய அணி சற்றுப்பலமான ஆதிக்கம் செலுத்தி 25:18 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் ம்ன்னார் புத்தளம் நிசாத்பதியுதீன் மகா வித்தியாலயத்தை எதிர்த்து முல்லைத்தீவு தண்ணீரூற்று முஸ்லீம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் மன்னார் புத்தளம் நிசாத் பதியுதீன் மகா வித்தியாலய அணியினர் 25:18, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றனர்.

*17வயதுப் பிரிவு*

17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் புத்தூர் ஶ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி மோதியது. முதல் செற்றில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி 27:25 என்ற அடிப்படையில் போராடி வெற்றி பெற்றது. இரண்டாம் செற்றில் வீறு கொண்ட புத்தூர் ஶ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியினர் 25:16 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று இலகுவாக பழிதீர்க்க 15வயதுப்பிரிவினருக்கான ஆட்டத்தைப் போல 17வயதுப்பிரிவினருக்கான ஆட்டத்தின் முடிவும் மூன்றாம் சுற்றிலேயே நிச்சயிக்கப்பட்டது. ஆட்டத்தில் அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி 25:15 என்ற அடிப்படையில் இலகுவாக வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தை எதிர்த்து கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை அணி மோதியது. இதில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய அணி 25:21, 25:08 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

*19வயதுப் பிரிவு*

19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் புத்தூர் ஶ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து ஶ்ரீ சுமண மகா வித்தியாலய அணி மோதியது. ஆரம்பமே பெரும் போராட்டமாக அமைய ஒருவாறு தட்டித் தடுமாறி ஶ்ரீ சுமணா மகா வித்தியாலயம் 27:25 என்ற அடிப்




படையில் முதல் செற்றைக் கைப்பற்றியது. பழிதீர்க்கத் தவற வில்லை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி. 25:16 என்ற அடிப்படையில் இரண்டாவது செற் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிடம் செல்ல கிண்ணத்தின் தீர்மானம் மூன்றாவது தஞ்சமானது. எந்த அணி வெற்றிபெறும் என்ற எதிர்வுகூறல் இயலாது ஆட்டம் சென்று கொண்டிருந்தது. 25புள்ளிகளில் முடிவடைய வேண்டிய செற். இரு அணிகளினதும் சம ஆதிக்கத்தால் இழுத்தடித்துக்கொண்டே சென்றது. முடிவில் 35:33 என்ற அடிப்படை யில் சோமஸ்கந்தா வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு சம்பத்நுவர மகா வித்தியாலய அணி மோதியது இதில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி 25:21, 25:22 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.ஆதவன், வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-422)

# உடுவில் பிரதேச சம்பியனானது குப்பிளான் ஞானகலா வி.க.



வலி வடக்கு, மே 29

உடுவில் பிரதேச உதைபந்தாட்டத் தொடரில் பலத்த போராட்டத்தின் பின்னர் குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம் தண்டனை உதை மூலம் வெற்றிபெற்று பிரதேச சம்பியனாகியது.

கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஆட்டம் நிறைவடையும் வரை கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. எனவே வெற்றிதோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளை சிறப்பாகப் பயன்படுத்திய ஞானகலா விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச சம்பியனானது.

(ரி-86)

# பல்கலையிடம் வீழ்ந்தது யூனியன்

யாழ்ப்பாணம், மே 29

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையும் யாழ். பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து நடத்தும் ஹொக்கித் தொடரின் ஆட்டங்கள் யாழ் பல்கலைகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

# நீலங்களின் போர் இன்று ஆரம்பம்



நீலங்களின் போர் என்று வர்ணிக்கப்படும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலங்களுக்கிடையிலான இரண்டு நாட்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதுவரை நடைபெற்ற 5 ஆட்டங்களில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் இரண்டு தடவையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஒரு தடவையும் சம்பியனாகியுள்ளன. இந்த நிலையில் இன்று ஆரம்பமாகும் நடப்பு வருடத்துக்கான தொடரில் வெற்றிபெற்று தமது ஆதிக்கத்தை 3:1 என்ற அடிப்படையில் அதிகரிக்க வேண்டும் என்ற நிலையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயமும் கடந்த வருடத்தில் ஏற்பட்ட தோல்விக்கு பழி தீர்த்து தொடரை 2:2 என்ற அடிப்படையில் சமப்படுத்த வேண்டும் என்ற நிலையில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியும் முனைப்பாக உள்ளன. மொத்தத்தில் ஆட்டம் அனல் பறக்கப்போகிறது.

(ரி-21)

# இன்றைய மோதல்கள்

## யங்கம்பன்ஸ் வி.க.தொடர்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் முதல் எட்டு அணிகளுக்குமான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் மின்ஒளியில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக் கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

*வளர்மதி வி.க.தொடர்*

யாழ் உதை பந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*புனித தோமையார் வி.க.தொடர்*

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

*யாழ். பல்கலைக்கழகத் தொடர்*

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையும் யாழ். பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து நடத்தும் ஹொக்கித் தொடரின் ஆட்டங்கள் யாழ். பல்கலைகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று வெள்ளிக் கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் மாலை 4 மணிக்கு ஓல் கோல்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

# சிக்கும்புரா சிறந்த வீரர்



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இன்னிங்ஸில் சதம் கடந்தமைக்காக சிம்பாப்வே அணித் தலைவர் சிக்கும்புராவுக்கு மிக அண்மையில் ஓய்வினை அறிவித்த சிம்பாப்வே நட்சத்திர வீரர் ரெய்லர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

சிக்கும்புராவின் சதம் தொடர்பாக ரெய்லர் தெரிவித்ததாவது சிக்கும்புராவின் சகலதுறை ஆற்றல் வியக்க வைக்கிறது. பலம்மிக்க அணிகளில் ஒன்றான பாகிஸ்தானுக்கு எதிராக பழக்கமே இல்லாத பாகிஸ்தான் மண்ணில் வைத்து ஓட்டங்களைக் குவிப்பது மட்டுமல்லாமல் இலக்குகளையும் கைப்பற்றுகிறார். மொத்தத்தில் உலகின் சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவராக திகழ்கின்றார். தலைமையின் சுமைகளைத் தாங்கியவாறு சகதுறைகளிலு ஜொலித்து சதம் கடப்பது இலகுவான காரியம் அல்ல. சிக்கும்புரா மட்டுமல்ல ஒட்டு மொத்த சிம்பாப்வே அணியும் சிறப்பாகச் செயல்படுகிறது. பாகிஸ்தானுக்கு எதிரான ரி–20 ஆட்டங்களிலும் சரி ஒருநாள் ஆட்டத்திலும் சரி ஓர் ஆட்டத்திலேனும் சிம் பாப்வே மோசமாகத் தோற்கவில்லை. மிகப் பெரும் சவாலை கொடுத்து போராடித் தோற்றுள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த சிம்பாப்வே வேறு இப்போதிருக்கும் சிம்பாப்வே வேறு. சிம்பாப்வேயால் பலமான அணியொன்று தோற்கடிக்கப்படும் காலம் தொலைவில் இல்லை என்றார். (ரி)

# லாராவுக்காக புறக்கணிக்கப்பட்ட சிப்னாரின் சந்திரப்போல்



மேற்கிந்தியத் தீவுகளின் மூத்த வீரராக திகழ்ந்து வந்த சிப்னாரின் சந்திரப்போல் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் சில சதிச்செயல்கள் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் அணி அறிவிக்கப்பட்டது. இதில் சிப்னாரின் சந்திரப்போல் பெயர் இடம்பெறவில்லை. 41 வயதை நெருங்கும் சிப்னாரின் சந்திரப்போல் 164 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 11 ஆயிரத்து 867 ஓட்டங்களைக் குவித்துள்ளார். கடந்த 21 ஆண்டு களாக கிரிக்கெட் விளையாடி வரும் இவர், கிரிக்கெட் ஜாம்பவான் லாராவின் ஓட்டங்களை எட்டுவதற்கு இன்னும் 87 ஓட்டங்கள்தான் தேவைப்படுகிறது. இதை தடுப்பதற் காகவே அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டதாக தெரிவிககப்படு கிறது.

இந்தத் தகவலை தீவுகளின் பயிற்சியாளர் பில் சிம்மொன்ஸ் மறுத்துள்ளார். சந்திரப்போல் நீக்கம் தொடர்பாக சிம்மொன்ஸ் தெரிவித்ததாவது:–

தீவுகளுக்காக சந்திரப்போல் சிறந்த முறையில் செயல்பட்டார் என்பதை நாங்கள் அறிவோம். அதே நேரத்தில் தேர்வாளர்களாக இருந்து பார்க்கும்போது சவால் மிகுந்த ஆஸ்திரேலியாவிற்கு எதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட தொடரில் வெற்றிபெற வேண்டும். இந்த கோணத்தில் தெரிவு செய்யும் போது அவர் முழு உடல்தகுதியுடன் இல்லை. சந்திரப்போலின் சாதனையைப்பார்த்து தீவுகளின் தோல்வியை ஏற்க இயலாது என்றார். சந்திரப்போல் இல்லாத மேற்கிந்தியத்தீவுகள் அணிஆஸ்திரேலியாவை ஆதிக்கம் செலுத்துமா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மேற்கிந்தியத் தீவுகள் – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் ஜுன் 3ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ரி)

# இது ஐ.பி.எல். தொடரின் சிறப்பு

மேற்கிந்திய தீவுகளின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தனது திருமணத்திற்கு தன்னை அழைத்துள்ளதாக இந்தியாவின் மிக இளம்வீரரான சர்பராஸ்கான் தெரிவித்துள்ளார்.



ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடிய 17 வயதுடைய இளம் வீரர் சர்பராஸ் கான் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 21 பந்தில் 45 ஓட்டங்கள் அடித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். மேலும், அதே அணியில் விளையாடி வந்த மேற்கிந்திய தீவுகளின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ்கெய்லுக்கு நண்பராகவும் மாறியுள்ளார்.

கெயிலின் நட்பு தொடர்பாக சர்பராஸ் கான் தெரிவித்ததாவது நானும் கெய்லும் சிறந்த நண்பர்கள். எனது உணவின் மீது அவர் அக்கறை எடுத்துக் கொள்வார். ஜமைக்காவில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் தனது திருமணத்திற்கு வரும்படி கெய்ல் என்னை அழைத்தார். ஆனால், ஜமைக்கா செல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை என்றார். ஐ.பி.எல். தொடரின் மூலம் இளம் வீரர்களுக்கும் மூத்த வீரர்களுக்கும் இடையில் நட்புறவு ஏற்படுகிறது என்பதுக்கு கெய்ல்– சர்பிராஸ் நட்பு எடுத்துக் காட்டாக மாறியுள்ளது. (ரி)

# திடீர் பல்டி

இலங்கை கிரிக்கெட் வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடருவதற்கு ஆதாரம் இல்லை என்று கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை அப்படியேபல்டிஅடித்துள்ளது. இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் பாலியல் லஞ்சம் பெறப்படுவதாக கடந்த வருடம் குற்றச் சாட்டு எழுந்தது. இதனை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைப் படி, 3 அதிகாரிகள் வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை யடுத்து அவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்படும் என்றும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்திருந்தது. ஆனால் தற்பொழுது அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய ஆதாரம் இல்லை என்ற விதமாக கட்டுப் பாட்டுச்சபை தனது நிலைப் பாட்டை மாற்றியுள்ளது.

# நியூஸி. இங்கிலாந்து இரண்டாவது டெஸ்ட் இன்று



இங்கிலாந்து நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று இங்கிலாந்தின் லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

லோட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் ஆட்டத்தின் நான்காவது நாள்வரை நியூஸிலாந்து வெற்றி பெறும் என்ற நிலைமையே நீடித்தது. முதல் இன்னிங்ஸின் கூடுதல் ஓட்டங்களும் பலம்கொடுக்க வெறும் 345 ஓட்டங்களை மட்டுமே வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய நியூஸிலாந்தின் தொடக்க வீரர்கள் இருவரும் எந்த வித ஓட்டங்களையும் பெறாது பவிலியன் திரும்ப நியூஸியின் வெற்றிக் கனவு கலைந்தது.

இந்த நிலையில் முதலாவது டெஸ்ட்டில் அடைந்த தோல்விக்கு பதிலாக இரண்டாவது டெஸ்டில் வென்று தொடரில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நியூஸிலாந்தும் சொந்தத் தொடரினைக் கைப்பற்றி உலகக்கிண்ண தோ[illegible] யால் துவண்டிருக்கும் ரசிகர்களுக்கு ஆறுதல் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இங்கிலாந்தும் களமிறங்குகின்றன. [illegible]ட்டம் இலங்கை நேரப்படி மா[illegible] மணிக்கு ஆரம்பமாகும்.

# ரியல் மாட்ரிட் பயிற்சியாளர் திடீர் நீக்கம்



ஸ்பெயின் கால்பந்து கழக அணிகளுள் சிறந்த அணியாக திகழ்ந்த ரியல் மாட்ரிட் அணியின் பயிற்சியாளராக இருந்த கார்லோ ஆன்செலோட்டி மாட்ரிட் நிர்வாகத்தினால் நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ரியல் மாட்ரிட் அணி ஐரோப்பிய கிண்ணத்தை வென்றதில் முக்கிய பங்கு வகித்த ஆன்செலோட்டியால் நடப்பு வருடத்தில் பெரியளவில் வெற்றி தேடித்தர முடியவில்லை. இந்த ஆண்டு நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்து தொடரின் அரையிறுதியில் ஜுவன்டெஸ் அணியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்த ரியல் மாட்ரிட், ஸ்பெயினின் பிரசித்தி பெற்ற கால்பந்து தொடரான லா லிகா தொடரில் 2ஆவது இடத்தையே பிடித்தது. அதன் எதிரொலியாகவே இப்போது ஆன்செலோட்டி அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். (ரி)

# ஆஸியில் ஆதிக்கம் செலுத்திய ஹோக்லி



முப்பது வயதுக்கு உட்பட்ட வீரர்களில் சிறந்த வீரர் யார் என்று ஆஸ்திரேலியா இணையத்தளம் நடத்திய கருத்துக் கணிப்பில் ஆஸ்திரேலிய இளம் வீரரான சிமித் முதலிடம் பிடித்துள்ளார்.

[illegible] ஹோக்லி, ஹோல்டர், [illegible]லியம்சன், மத்தியூஸ், [illegible]ட், ரஹானே, வோர்ணர், சந்திமால், மில்னே என்று பல வீரர்களை வைத்து நடத்திய இந்த வாக்கெடுப்பில் மக்கள் சிமித்துக்கு 40 சதவீத வாக்குகளை பதிவு செய்துள்ளனர். இந்திய டெஸ்ட் அணித்தலைவர் விராட் ஹோக்லி 36 சதவீத வாக்குகளுடன் இடண்டாம் இடம் பிடித்துள்ளார். இவர்களுக்கு அடுத்த படியாக ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் 9 சதவீத வாக்குகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார். நியூஸிலாந்தின் கேன் வில்லியம்சன், இலங்கையின் மத்தியூஸ், இங்கிலாந்தின் ஜோ ரூட் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றனர்.

ஆஸ்திரேலியர்களிடத்தில் நடத்திய வாக்கெடுப்பில் இந்திய வீரர் ஹோக்லி 36 வீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். இதுவே இந்தியாவிலோ அல்லது வேறு நாடுகளிலோ வாக்கெடுப்பை நடத்தியிருந்தால் ஹோக்லி முதலிடம் பிடித்திருப்பார் என்று சில இந்திய ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பகிர ஆரம்பித்துள்ளனர். (ரி)

# ஆனந்தின் தாயார் சாவு

பிரபல செஸ் சம்பியன் விஸ்வனாதன் ஆனந்தின் தாயார் நேற்று சாவடைந்துள்ளார்.

செஸ் உலகின் முடிசூடா மன்னாக திகழ்ந்தவர் விஸ்வனாதன் ஆனந். எவராலும் எளிதில் வீழ்த்தி விட முடியாத ஆனந் சமீபகாலமாக தொடர்ந்து தடுமாற்றமடைந்தது டன் கார்ல்சன் போன்ற அனுபவமற்ற வீரர்களின் ஆட்டத்திலேயே ஆட்டம் கண்டார். தனது தடுமாற்றத்துக்கு தனது தாயாரின் உடல்நலக் குறைபாடே காரணம் என்றும் அவரின் உடல்பலவீனம்அடைந்துள்ளதால் தனது கவனம் சிதறடிக்கப்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ஆனந்தின் தாயார் ஸ்ரீமதி சுசீலா நேற்று சாவடைந்துள்ளார்.

தயாரின் இழப்பையடுத்து பிரதமர் மோடி, தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா உட்படி பலரும் தமது இரங்கல்களை ஆனந்துக்கு தெரிவித்து வருகின்றனர். (ரி)

# காலிறுதியில் சாய்னா



ஆஸ்திரேலிய பூப்பந்துத் தொடர் தற்பொழுது சிட்னியில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் இந்தியாவைச் சேர்ந்த சாய்னா நேவால் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சாய்னா எதிர் சுன் யூ மோதிய இரண்டாவது சுற்றின் முதல் செட்டை சாய்னா 21–19 என்ற அடிப்படையில் கைப்பற்றினார். 2ஆவது செட்டில் சுதாரித்துக் கொண்டு விளையாடிய சீன வீராங்கனை சுன் யூ 21–19 என்ற அடிப்படையில் பழிதீர்த்தார். இதனால் வெற்றியை நிர்ணயிக்கும் 3ஆவது சுற்றில் இருவரும் போட்டி போட்டு விளையாடினார்கள். ஆனால் சாய்னாவின் அதிரடிக்கு சுன் யூ–இனால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால்சாய்னா மூன்றாவது செட்டை 21–14 என்ற அடிப்படையில் எளிதில் வென்று 2–1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறு திக்கு முன்னேறியுள்ளார். (ரி)

## சிறந்த வீரராக மீண்டும் கிறிஸ்ரியானோ றொனால்டோ?



சிறந்த கால்பந்து வீரருக்கு வழங்கப்படும் தங்கக்காலணி விருது இந்த வருடமும் போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மார்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான றொனால்டோவுக்கு வழங்கப்படவே அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிகிறது.

ஐரோப்பிய கால்பந்து தொடர்கள், லா லிகா தொடர் என்று அனைத்திலும் சகவீரர்களைவிட றொனால்டோ முன்னிலையில் உள்ளார். அண்மையில் முடிவடைந்த லா லிகா தொடரையும் சேர்த்து நடப்பு வருடத்தில் அதிக கோல்களை அடித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் றொனால்டோவும் இரண்டாம் இடத்தில் மெஸ்ஸியும் மூன்றாம் இடத்தில் நெய்மரும் உள்ளனர். அது மட்டுமல்லாது அதிக ஹற்றிக் கோல்களை அடித்தவர்கள் வரிசையிலும் றொனால்டோவே முதலிடத்தில் உள்ளார். மிகவும் குறைந்த நிமிடங்களில் தொடர் கோல்களை அடித்தவராகவும் றொனால்டோவே முதலிடத்தில் உள்ளார். மைதானத்தில் எதிர் வீரருக்கோ அல்லது நடுவருக்கோ சங்கடம் ஏற்படும் வகையில் றொனால்டோ நடந்துகொள்ளவில்லை. எனவே இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கின்ற பொழுது சிறந்த உதைபந்தாட்ட வீரருக்காக வழங்கப்படும் தங்கக் காலணி விருது மீண்டும் றொனால்டோவுக்கே வழங்கப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி)

# சறுக்கினார் சங்கா



இங்கிலாந்தின் கழக அணிகளுள் ஒன்றான சர்ரே அணிக்காக விளையாடி வரும் சங்கா நேற்று முன்தினம் நிறைவடைந்த கென்ற் கழகத்துக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டு இன்னிங்ஸிலுமாக சேர்த்து 18 ஓட்டங்களை மட்டுமே எடுத்து சொதப்பியுள்ளார்.

சர்ரே கென்ற் அணிகளுக்கிடையிலான நான்கு நாட்களைக் கொண்ட டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது. இந்த ஆட்டத்தில் சங்கா விளையாடும் சர்ரே அணி வெற்றிபெற்றாலும் சங்காவின் இரண்டு இன்னிங்ஸும் சொதப்பலாகவே அமைந்துள்ளது. முதல் இன்னிங்ஸில் 10 ஓட்டங்களை மட்டுமே எடுத்த சங்கா இரண்டாவது இன்னிங்ஸில் 8 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் பவிலியன் திரும்பினார். இதனால் 195 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சர்ரே 7 இலக்குகளை இழந்தே இந்த வெற்றியை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. சர்ரே அணி தனது மற்றொரு ஆட்டத்தில் இன்று மீண்டும் கென்ற் அணியை எதிர்கொள்ளுகிறது. (ரி)

## சாவைத் தேடிச் செல்லுமா இலங்கைக் கிரிக்கெட்




இடைக்கால கமிட்டியின் தலைவரான சித்தார்த் வெட்டிமுனி லாகூர் நகரத்துக்கு சென்றிருந்தார்.அப்போழுது வெட்டிமுனியுடன் தான் பேசியதாகவும், அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் வந்து விளையாட வாய்ப்பிருப்பதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ரி)

இலங்கை அணி அடுத்த வருடம் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்ய வாய்ப்பிருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தான் சென்ற போது தீவிரவாதிகளின் தாக்குதலில் சிக்கியது. இந்தத்தாக்குதலில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து சர்வதேச அணிகள் பாகிஸ்தானுக்கு செல்வதை நிறுத்தி வைத்திருந்தன. இந்த நிலையில் 6 வருடங்களுக்கு பிறகு சிம்பாப்வே அணி சமீபத்தில் பாகிஸ்தான் சென்று விளையாடி வருகிறது. பாகிஸ்தான் சென்றுள்ள சிம்பாப்பே வீரர்களுக்கு ஒரு வீரருக்கு 300 பொலிஸ் உத்தியோகத்தர் என்ற அடிப்படையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிம்பாப்வே– பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் ஆட்டத்தைப் பார்க்க இலங்கை கிரிக்கெட்

தென் இந்திய திருத்தல யாத்திரை

ஆரம்பம்: 20.06.2015 நாள்கள்: 16

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய 5 மாநிலங்களுடான 60 இற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

மேலும் யாத்திரை சென்று திரும்பும்வரை நாங்களும் கூடவே வருவோம், சகல ஆலயங்களுக்கும் உடனே அழைத்துச்சென்று அழைத்துவருவோம். சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

பெற்றுக்கொண்ட கூபானிற்கு எமது சேவை

இருவழிவிமானரிக்கற், எயார்போட்போக வாகன வசதி, மூன்றுவேளை உயர்தர சைவ உணவு, நாளொன்றுக்கு ஒரு லீற்றர் மினரல் வோட்டர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெந்நீருடன் இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள், யாத்திரை முடியும்வரை A/C வாகன வசதி, சகல ஆலய நுழைவுக் கட்டணங்கள் உட்பட எமது பொறுப்பு.

மேலும் எமது தனிப்பட்ட சேவையாக ஆலயங்களில் குறூப்பாக, எடுக்கும் 60 புகைப்படங்களும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

கலாநிதி ஸ்ரீரங்கநாதன் 077 768 0102

S. சுப்பிரமணியம் (அதிபர், சாவகச்சேரி)

தொடர்பு:- 077 615 5930

HND கல்வியினை

அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

BTEC edexcel HND

in Computing & System Development

in Business Management

Registrations open for June Intakes

நன்மைகள்

Diploma in English

25% Discount

புதிய பிரிவுகள் 14.06.2015 9:00am

Your Career Pathway

HND 18 Months | Top-up Degree 1 Year | Masters 1 Year

ESOFT Shaping Lives, Creating Futures

ESOFT METRO CAMPUS

Sri Lanka's Largest IT Education Network

ESOFT METRO CAMPUS - JAFFNA

No.137, K.K.S Road, Jaffna

Tel: 021 222 4142 | 077 309 9 308

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 30-05-2015

Batch 2 : 01-06-2015

Batch 3 : 03-06-2015

Batch 4 : 06-06-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
0777585913, 0777222422, 071429935

கிழமை நாளுக்கான மாலை வகுப்புகள் 2.30 - 5.00 மணி வரை புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது

அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 30/05/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.